ஜயந்தி சிந்தனைகள்

வை. மு. ஸ்ரீ.

48 படங்களுடன். ரூ. 1-8-0.

126

848

1
ஆவணி
ராகிணி
கிருஷ்ண
ஜயந்தி

2
த்திரை
னர்வசு
ீ ராம
ஜயந்தி,

3
ரட்டாசி
வோணம்
நிவாஸ
ஜயந்தி



126
4-55

O2:43
N55
111708

ராம பக்திச் சிகரம்

ஜயந்தி சிந்தனைகள்

★

ஒப்பிலா நாட்கள் நான்கு

★

ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி
ஸ்ரீ ராம ஜயந்தி
ஸ்ரீ நிவாஸ ஜயந்தி
ஸ்ரீ தேவி ஜயந்தி

★

வை. மு. ஸ்ரீநிவாஸன், M. A., B. L.,
(அட்வகேட்)
அவர்களின் 8-வது வெளியீடு.

★

48 படங்களுடன்

★

ஜகன்மோகினி காரியாலயம்,
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

1955 ரூ. 1-8.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1955
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1955
MADRAS

வை. மு. ஸ்ரீ. வெளியீடுகள்.

?:43
N55

		ரூ-அ
1.	உதய சூரியன்.	1 4
2.	மதமா? மனமா?	1 4
3.	அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி.	1 8
4.	ராணி சீலாவதி.	1 0
5.	பெண்மணிக் கனவு.	1 0
6.	இருளில் ஒளி.	1 4
7.	தியாக பலி.	0 12
8.	ஜயந்தி சிந்தனைகள்.	1 8
9.	ஸ்ரீ கோதாஹ்ருதயம்.	0 12
10.	ஒப்பிலா நாடகங்கள்.	அச்சில்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111708
EGMORE, MADRAS

நன்றி

இப்புத்தகத்தை அலங்கரிக்கும் பின்வரும் படங்களின் ப்ளாக்குகளை உதவிய பக்தன் காரியாலயத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்:—

1. மன்னார்குடி ராஜமன்னார்
2. உடுப்பி கிருஷ்ணன்
3. திருவேங்கடமுடையான்
4. ஸ்வாமி புஷ்கரணி
5. திருமலை—கோபுரதரிசனம்
6. திருக்கல்யாண மஹோத்ஸவம்
7. ஸ்ரீ வேதவல்லித் தாயார்.

மீதி படங்கள் யாவும் ஜகன்மோகினி சைத்ரிகர்கள் ஸ்ரீராகவன், ஸாமுவேல், குஞ்சரன், வஸந்த் முதலியோர் பல்வேறு சமயங்களில் விசேஷ மலர்களுக்காக எழுதியவை. மொத்தம் 48 படங்கள் இந்நூலை அலங்கரிக்கின்றன. இவை பக்தர்களுக்குப் பெருவிருந்தாகுமென நம்புகிறேன்.

— வை. மு. ஸ்ரீ.

❀

பொருளடக்கம்

ஒப்பிலா நாள்—1.

ஆவணி ரோஹிணி.

ஸ்ரீஜயந்தி சிந்தனைகள்.

	பக்கம்
முன்னுரை	1
ஆழ்வார்கள் அருளிச்செயலில் கண்ணன்	2
பழந்தமிழ் நூல்களில் கண்ணபிரான்	8
முகுந்த மாலை	9
கீதகோவிந்தம்	10
க்ருஷ்ணகர்ணாம்ருதம்	,,
கோபிகாகீதம்	11
ஸஹஸ்ரநாமம்	,,
கீதா சாஸ்திரம்	,,
முடிவுரை	12
ஸ்ரீ கிருஷ்ணாம்ருதம்—ஓவியமலர்மாலை	13
ஷை சித்திரவிளக்கம்	29
தக்ஷிணத்வாரகை ராஜமன்னார் (படம்)	36A
உடுப்பி கிருஷ்ணன் (,,)	36B.

ஒப்பிலா நாள்—2.

சித்திரையில் புனர்வசு.

ஸ்ரீராமநவமி சிந்தனைகள்.

முன்னுரை	37
ராமாயண த்ரிவேணி	38
ஆழ்வார்கள் உகந்து அனுபவித்த இராமன்	41
அபூர்வராமாயண ஸாரஸங்க்ரகம்	44
ஓவிய அனுபந்தம்-ஸௌசீல்யம்	44a-d
ராம நாடகக் கீர்த்தனைகள்	52
தியாகராஜ கீர்த்தனாம்ருதம்—ஓவியமலர்மாலை	53
ஷை சித்திரவிளக்கம்	69

சமர்ப்பணம்

"எல்லாம் நல்லதற்கே!", "அவனியில் யாவும் அவனாலே" என்ற பழமொழிகளின் உண்மையை நம் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் ப்ரத்யக்ஷமாகக் கண்டு உணர்கின்றோம். "ஜயந்தி சிந்தனைகள்" என்ற இச்சிறு நூலின் சரித்திரத்திலும் ஷை மொழிகள் ப்ரத்யக்ஷ ஸித்த மானதை வாசகர்க்கு விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

சென்ற வருடம் ஆடி மாதத்தில் பக்தன் ஆசிரியர் ஸ்ரீ M. O. அழகியசிங்கராசாரி, B. Sc., B. L., பக்தன் ஆவணி இதழைக் குறித்துத் திட்டமிடும் விஷயமாக என்னுடன் கலந்தாலோசித்த போது, "கப்யாஸ ச்ருதி சர்ச்சைக்கு அதிகப்படியான பக்கங்கள் ஒதுக்க வேண்டுமே!" என்றபோது, "பகவானுக்குப் புண்டரீகாக்ஷத்வத்தையே பரத்வ சின்னமாக ஆசார்யர்கள் நிர்வஹித்திருப்பதால் நாளது ஆவணி இதழைச் செந்தாமரைக் கண்ணனின் ஜயந்தி மலராக விசேஷ ஓவிய அணியுடன் வெளியிட்டு மகிழலாமே!" என்றேன். "எல்லாம் நல்லதற்கே! இதுவே அவன் திருவுள்ளம் போலும்!" என்ற முடிவுக்கு வந்தோம்.

பக்தன் ஸ்ரீ ஜயந்தி மலர் வெளியாகி, ரஸிகர்களின் பெருமதிப்புக்கு இலக்காகியது. அம்மலரில் 16 ஓவியங்களை ஒரு ஓவிய மலர் மாலையாகத் தொடுத்து ஒரு விளக்கம் வெளியிட்டேன். கண்ணபிரான் அத்துடன் த்ருப்தி பெறவில்லை. ஜகன்மோகினி ஆவணி இதழில் "ஸ்ரீ ஜயந்தி சிந்தனைகள்" என்ற வியாசத்தையும் காணிக்கையாகப் பெற்றுக்கொண்டான்.

விபவத்திலிருந்து அர்ச்சைக்குத்தாவிய சிந்தனை புரட்டாசித் திருவோணத்தன்று திருவேங்கடமுடையானை அனுபவித்தது; ப்ரத்யக்ஷதெய்வம் ஸ்ரீநிவாஸன்தான் என்பதை அறிவுறுத்தியது.

பகவானுக்கும் பெருமையளிப்பது பிராட்டியின்வைபவந்தான் என்ற சிந்தனை பங்குனி உத்தரத்தன்று எழுந்தது ஸஹஜந்தானே.

சித்திரை பிறந்ததும் சிந்தனை ஸ்ரீராம ஜயந்திக் கொண்டாட்டத்தில் இறங்கியதில் வியப்பேது?

ஒப்பிலா நாட்கள் நான்கு என்ற தலைப்பில் ஜயந்தி சிந்தனைகள் என்ற இச்சிறு நூல் திவ்ய தம்பதிகளின் திருவடித்தாமரைகளில் ஸமர்ப்பிக்கப்பட்டு, பக்தர்களைக் களிப்பிக்க வெளியிடப்படுகிறது. இதனில் குறைகளிருப்பின் அவை அல்பஜ்ஞனான அடியேனையே சேர்ந்தவை; குணமிருப்பின் ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமியையும் இதர வியாக்யான கர்த்தாக்களையும் சார்ந்தது.

இத்தொடரில் "ஸ்ரீகோதா ஹ்ருதயம்" அல்லது "ஸ்ரீக்ருஷ்ண ப்ரேமா" என்ற நூலும், "ஒப்பிலா நாட்கள்" அல்லது "ஆழ்வார்கள் அவதாரதின சிந்தனைகள்" என்ற நூலும் முறையே வெளியிடப்படும்.

அருளிச்செயல் அமுதக்கடலை அடிப்படையாக வைத்து, இதர நூல்களிலிருந்தும் ஸாரமான தொகுப்புகளுடனும் ஓவிய அணியுடனும் இச்சொல்லோவியங்கள் உருவாகியுள்ளன. யாவும் அவனது இன்னருளே! 23—5—'55. — வை. மு. ஸ்ரீ.

ஒப்பிலா நாள்—3.

புரட்டாசித் திருவோணம்,

ஸ்ரீநிவாஸ ஜயந்தி சிந்தனைகள்.

		பக்கம்
ப்ரத்யக்ஷதெய்வம் திருவேங்கடமுடையான்.	(படம்)	72A
ஸ்வாமி புஷ்கரணி, மந்திபாயும் வடவேங்கடம்.	”	72B.
திருவேங்கடக்கலம்பகம்		73
ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்திரம்		74
அருளிச்செயல் அமுதக்கடலில் ஸ்ரீநிவாஸன்		76
ப்ரத்யக்ஷதெய்வம்—முடிவுரை		82

[‘திருப்பதி யாத்திரை’—‘வாழ்வு பெற்றபயன்’ என்ற தலைப்பில் ‘அவஸரமூர்த்தியின் அபூர்வடயரி’யில் **60 பக்கங்கள்** எழுதியிருப்பதைப் படித்து மகிழவும்.]

ஒப்பிலா நாள்—4.

பங்குனி உத்தரம்.

ஸ்ரீதேவி ஜயந்தி சிந்தனைகள்.

திருக்கல்யாண மஹோத்ஸவம்	(படம்)	84A
ஸ்ரீவேதவல்லித்தாயார்	”	84B.
முன்னுரை		85
ப்ருந்தாரண்ய நிவாஸினி		”
ஸ்ரீஸூக்தம்		86
ஸ்ரீ விஷ்ணுபுராண ஸ்ரீஸ்துதி		87
மஹாலக்ஷ்ம்யஷ்டகஸ்தவம்		88
லக்ஷ்மி அஷ்டோத்தர சதம்		”
சதுச்ச்லோகி		89
சரணாகதி கத்யம்		”
ஸ்ரீஸ்தவம்		90
ஸ்ரீ குணரத்நகோசம்		”
தேசிகனின் ஸ்ரீஸ்துதி		91
— தயாசதகம்		92
— மும்மணிக்கோவை		”
ஸ்ரீவசனபூஷணம்		93
கனகதாரா ஸ்தோத்ரம்		95
லக்ஷ்மீ ஸஹஸ்ரம்		96
ஸ்ரீ சப்தத்தின் ஆறு பொருள்கள்		97
எம்பெருமானார் காட்டிய வழி		98
திருமந்த்ரத்தில் ஸ்ரீஸம்பந்தம்		100
த்வயத்தில் பிராட்டி வைபவம்		”
நாச்சியார் விழி		101
முடிவுரை		”

FOREWORD

The "Jayanthi Chintanaigal" or the "Birthday Reflections" which is brought out by Mr. V. M. Srinivasan is a unique work in many ways. He has written four articles about Sri Krishna, Sri Rama, Lord Srinivasa and Sri Mahalakshmi, names held in veneration in every Hindu household, in particular of the Vaishnavites. These articles are interesting, informative and instructive. Himself being a lawyer, he has not failed to quote precedents and authorities by way of references to the great saints and the Alwars, and the impressions and extracts from other texts depicting the greatness and achievements of the Immortals. The author's vast knowledge of Vaishnavite literature and his spirit of devotion have manifested themselves in the work. The illustration given at the end of each chapter is bound to appeal to the reader, especially to the layman, who can have a pictorial rendering of the life, achievements and teachings of the Incarnations of Sri Maha Vishnu.

Well conceived, couched in simple and chaste Tamil, supported by the great sayings of the saints and made attractive by instructive illustrations, this book will be found valuable to every devotee enabling him to have a knowledge of the greatness of the Vaishnavite cult, its philosophy and message. Coming as he does from a highly religious and pious family himself and being a true devotee, the author has, by bringing out this publication, added to the already good services he has been rendering to the cause of Hindu religion.

"Venkata Baugh," (The Hon'ble Mr. Justice)
Madras-2. W. S. KRISHNASWAMI NAYUDU
25th July 1955.

முன்னுரை

ஸ்ரீ வை. மு. ஸ்ரீநிவாஸன் வெளியிட்டுள்ள "ஜயந்தி சிந்தனைகள்" என்ற அவதாரதின சிந்தனை நூல், பல அம்சங்களிலும் தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. ஒவ்வொரு ஹிந்துக் குடும்பத்திலும், முக்கியமாக வைஷ்ணவர்களிடையேயும், மிகவும் பக்தி ச்ரத்தையுடன் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீராமன், ஸ்ரீ ஸ்ரீநிவாஸன், ஸ்ரீ மஹாலக்ஷ்மி என்ற நித்யமான பர தத்துவங்களைக் குறித்து நான்கு வியாசங்கள் எழுதியிருக்கிறார். இவை பொருட்சுவை நிறைந்து, கருத்து மிகுந்து, ரஸிக்கத்தக்கவையா யிருக்கின்றன.

ஆசிரியர் வழக்கறிஞராயிருப்பதனால், தகுந்த ஆதாரங்களையும் மேற்கோள்களையும் காட்டத் தவற வில்லை; அவதார மகிமைகளையும் சாதனைகளையும் குறித்து ஆழ்வார்களுடைய அருளிச் செயலிலிருந்தும், ப்ரஸித்த அறிஞர்களின் நூல்களிலிருந்தும் கருத்துக்களும் குறிப்புக்களும் கொடுத்திருக்கிறார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய இலக்கியங்களில் ஆசிரியருக்குள்ள பரந்த ஞானமும், அவரது பக்தி ச்ரத்தையும் இந்நூலில் நன்கு வெளிப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஓவியங்கள் வாசகர்களுக்கு, முக்கியமாக பாமரருக்கு, மிகவும் கவர்ச்சிகரமாயிருக்கும்; ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதார விசேஷங்களில் பல முக்கிய ஸாதனைகளையும் படிப்பினைகளையும் சித்திரமூலமாக இப்பகுதியில் காணலாம்.

நல்ல அமைப்பு, எளிய தூய தமிழ் நடை, பெரியோர் பொன்மொழிகளின் ஆதாரம், கருத்து நிறைந்த ஓவியங்களின் அணியழகு,—இவை யனைத்தும் சேர்ந்துள்ள இப்புத்தகம் ஒவ்வொரு பக்தனுக்கும் மதிப்புக்குரியதாக விருக்கும்; ஸ்ரீவைஷ்ணவ

ஸம்ப்ரதாய தத்துவங்களின் மேன்மையையும் ஆழ்பொருளையும் அறிய இந்நூல் பெரிதும் பயன் படும்.

பக்தி ச்ரத்தை மிகுந்த உயர்ந்த குடும்பத்தில் பிறந்து, ஒரு உண்மை பக்தனுகவுள்ள இவ் வாசிரியர், ஏற்கெனவே தாம் இயற்றிவரும் அருமை யான ஹிந்து மதப் பிரசாரத்தொண்டை, இந்தப் பிரசுரத்தின் மூலமாக மேலும் சிறப்பித்துள்ளார்.

"வேங்கட பாக்"
சென்னை-2.
25—7—55.

W. S. கிருஷ்ணஸ்வாமி நாயுடு.
(கனம் நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்)

வணக்கம்

கனம் நீதிபதி கிருஷ்ணஸ்வாமி நாயுடு அவர் களின் முன்னுரையுடன் இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியும், குதுகலமும், — ஏன், பெருமித மும்—அடைகின்றேன்; அவர், இச்சிறுவனை உத் ஸாகப்படுத்தி, முன்னுக்கு வர மேலும் ஊக்க மளிக்க வேண்டுமென்று மிகவும் சிறப்பித்து எழுதியிருக்கிறார். நமது ஸம்ப்ரதாயச் சிறப்புகளில் அவருக்குள்ள பெருமதிப்பு உலகமறிந்ததே! அத் தகைய ஆஸ்திகமணியிடமிருந்து முன்னுரையுடன் வெளிவருவது இந்நாலுக்கு விசேஷ கௌரவத்தை அளிப்பதாகும்; அன்னருடைய அன்புக்கும் ஆசிக் கும் எனது மனமார்ந்த வந்தனத்தையும் வணக்கத் தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

—வை. மு. ஸ்ரீ. (27-7-55)

ஸ்ரீஜெயந்தி சிந்தனைகள்

❋

பகவான் ஒருவன் உண்டு என்கிற ஞானமேயில்லாத ஒரு கிழவன். அவன் ஒரு எழுத்தும் படித்ததில்லை; ஒரு பகவத் கதையும் கேட்டதில்லை. பத்தாவது வயது முதல் தயிர், மோர் விற்பனை செய்து ஜீவிப்பதையே தொழிலாகக் கொண்டவன். தம்மிடையே உலவி லீலைகளைச் செய்தருளும் 'சிறிய இடைப் பையனான' கண்ணனைப் பரதெய்வம் என்று உணரும் ஞானமற்றவன்.

அவனது மருமகளோ இதற்கு நேர் எதிர்த்தட்டு! அவள் கண்ணனது திருமேனி அழகிலோ, குழலிசையிலோ மட்டும் ஈடுபட்டு, அவனைப் பரதேவதை என்று கருதியவளல்லள். அவனே தந்தை, தாய் முதலான ஸகலவித பந்துவென்றும், உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை எல்லாமே கண்ணன் என்றும், அக்ஷயமான வைத்தமாநிதியும் அவனே என்றும் நிர்மலமான ஞானம் பிறந்தவள். ஆனால், குலதர்மப்படி, குடும்பத் தலைவனின் கட்டுதிட்டங்கட்கு அடங்கி நடப்பவள்.

சரத்கால பௌர்ணமி. கண்ணனின் தைவிகமான புல்லாங்குழலின் நாதம் செவியில் பட்டதும் கோபிகைகள் தங்களை மறந்து ஸ்ரீ க்ருஷ்ணனிடம் ஓடினார்கள். திரள் திரளாக வந்து கண்ணனைக் கண்டு வெட்கி, கவிழ்தலையிட்டு, வணங்கினர்; தூமலர் தூவித் தொழுதனர். அதன் பிறகு நடந்ததுதான் ராஸக்ரீடை என்னும் குரவைக் கூத்து.

மாமனாருடைய கட்டுதிட்டத்தை மீறிப் போகமாட்டாத சிந்தயந்தீ, (இது அவளுக்குக் காரணப்பெயரே—கண்ணனிடத்தே சிந்தையைச் செலுத்திய வனிதா ரத்தினம்) சரீரத்தை வீட்டிலே நிறுத்தி, மனதைக் கண்ணனிடத்தே நிலை நிறுத்தினாள். கண்ணனிடத்தே நெஞ்சு பதிந்திருக்கையால் ஏற்பட்ட நிர்மல சுகத்தாலும், அவனைக் கிடைக்கப் பெறுமையாலுண்டான அளவற்ற துக்கத்தாலும், ஸகல புண்யபாபங்களும் கழியப் பெற்றாள். அவள் மனத்துக்கினிய கண்ணன் கண்முன்னே காட்சி யளித்து, அவளுக்கு மோக்ஷமும் அளிக்கிறான்.

சிந்தயந்தியின் க்ருஷ்ண பக்தியையும் அவளது மாமனாரின் அஜ்ஞானத்தையும் பற்றிச் சிந்திக்கும்போது, அவனைப்போன்ற மற்றோர் மூடக் கிழவன் முக்திபெற்ற சரித்திரம் நமக்கு நினைவுக்கு

வருகின்றது. ததிபாண்டன், (இதுவும் காரணப்பெயரே—தயிர்ப் பானையை வைத்திருப்பவன்) தனக்கு மட்டுமின்றி, தனது தயிர்ச் சட்டிக்கும், தனது கிராமத்திலுள்ள இருபது மனைக்காரர்களுக்கும் மோக்ஷம் வேண்டிப் பெற்றான். தன்னுடைய அழகைக் காட்டி, பகவான், இந்த அஜ்ஞான கிழவனுக்கு, தானாகவே வந்து உத்தம கதி அளித்தான். கிழவனும் முக்திலாபம் பெற்றான். சிந்தயந்தியின் மாமனாரையும் கண்ணபிரான் திருத்திப்பணிகொண்டான் என்றும் ஊகிக்கலாமன்றோ! ❋

ஸ்ரீ ஜெயந்தி நன்னாளில் நமது சிந்தனை ஸ்ரீக்ருஷ்ண குணாநுபவத்தில் பலபடியாகச் செல்வது ஸஹஜமே. (1) ஆழ்வார்கள் அருளிச்செயல், (2) பண்டைச் சங்கத்தமிழ், (3) முகுந்தமாலை, (4) கீத கோவிந்தம், (5) க்ருஷ்ணகர்ணாம்ருதம், (6) கோபிகாகீதம், (7) ஸஹஸ்ரநாமம், (8) கீதா சாஸ்த்ரம்—முதலியவை கண்ணன் புகழைப் பாடியதை ஓரளவு அநுஸந்திக்க மனம் குதுகலம் கொள்கின்றது. ஷை எட்டுக்ரந்தங்களிலிருந்து துண்டு துணுக்குகளாய்த் தொடுத்த அஷ்டவித புஷ்ப கதம்பமாலையைக் கண்ணன் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

1. ஆழ்வார்கள் அருளிச்செயல்.

[★ நாலாயிரப் பாசுர எண்.]

பொய்கையாழ்வார்—இவர் இயற்றியருளிய 100 பாசுரங்களில் சுமார் 20 கண்ணனுக்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் நான்கின் ஸாரத்தைக் குறிப்பிடுவோம் (2088)★ எல்லா உலகங்களும், எல்லா தேவதைகளும், அவரவரது கருமங்களும், சிறப்பும், யாவும் கண்ணன் படைத்த மயக்கு! அதாவது, இன்ன ஸ்தானத்திற்கு இன்னான் நிர்வாஹகன் என்று அமைத்துள்ளதும், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரத்திற்கு இன்னார் அதிகாரி என்று ஏற்படுத்தியுள்ளதும் கடல்கடைந்த காரோதவண்ணன் படைத்த மயக்கேயன்றி வேறில்லை. (2092) என் வாயானது கண்ணனைத் தவிர மற்றொன்றைப் புகழாது; என் கைகளும் வேறொருவனைத் தொழமாட்டா; என் கண்களும் மற்றெதையும் காணமாட்டா; கண்ணன் புகழன்றி என் காதுகள் வேறெதையும் கேட்கமாட்டா; (2100) இவ்வுலகத்தையெல்லாம் ப்ரளயம் கொள்ளாதபடி திருவயிற்றினுள்ளே வைத்து ஆலந்தளிரிலே சயனித்துக்கொண்ட செந்தாமரைக்கண்ணனே! உன்னுடன் நித்யஸம்பந்தம் பெற இந்தக்கருங்கடல்என்ன மாதவம் செய்ததோ!(2105) அவாப்த ஸமஸ்த

காமன், ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தியுக்தன் என்று நிகரிலாப் புகழ் பெற்ற நீ, ஒரு குறையுள்ளவன்போலவும், அந்தக்குறையை நீக்கிக் கொள்ள வெண்ணெய்க் களவு செய்தவன்போலவும், அதற்காகக் கயிற்றினால் கட்டித் தண்டிக்கப்பட்டவன்போலவும், அந்தக் கட்டில் நின்று தப்புவதற்குச் சக்தியற்றவன்போலவும், கட்டை யவிழ்க்கும் உபாயத்தை அறியாதவன்போலும் நடித்தாயே! இதென்ன ஆச்சரியம்!

பூதத்தாழ்வார்—இவர் இயற்றியருளிய 100 பாசுரங்களில் 22 கண்ணனைக் குறித்தவை. இந்த லீலாவிபூதியிலிருந்துகொண்டு உன் புகழைப் பாடுகிற பாக்யம் எனக்கு வாய்த்தாலும், அங்கு நித்ய விபூதியில் வந்து சேர்ந்து பூர்ணாநுபவம் பெறும்படி அருள வேண்டும். (2245) கண்ணா! இதிஹாஸ புராணங்களும் அவற்றின் ஆழ்பொருளும், உள்ளது உள்ளபடியே அறிந்து துதித்தால், அவையெல்லாம் உன் திருநாமங்களே! நீயே இதிஹாஸ புராண ஸ்ரீஸூக்தி வடிவமாக நிற்கிறாய்! உன்னை வந்தடைந்து, கண்டு, ''ஹாவு ஹாவு ஹாவு; அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்; அஹமந் நாதோ ஹமந்நாதோஹ மந்நாத:'' என்று பரிபூர்ண சப்தங்களாலே அனுபவிக்கும்படி அருளவேணும். (2279) கண்ணா! நீ இடையனாய் வந்து பிறந்து குடக்கூத்தாடியதால் ஏற்பட்ட ஆயாஸம் தீர என் இதயத்துள்ளே பொருந்தி அதனையே நித்ய வாஸஸ்தானமாகக் கொண்டாயே! அதுவும், நீ சிறு குழவியாயிருக்கையிலேயே ஸப்த லோகங்களையும் உன்னுள்ளே ஒடுங்கும்படி உட்கொண்டாயே—இதுவும், என்ன ஆச்சர்யம்! (2281) உன்னிடத்தில் அடியேன் வைத்திருக்கிற அன்பானது என்னளவில் அடங்கி நிற்பதன்று: நீயே அன்புக்கு உரியவன்.

பேயாழ்வார்—இவர் இயற்றியருளிய 100 பாசுரங்களில் 27 கண்ணனுக்கு. (2297) திருப்பாற்கடலில் நின்று தம் திருவுள்ளத்துக்கு பகவான் வந்துசேர்ந்தாராம்; வரும் வழியில் திருவல்லிக்கேணியில் தங்கி வந்தாராம்! மாடமாமயிலைத் திருவல்லிக்கேணியைச் சேர்ந்த இவ்வாழ்வார்க்கு இங்ஙனம் தோன்றுவது இயற்கையே. (2309) சேஷசாயியான பகவான் பஞ்சபாண்டவர்க்காகக் கடுமையான பாரத யுத்தத்தை நடத்தியவன்; சிறுகுழந்தையாயிருக்கும் போது பூதனையை முடித்தவன்—அத்தகைய ஸ்வாமியானவன் யசோதையின் மத்துக்கு அஞ்சி நின்றானும்! இங்ஙனே சக்தியையும் அசக்தியையும் மாறிமாறி அவன் வெளியிடுவது என்ன ஆச்சரியம்! (2314) ஆலிலையில் குழந்தை வடிவுடன் உலகங்களையெல்லாம் உண்டு சயனித்திருந்த என் ஸ்வாமிதான், கடல்கடைந்து

தேவர்க்கு அமுதமளித்தவன். (2374) ஸர்வலோக பிதாவான பகவான், ஒருவர்க்கும் மகனல்லாத மாமேனி மாயன், வஸுதேவர்க்குப் பிள்ளையாய்த் தோன்றினனே, அவன் திருவடிகளையே பூர்த்தியாகச் சிந்தை செய்வாயாக!

திருமழிசைப்பிரான்—ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை நிலை நாட்ட இவர் இயற்றியருளிய நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் இரண்டிலும் இவர் கண்ணனுக்குப் பல பாசுரங்களைச் சமர்ப்பித்துள்ளார். கண்ணபிரான் அர்ஜுனனை நோக்கி அருளிச் செய்தபடியே இவர் தனது மனதைப் பார்த்துக் கூறுகிறார்: "ஸர்வேச்வரன் நமது விரோதியைப்போக்கி அடிமைகொள்வதாக வந்து புகுந்திருக்க, இனி நீ எதுக்காக துக்கஸாகரத்தில் அழுந்துகிறாய்?" என்று. (2284) 'ஆலந்தளிரில் பள்ளிகொண்ட பரதத்துவத்தை நானறிந்தவாறு யாரறிவார்?' என்று குதுகலிக்கிறார். (773) திருத்துழாய்மாலை யணிந்து, ஸ்ரீதேவி பூதேவியுடன் எழுந்தருளியிருக்கும் என் ஸ்வாமிதான் பண்டும், இன்றும், மேலும், ரக்ஷித்தருள ஏழுலகையும் ப்ரளயம் கொள்ளாதபடி அமுது செய்து, ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளினர். (785) ஸர்வ காரணபூதனான பரம்பொருளான நீ, இடையனாய்ப் பிறந்த மாயம் என்ன ஆச்சர்யம்! (792) மாய! உன் மாயம் முற்றும் மாயமே! உன் ஸ்வரூபத்தை ஆராய்ந்து அறியவல்லார் யார்?

நம்மாழ்வார்—நம்மாழ்வாரின் க்ருஷ்ண—ப்ரேமையை வர்ணிக்க வார்த்தைகள் அகப்படா. 'ஒரு செவ்வாய் முந்திப் பிறந்திருந்தால் கண்ணனை ஸேவித்திருப்பேனே!" என்று ஏங்கியவரன்றோ இவர்! "எத்திறம் உரலினோடு இணைந்திருந்தேங்கிய எளிவே!" என்று சொல்லி ஆறுமாதம் மோகித்துக் கிடந்தவர் ஆழ்வார். இதுபோலவே மேலும் இருமுறை. இவரது ஸித்தாந்தம் கண்ணனே பரதெய்வம்: எல்லாம் கண்ணன்: எங்கும் கண்ணன்: (3713) தானே யுலகெல்லாம், தானே படைத்திடந்து, தானே யுண்டுமிழ்ந்து, தானேயாள்வானே!—என்பதுதான். (2584) எல்லா ஜீவராசிகளும், எல்லா உலகமும், ஸகல தத்துவமும் சிறியதான திருவயிற்றின் ஒரு பக்கத்தில் கலசும்படியாக, ஒரு வஸ்துவும் வெளிப்படாதபடி எல்லாப் பொருள்களையும் உள்ளேயிட்டு மறைத்து ஒருஆலந்தளிரிலே பள்ளிகொண்ட எம்பெருமாமாயனை யல்லதுவேறுதெய்வத்தைப்பரதத்துவமாகக்கொள்வேனோ? (2854) அவனுடைய பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் பாடியாடி, என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் உயர்த்திக்கொண்டேன். (3240) நித்ய ஸூரிகளும் அறியமுடியாத உனது மாயச் செயல்

களை எம்மால் அறியப்போமோ! பசுக்களை மேய்க்கவல்ல பெருமானே! (3293) எனக்கு ஸகல விதமான தாரக, போஷக, போக்யங்களும் கண்ணன் எம்பெருமானே. எல்லாம் கண்ணன், எங்கும் கண்ணன். (3496) 'அடியேன் உன் திருவடியைக் காணும்படியாக ஒருநாள்கூட வந்து தோன்றமாட்டேனென்கிறாயே! (3597) ஒன்று போல் தோற்றுகிற புறமதங்களான ஆறு சமயங்களுக்கும் தடையாகி நிற்பவனும், எல்லாப் பொருளுக்கும் உயிர்நிலையாய்க்கொண்டு முதல்வனா யிருப்பவனும், காரணனா யிருப்பவனுமான கண்ணபிரானைக் கண்டுகொண்டேன்.

மதுரகவியாழ்வார்— இவர் இயற்றியருளியது ஒரே ஒரு பதிகம்தான்: கண்ணி நுண் சிறுத்தாம்பு என்று தொடங்கும் அந்தாதி. பகவானைப் பாடுவதைவிட ஆழ்வாருடைய புகழைப் பாடுவதே தமக்குப் பரம போக்யம் என்று கூறும் இவர், ப்ரபந்தத்தை ஆரம்பிப்பதே க்ருஷ்ண - ஸௌலப்யத்துடன்தான்! நம்மாழ்வார் எல்லா அவதாரங்களிற் காட்டிலும் க்ருஷ்ணாவதாரத்தில், அதிலும் வெண்ணெய் களவு கண்டு, ஆய்ச்சியர் தாம்பினால் உரலினிடை ஆப்புண்டிருந்த ஸௌலப்யத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தது குறித்தே, மதுர கவிகளும் அந்த சரித்திரத்துடனே ஆரம்பிக்கிறார். (937) 'கட்டுண்ட மாயன்' என்னாமல், 'கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்'' என்கிறார், அவன் தன்னைக் கட்டுதற்குத் தானே இசைந்ததை வெளிபடுத்த. (939) 'ஆழ்வாருடைய உகப்புக்காக எம்பெருமானையும் ஸேவிப்பேன்; ஆழ்வார்க்கு உரிய ஆளாய் அடியேன் பெற்ற நன்மை இது!' என்கிறார் மேலும்.

குலசேகராழ்வார்—இவர் இயற்றியருளிய 105 பாசுரங்களில் இரண்டு பதிகங்கள் கண்ணனுக்கு இடுகிறார். இளமை தங்கிய இடைப் பெண்கள் கண்ணபிரானை ஆசைப்பட்டு ராத்ரியின் நடுச்சாமத்திலே ப்ரணய கலஹம் பண்ணி ஈடுபட்டுச் சொன்னதாக ஒரு பதிகமும், கண்ணபிரானுடைய எல்லையில்லா அற்புத சேஷ்டிதங்களை காணப்பெறாத தேவகியின் புலம்பல் வார்த்தை ஒரு பதிகமுமாகப் பாடியுள்ளார் (715) யசோதையே பரமானந்தத்தின் எல்லையைக் காணப்பெற்றாள் என்று தேவகி புலம்புகிறாள்: தயிரையும் வெண்ணெயையும் களவாடி உண்ணும் கண்ணனை யசோதை தடியும் தாம்பும்கொண்டு அடிக்கவருவாள்; துடைப்பதாக நினைத்து வாய்நிறைய சுற்றிலும் பூசிக்கொள்வன் கண்ணன்; யசோதை அடிக்க வர, அஞ்சினாற்போல் நோக்குவன்; வாய் துடிக்க விக்கி விக்கி அழுவன்; அஞ்ஜலி பண்ணுவன்! இந்த லீலையையெல்லாம் நேரில்கண்டு அனுபவித்து, தொல்லை இன்பத்து

இறுதி கண்டவள் யசோதை, என்கிருர் ஆழ்வார்;புலம்பும் தேவகி வாயிலாக. (725) முன்பு மஹாப்ரளயம் வந்தபோது ஓர் ஆலந் தளிரிலே குழந்தை வடிவங்கொண்டு உலகெலாம் திருவயிற்றில் வைத்து நோக்கினவன் என் கணபுரத்துக் கருமணியே.

பெரியாழ்வார்—கண்ணனுடைய லீலைகளைப்பலபடியாகவும் அனுபவித்தவர் இவ்வாழ்வார்தான். அதனுல் இவர் இயற்றியருளிய 473 பாசுரங்களில் 279 கண்ணனுக்கே; பெரியாழ்வார் திருமொழிக்கு பாகவத தசமஸ்கந்தஸாரம் என்றே பெயர்வரலாயிற்று. யசோதையாகவும், ஆயர் மங்கையராகவும், நாயகியாகவும், அவளது தாயாகவும், இப்படியாக பல ஸ்வரூபங்களுடன் பாசுரமிடுகிருர் கண்ணனுக்கு. திருக்கோட்டியூரே ஆய்ப்பாடியாகவும், நம்பியே கண்ணபிரானுகவும் இவர் கண்ணுக்குக் காட்சியளிக்க, ஸ்ரீ ஜெயந்தியைக் கொண்டாடுகிருர், கவிதா-பக்தி-ப்ரவாகத்துடன், வேறு எந்த ஆழ்வாரும்கொண்டாடாத விதத்தில். ஸ்ரீஜெயந்திக் கொண்டாட்டம், பாதாதிகேசவர்ணனை, தாலாட்டு, அம்புலிப் பருவம், செங்கீரைப்பருவம், சப்பாணிப்பருவம், தளர்நடைப்பருவம், அச்சோப்பருவம், முதுகைத்தழுவும் பருவம், பூச்சிகாட்டுதல், பாலுண்ணுதல், காதுகுத்தல், நீராட்டம், குழல்வாருதல், கோல் கொடுத்தல், பூச்சூட்டல், காப்பிடல், பாலக்ரீடை, ஆய்ச்சியர்முறைபாடு, அம்மம் தருவது, கன்றின்பின் கண்ணன், ... கோர்வர்த்தனகிரி, விருத்தாந்தம், குழலூதற்சிறப்பு, தாய்ப்பாசுரம், உந்திபறத்தல், ... இப்படியாக, பலபலவிஷயங்களைக்குறித்துப்பாடுகிருர்; ஒருபிள்ளைத் தமிழ் ப்ரபந்தம்போல. அவ்வவ்வனுபவத்தாலுண்டான ப்ரீதியதிசயத்தை வெளிப்படுத்துகிருர். (19) ஆயர் புத்திரனல்லன், அருந்தெய்வம் என்று கண்டு மகிழ்ந்தனர். (40) மண்ணும் மலையும் கடலும் உலகேழும் மகிழ்ந்து உண்ணும் பிள்ளை, இவன். (162) என்னையும் எங்கள் குடியிலுள்ளாரெல்லாரையும் அடிமைகொண்ட தலைவன் கண்ணன். (188) குடக்கூத்தாடிப் பெண்களை மயக்கவல்லவன் எங்கள் தலைவன். (243) விடியற்காலத்திலேயே எழுப்பி, அழகிய திருவடிகள் நோவெடுக்கும்படியாகக் காட்டிலே கன்றின்பின போக்கினேனே, என்ன பாவமே!—என்று யசோதையின் பேச்சு. (275) இது ஓர் அற்புதம் கேளீர்! திருமால் தூய வாயில் குழல் ஓசை வழியே, கோவலர் சிறுமியர் குதுகலிப்ப, உடல் உள் அவிழ்ந்து, எங்கும் காவலுங்கடந்து, கயிறு மாலை ஆகி, வந்து கவிழ்ந்து நின்றனரே. (281) குழலோசையின் இனிய ரஸத்தை செவியின் உள் நாக்கிலே உட்கொண்டு மனங்களித்து, ஒரு க்ஷணமும் விடமாட்டாது தொடர்ந்தனர், ஆயர் மங்கையரும், கோபாலர்களும்.

ஸ்ரீ ஆண்டாள்— திருப்பாவை, நாச்சியார்திருமொழி என்று இரு ப்ரபந்தங்களின் மூலம் கண்ணனென்னுங் கருந்தெய்வத்தினிடத்தில் தனக்குள்ள பக்திக் காதலை வெளியிடுகிறாள். அவனைக் காதலனாகக் கருதி பிரிவாற்றாமை தாங்காது, கோபிகையரைப் போல் நோன்பு நோற்று உயிர் தரிப்பவளாகி, அவ்வளவிலும் கண்ணன் வராததால், அவனுடன் தன்னைக் கூட்டிவிடும்படிக் காமனை வேண்டுகிறாள்; தூது விடுகிறாள் ; கண்ணனிருக்குமிடத்திற்குத் தன்னைக் கொண்டுவிடும்படிக் கெஞ்சுகிறாள் ; கண்ணன் ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களைக் கொண்டாவது தன் வாட்டத்தைத் தணிக்கச் சொல்லுகிறாள்; கடைசியில் பிருந்தாவனத்தில் தானே கண்ணனைக் கண்டதாகச் சொல்லி, குதுகலிக்கிறாள்.(498) பிரானே! நீ எங்களுக்குப் பிறந்து காட்டவும் வேண்டா, வளர்ந்து காட்டவும் வேண்டா, கொன்று காட்டவும் வேண்டா; உன்னைக் காட்டினால்போதும்! பறையென்ற ஒரு வ்யாஜத்தையிட்டு உன்னையே காண் பெற நினையா நின்றோம்! (502) எங்களுக்கு உத்தேசியம் உன் திருவடிகளில் நித்ய கைங்கர்யம் பண்ணுகைதான். வேறு ஒருவகையான விருப்பமும் எமக்குப் பிறவா வண்ணம் நீயே அருள்புரிய வேணும். இடைக் குலத்தில் நீ வந்து பிறந்ததற்கு எங்களிடம் கைங்கர்யம் கொள்வதே பலனாகும், கோவிந்தா!

தொண்டரடிப்பொடியாழ்வார்... திருப்பள்ளியெழுச்சியும் திருமாலையும் இயற்றியுள்ள இவ்வாழ்வார், திருவரங்கம் பெரிய கோவில் பெரிய பெருமாளையன்றி வேறொருவரை யறியாதவராயிருந்தும், அவரையே கண்ணனாகப் பாவித்துச் சில பாசுரங்கள் இயற்றியுள்ளார். (880) கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமினீரே! கன்றுகளின் கூட்டங்களை மிக்க உகப்போடு மேய்த்து வந்த எம்பெருமானின் திருவடிகள் தவிரச் சரணமடைய வேறொன்றில்லை. (900) கண்ணபிரானே! வேறு புகலற்று உன்னையே கூப்பிடா நின்றேன். உன்னையொழிய வேறு ரக்ஷகர்யாரிருக்கிறார்? (906) செந்தாமரைக்கண்ணா! என் ஆவியே! அமுதே! எப்போதும் உன்னைத் தவிர மற்றையோரை வணங்கமாட்டேன், நினைக்கவும்மாட்டேன்(916)கண்ணனே அரங்கம் மால் ஆகப்பள்ளி கொண்டிருக்கிறான்; அவனுக்கே இத்திருமாலையைச் சாற்றினேன்.

திருப்பாணாழ்வார்— இவர் பாடியது அமலனாதிபிரான் என்ற ஒரே பதிகம். இவரும் தொண்டரடிப்பொடி யாழ்வாரைப்போல் அரங்கனையே கண்ணனாகப் பாடியவர். (935) ஆலமாமரத்தினிலை மேல் ஒரு பாலகனாய் ஞாலமேழும் உண்டு கண்வளர்ந்த பரதத்துவமே இப்போது தென்னரங்கத்தில் கண்வளர்ந்தருள்கிறது

என்று சுட்டிக்காட்டுகிறார். (956) காளமேகம்போன்ற வடிவை யுடையவனும், ஆயர் சிறுவனாய் வெண்ணெயுண்ட வாயையுடை யவனும், என் நெஞ்சைக் கொள்ளைகொண்டவனும், நித்ய ஸூரி களுக்குத் தலைவனும், திருவரங்கத்தில் கண்வளர்பவனுமான என் அமுதினைக்—கண்ணனைக்—கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

திருமங்கையாழ்வார்—இவர் இயற்றியருளியது 1137 பாசு ரங்கள். ராமாவதாரத்தைவிட க்ருஷ்ணாவதாரத்திலே இவருக்கு அதிக ஈடுபாடு என்பது தெளிவு. 'பரதத்துவ்மான நீ, எல்லா அவதாரங்களையுமெடுத்து, கடைசியில் ஆயர்குலத்தின் அணி விளக்காகத்தோன்றி, ஆய்ச்சிகளின் தாம்பால் கட்டுண்டாயே, இது போன்ற ஆச்சரியம் வேறெங்கும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை!" என்றுவியக்கிறார். (1888) கடைந்த வெண்ணெயைக் கள்ளவழியால் வாரி விழுங்கின கண்ணனை யசோதை கண்ணி நுண்சிறுத் தாம் பினால் கட்டிப் புடைக்க, சற்றே ஏங்கி இருந்து, பிறகு அவளால் சீராட்டப்பட்டு, அவன் அதன் பின் விளையாட்டிலே இழிகின்றா னாம்! யசோதை மட்டுமா அவனைக் கட்டுகிறாள்? (1890) தாவி மோர்ப்பானைகளை உருட்டிவிட்டு, தயிரையும் நெய்யையும் விழுங்கி விட்டு, ஒன்றுமறியாத குழந்தைபோலத் தவழும் இப்பெரியவரை இடைச்சிகள் தாம்பால் கட்டவும் கைகளால் அடிக்கவும் அதனால் தழும்பேறிக் கிடக்கிறது இந்த தாமோதரன் உடம்பெலாம். (2019) இச் சிறியானைச் செங்கண்நெடியானைச் சிந்தித்து அறியாதார் என் றும் அறியாதாரே! கலியன் ஒலிமாலை இதே இசையுடன் ரீங்கா ரம் செய்கின்றது. (2673) சிறிய திருமடல் இதற்கு ஒரு முக்ய உதாரணம், இத்தியாதி.

ஆழ்வார்கள் வாழி! அருளிச்செயல் வாழி! பூமண்ட லம் முழுதும் உஜ்ஜீவிக்குமாறு வேதங்களுக்குச் சேர அவர்கள் அருளிச்செய்த ஸ்ரீ ஸூக்திகள் வாழ்க! இந்த உலகில் இருள் நீங்க, ஆழ்வார்கள் ஆய்ந்துரைத்த நற் கலைகள் வாழி!

❊

2. பழந்தமிழ் நூல்களில் கண்ணபிரான்.

பழந்தமிழ் நூல்களான தொல்காப்பியம், திருக்குறள், பரிபா டல், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, புறப்பொருள் வெண்பாமாலை, முத்தொள்ளாயிரம்முதலியவை அங் கங்கே கண்ணனையும் நப்பின்னையையும் குறிப்பிட்டுள்ளன. காடு

சேர்ந்த நிலமான முல்லைக்குத் திருமாலை அதிதெய்வமாக முதற்கண் வைத்துச் சிறப்பிக்கின்றன. "மாயோன் மேய காடுறையுலகம்" ஆன முல்லை நிலமக்களை ஆயர், ஆய்ச்சியர் என்று கூறுவர் தமிழர். முல்லைத் தெய்வம் மாயோனே; திருமாலின் பூர்ணவதாரம் கண்ண பிரானே—என்று திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றி யிருந்தது. இதனையே 1103வது குறள் விளக்குகிறது: "தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்,தாமரைக் கண்ணானுலகு?" கண்ணபிரான் நிகழ்த்தியதாகத் தமிழர்களிடையே வழங்கி வந்த சரித்திரங்கள் பலபல: அவற்றுள் அவன் குருந்தொசித்தது,குரவைக்கூத்தாடியது,குடக்கூத்தாடினது முதலியவை முக்யமானவை

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் பின்வரும் அடிகள் நமது கவனத்திற்குரியன:—

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய்! மாயமோ மருட்கைத்தே!"
"அறுபொருள் இவனென்றே அமரர்கணம் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே உலகடைய உண்டனையே!
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய்! மாயமோ மருட்கைத்தே!"

கண்ணனின் தேவிமார்களுள் தமிழ்நூல்களில் மிகவும் சிறப்பித்துக் கூறப்பட்டவள் நப்பின்னைப் பிராட்டியே. வடநாட்டினர் அந்த ஸ்தானத்தில் ராதாதேவியைக் குறிப்பிடுகின்றனர்.

3. ஸ்ரீ முகுந்தமாலை.

கண்ணனை மணிவண்ணனாகச் சித்திரிக்கிறார் குலசேகரப் பெருமாள் 22-வது ச்லோகத்தில். பக்தர்களின் ஆபத்துக்களாகிற பாம்புகளை நடுங்கி மாளச்செய்யும் கருடமணி. மூவுலகையும் ரக்ஷிப்பதற்காக ஏற்பட்ட ரக்ஷாமணி: கோபிகைகளின் கண்களாகிற சாதக பக்ஷிகளுக்கு மேகமணி. அழகுக்கு முத்ராமணி. ருக்மிணிக்கு அலங்காரமணி. தேவர்களுக்குச் சிரோபூஷணமணி. கோபாலர்களுக்குச் சூடாமணி—இத்தகைய மணிவண்ணனான கண்ணனே நமக்கு எல்லா நன்மையும் அருளவேணும்.

33-வது ச்லோகத்தில் மேலும் கூறுகிறார்:இவ்வுலகம் கண்ணபிரானிடமிருந்தே உண்டாயிற்று. ஆகையால் அவனுக்கு நான் தாஸனாயிருக்கிறேன். இந்த ஸமஸ்த ப்ரபஞ்சமும் அவனிடமே நிலைபெற்றிருப்பதால், அவனே அடியேனை ரக்ஷித்தருளவேண்டு

4. கீதகோவிந்தம்.

பக்தியோகத்திற்குப் பிரமாண க்ரந்தமாகிய ஜயதேவருடைய அஷ்டபதி நாடெங்கும் நியமத்துடன் பாடப்படுகிறது. ராதை, க்ருஷ்ணன், ஸகி என்ற மூவரே கீதகோவிந்தத்தின் கதாபாத்திரங்கள். கண்ணபிரான்தான் பரமாத்மா, ராதை ஜீவன், ஸகி ஆசார்யன். பகவான் ஒருவனே புருஷன், மற்றனைவரும் ஸ்த்ரீகளே; பகவானின் பார்யைகளே. பார்யைக்கு பர்த்தாவிடம் அன்பும் கௌரவமும் கலந்திருப்பதேபோல், ஜீவனுக்கு பகவானிடத்தில் அன்பும் கௌரவமும் பிறக்கவேண்டும். அதீத பக்தியை விளக்கும் இந்தக் காவியம் மேலான ஞானசாஸ்திரமாகும்.

ஆழ்வார்களின் அருளிச்செயலில் காணப்படும் நாயக-நாயகி பாவம், முக்கியமாக, நாச்சியார் திருமொழி, நம்மாழ்வாரின் திருவிருத்தம் முதலியவற்றிலுள்ள உட்கருத்தையே கீதகோவிந்தம் பிரதிபலிக்கின்றதென்றால் மிகையாகாது.

தவிர, கண்ணபிரானே பரம்புருஷன்—ஸ்ரீமந்நாராயணன்—த்ரிமூர்த்திகளுக்கும் மூலப்பொருளான பரம்பொருள்—என்பதை ஜீவனும் ஆசார்யனும் உணர்ந்திருப்பதாகக் காட்டுகிறார்.

ராதா கல்யாணத்தைக் குறிப்பிடும் 24-வது அஷ்டபதியைப் பாடினால் கீதகோவிந்தம் முழுவதும் பாடிய பலனுண்டு என்பது பஜனை ஸம்ப்ரதாயம்.

5. க்ருஷ்ண கர்ணாம்ருதம்.

பகவான் கண்ணன் ஸ்வப்னத்திலே தோன்றி, தன் வடிவழகையும் லீலைகளையும் காட்டுகிறார், கெட்டுத் திருந்திய ஒரு பக்தனுக்கு; அவரும் அவற்றை நன்கு அனுபவித்து, தம் அனுபவத்தை க்ருஷ்ணகர்ணாம்ருதம் என்ற க்ரந்தத்தின் மூலம் வெளியிடுகிறார். கவிக்கு லீலாசுகர் என்பது காரணப் பெயர். ஸௌந்தர்யத்துக்கு எல்லைநிலமான விலக்ஷணமான கண்ணன் திருமேனி அவரைத் திருத்திப் பணிகொண்டது.

ஒரு ச்லோகத்தின் பொருளைப் பார்ப்போம்: "கண்ணபிரானைத் தொழுவதற்காக வாஹனமேறித் தேவர்கள் வருகின்றனர். குமரனுடைய மயில் கண்ணனது மயிலிறகைப்பார்த்து இங்கொரு மயில் உளது என்று கருதி தோகையைவிரித்து ஆடிக் களித்தது. பரமசிவனுடைய ரிஷபம் கண்ணனுடைய பசுக்களைக் கண்டு காமுற்றது. இந்திரனுடைய ஐராவதம் கண்ணனின் கம்பீர நடையைக் கற்கமுயன்றது. இப்படி அனைவரும் வந்து பணிகின்ற கண்ணனையும் ஸர்வாபீஷ்டத்தையுமளிக்கின்ற ப்ருந்தாவனத்துக் கற்பகவிருக்ஷத்தின் தோப்பையும் வணங்குகின்றேன்".

விதுரனுடைய அன்பளிப்பான அன்னத்திலும், பக்தியுடன் ரிஷிபத்னிகள் அளித்த அன்னத்திலும் என்ன அன்பு வைத்தாயோ, அதனையே இந்தக் கர்ணாம்ருதத்திலும் வைத்தருள்வாயாக! என்று வேண்டி, முடிக்கிறார்.

6. கோபிகாகீதம்

ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் 31-வது அத்யாயத்தில் கோபிகா கீதம் கூறப்படுகிறது: கோபிகைகள், கண்ணன் தங்களிடம் காட்டும் ப்ரேமைக்குத் தங்கள் அழகே காரணம் என்று கர்வங் கொண்டதைக் கண்ட கண்ணன், அந்த மதத்தைப்போக்கி அருள்புரியக் கருதி மறைந்தான். அவனை எங்கும் காணாமல் வாடி, கோபிகைகள் அவனை நேரில் வரவழைப்பதற்காக அவனது கல்யாணகுணங்களைக் கானம் செய்ததுதான் கோபிகாகீதம். இதில் ஒரு ச்லோகத்தைப் பார்ப்போம்: "எங்கள் பந்துவான கண்ணா! உன் அவதாரமானது இந்தகோகுலத்திலும்வனத்திலுமுள்ளவர்களின் ஸகல பாபங்களையும் போக்கக்கூடியது. ஸகல ஜகத்திற்கும் மிகவும் மங்களகரமானது. ஆகையால் உன்னிடம் பற்றுள்ள மனமுள்ளவர்களான எங்களது இதய ரோகத்தைப் போக்கும் ஒளஷதம் எதுவோ, அதனைக் கொஞ்சமாயினும் கொடுத்தருளிக் காக்கவேண்டும்.

7. ஸஹஸ்ரநாமம்.

வியாஸபகவான் திருமாலின் ஸஹஸ்ரநாமங்களுள் 105 நாமங்களை க்ருஷ்ணவதார ஸம்பந்தமாக இயற்றியிருப்பினும், ஆயிரம் நாமத்துக்கும் க்ருஷ்ணனே தேவதை என்று பீஷ்மரே சொல்லியிருக்கிறார். அதன் பலச்ருதியிலும் முடிவிலும் வாஸுதேவனே கொண்டாடப்படுகிறான். மேலும், ஸகல சராசரங்களும் வாஸுதேவனிடத்திலேயே அடங்கியிருக்க, அனைத்தும் அவரது சரீரமேயென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸகல உலகங்களிலுமுள்ள ஜீவர்களும் அவருள் அடங்கி வசிப்பதால்தான் அவர் வாஸுதேவரெனப் பெயர் பெற்றார்.

8. கீதாசாஸ்திரம்.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், பரமகாருணிகனாகையாலே, ஸகல மனுஷ்ய நயனங்களுக்கும் விஷயமாகப் பூமியில் அவதரித்து, அசுரர்களை நிரஸித்து, பக்தர்களை ஆட்கொண்டு, அர்ஜுனனை யுத்தத்தில் உத்ஸாகம் கொள்ளச் செய்வது என்ற வ்யாஜத்தைக் கொண்டு,(மோக்ஷஸாதனமாக வேதாந்தத்தில் சொல்லப்பட்டதும் கர்மயோக ஞானயோகங்களை அங்கமாக உடையதுமான) பக்தி யோகத்தை லோகோஜ்ஜீவனார்த்தமாக வெளியிட்டருளி...

பகவத்ப்ராப்திக்கு ஸாதனமான அவதார ரஹஸ்யஞானத்தையும் குறிப்பிட்டான்: (4-9) "திவ்யமான என்ஜன்மத்தையும் கர்மத்தையும் (கல்யாண குணங்களையும் சேஷ்டிதங்களையும்) உள்ளபடியே எவன் அறிகிறானோ, அவன் தேகத்தைவிட்டு என்னை அடைகிறான்; மீண்டும் பிறப்பதில்லை." அதாவது—என்னை ஆச்ரயிக்க வொட்டாமல் விரோதிக்கிற ஸகலபாபங்களும் நசித்து, இந்த ஜென்மத்திலேயே என்னை ஆச்ரயித்து, என்னையே விரும்பி, என்னையே நினைத்திருந்து, என்னையே அடைகிறான்—என்பது பாஷ்யம். சரமோபாயமாகக் கண்ணன் உபதேசித்ததாவது: (18-66)

"கர்மயோகம் ஞானயோகம் பக்தியோகம் என்கிற மோக்ஷ ஸாதனங்களாகிற எல்லாத் தருமங்களையும் என்னுடைய ஆராதன ரூபமாக மிகுந்த ப்ரீதியோடு உன் அதிகாரத்துக்குத் தக்கபடி செய்துகொண்டே, பலனையும் கர்த்ருத்வத்தையும்விட்டு, ஆராத்ய ஸ்வரூபனான என்னையே பலனாகவும் உபாயமாகவும் நினைக்கக் கடவாய். செய்யத் தகாததைச் செய்கையும் செய்யத் தக்கதைச் செய்யாமையுமான ஸகல பாபங்களினின்றும் உன்னை நான் விடுவிக்கின்றேன். சோகியாதே!"

"பரமரஹஸ்யமான இவ்வர்த்தத்தை இச்சையில்லாதவனுக்குச் சொல்லக்கூடாது. இதை யாவனொருவன் என் பக்தர்களிடத்தில் வ்யாக்யானிக்கிறானோ அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தியைச் செய்து, என்னையே யடையவான்: இது நிச்சயம்'

மாயன் அன்று ஐவர் தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்ன பாஷ்யகாரரைப் பணிந்து உய்வோம்.

❋

க்ருஷ்ணபக்தியின் சிகரமான சிந்தயந்தியுடன் ஆரம்பித்த ஸ்ரீ ஜெயந்தி சிந்தனையை பக்த மீராவுடன் முடிப்போம். கோகுலத்தில் ஜனித்தவரனைவரும் முன்பு தெய்வலோகத்தவர்களும், தண்டகாரணியரிஷிகளுமேயாவர் என்பதை நோக்கும்போதும், கோதைப்பிராட்டி பூமிதேவியே என்பதை உணரும்போதும், சாதாரண ராஜகுடும்பப் பெண்மணியான மீராவின் நிகரற்ற க்ருஷ்ணபக்தி அதிசயிதமானது என்பது புலப்படும். திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் தமிழகத்தே பொதுமக்களிடையே பரவியிருப்பதைவிட, வட இந்தியாவில் மீராபஜன் அனைவரிடையேயும் அதிகமாய்ப் பரவியுள்ளது ப்ரஸித்தம்.

"கண்ணன் கழலிணை, கண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம், திண்ணம் நாரணமே."

❋

ஸ்ரீ ஜெயந்தி

சித்திர அனுபந்தம்

1

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

2

ஸ்ரீ ஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஓவிய மலர்மாலை

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

5



ஸ்ரீஜெயந்தி

சித்திர அநுபந்தம்

6



ஸ்ரீஜெயந்தி
சித்திர அனுபந்தம்
7

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஸ்ரீ ஜெயந்தி
சித்திர அனுபந்தம்
9

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

11

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஸ்ரீஜெயந்தி

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

ஸ்ரீஜெயந்தி

சித்திர அனுபந்தம்

16

சித்திர விளக்கம்

ஸ்ரீ ஜெயந்தி நன்னாளில் ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதத்தை ஓவிய மலர் மாலையாகவும், அதன் விளக்கமாகிய இச் சொல் மாலையாகவும் அன்பர்க்கு அமுதூட்டும் அரிய பேறு வாய்த்துள்ளது அவனது இன்னருளே! எல்லாம் கண்ணன்; எங்கும் கண்ணன்! கண்ணுக்கும் கருத்துக்கும் இனியனான கண்ணனின் லீலைகளை அனுபவிக்க அளவேது? அவ்வம்ருத தாரையில் ஒரு சில தேன் துளிகளைச் சுவைப்போம்.

<u>சித்திரம் 1.</u>

பரதத்துவமான ஸ்ரீமந்நாராயணனை அறிகைக்காக அதிக வேதாந்த விசாரம் பண்ணி இளைக்க வேண்டாம்; அவன் இருப்பிடத்தைக் கையிலங்கு நெல்லிக்கனியென ஆழ்வார்கள் கண்டு, எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். முதலாழ்வார்கள் குறிப்பாக உணர்த்தியதைத் திருமழிசைப்பிரான் ஸ்பஷ்டமாகப் பேசினார்; அதனை நம்மாழ்வார் நிலைநாட்டினார். "வையகம் உண்டு ஆலிலைத் துயின்ற ஆழியான்" என்று பொய்கையார் குறிப்பிட்டதை, "உண்டது உலகேழும் உள்ளொடுங்க... என் நெஞ்சம் இடமாகக் கொண்ட இறை" என்று பூதத்தார் குறிப்பிட்டதை, "பாலகனாய் ஆலிலைமேல் பைய, உலகெல்லாம் மேலொருநாள் உண்டவனே!" என்று பேயார் குறிப்பிட்டதை,—இம்மூவரையும்விட ஸ்பஷ்டமாகத் திருமழிசைப் பிரான் கூறி, பரதத்துவ நிர்ணயம் பண்ணுகிறார்.

பண்டுமின்று மேலுமாயோர் பாலனாகி ஞாலமேழ்
உண்டுமண்டி யாலிலைத் துயின்ற ஆதிதேவனே!
வண்டுகிண்டு தண்டுழா யலங்கலாய் கலந்தசீர்ப்
புண்டரீக பாவைசேரு மார்ப பூமிநாதனே!

"ஆலில்துயின்ற ஞாலத்தொரு பொருளை, வானவர்தம் மெய்ப்பொருளை, அப்பில் அருபொருளை யானறிந்தவாறு யாரறிவார்?"—என்றும்கேட்கிருர். இதுவே முதல் ஓவிய அனுபந்தம். நம்மாழ்வாருடைய திடமான ஸித்தாந்தமும் இதுவே: "ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும் அகப்படக் கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமா மாயனையல்லது ஒரு மாதெய்வம் மற்றுடையமோ யாமே?" என்றே கேட்கிருர். "ஆலினிலை யேழலகமுண்டு அன்று நீ கிடந்தாய், உன் மாயங்கள் மேலைவானவரும் அறியார்" என்கிருர், மேலும். குலசேகராழ்வாரும் "ஆலினிலைப் பாலகனுயன்று உலகமுண்டவனே!" என்றழைக்கிருர். ஆண்டாளும், "மாலே மணிவண்ணா!...ஆலினிலையாய்! அருள்" என்று வேண்டுகிருள். 'பாலாலிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட்டிருக்கும் எனக்கு அவன் திருத்துழாயையாவது சூட்டுங்களேன்!' என்றும் கெஞ்சுகிருள். "ஆலமாமரத்தினிலை மேலொரு பாலகனாய் ஞாலமேழுமுண்ட" பரதத்துவம்தான் அரங்கத்தரவினணையான் என்பது திருப்பாணாழ்வாரின் திருவுள்ளம். இத்தியாதி......

சித்திரம் 2.

பெரியாழ்வார் அகக்கண்முன் திருக்கோட்டியூரே திருவாய்ப்பாடியாகிறது. அங்கு ஸ்ரீ ஜெயந்திக் கொண்டாட்டம். ஒரே க்ருஷ்ண குதூகலம். "ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார், நாடுவார் நம்பிரான் எங்குற்றான் என்பார், பாடுவார்களும், பல்பறை கொட்டநின்று ஆடுவார்களுமாயிற்று ஆய்ப்பாடியே!" ஆனந்த மிகுதியால் அறிவழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரெல்லாம்.

சித்திரம் 3.

பெரியாழ்வார் இரண்டு ஆயர்மங்கையரது நிலையையெய்தி, உந்தி பறக்கையாகிய லீலா ரஸத்தைக் கொண்டாடுகிருர். ஸ்ரீ க்ருஷ்ண ஜனனத்திலிருந்து ருக்மிணீ கல்யாணத்திற்குத் தாவுகிறது அவரது சிந்தை. "உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக் கொண்டு, விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து, செருக்குற்றான் வீரஞ் சிதைய, தலையைச் சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற, தேவகிசிங்கத்தைப் பாடிப்பற!" என்று பாடுகிருர். இது ப்ரஸித்த சரித்திரம்.

சித்திரம் 4.

குழந்தைக் கண்ணன் செய்த தீம்புகளுக்குத்தான் கணக்குண்டோ? அவைதனில் ஒன்றைப் பெரியாழ்வார் கூறுகிருர், காணுங்கள். "சோல்லிலரசிப்படுதி நங்காய்! சூழலுடையனுன் பிள்ளை தானே, இல்லம்புகுந்து என்மகளைக்கூவி, கையில் வளையைக் கழற்றிக் கோண்டு, கோல்லையில் நின்றும் கோணர்ந்து விற்ற அங்கோருத்திக்கு அவ் வளைகோடுத்து, நல்லன நாவற் பழங்கள் கோண்டு, நான் அல்லேன் என்று சிரிக்கின்றனே!" என்று ஒரு கோபிகை முறையிடுவதாகப் பாடு இருர்.

சித்திரங்கள் 5, 6, 7.

வேணுகானச் சிறப்பு, சரத்கால பௌர்ணமி, ராஸக்ரீடைக்குப் பூர்வாங்கமான பாதபூஜை—இவைகளைச் சித்திரிக்கின்றன அடுத்த மூன்று ஓவியங்கள்.

குழலூதற்சிறப்பைப் பெரியாழ்வார் வர்ணிக்கும் அழகை அகக்கண்முன் காணுங்கள்: "இதோர் அற்புதம் கேளீர்! திருமால் தூயவாயிற் குழலோசை வழியே, கோவலர் சிறுமியர், உடல்உள் அவிழ்ந்து, எங்கும் காவலும் கடந்து, கயிறு மாலையாகி, வந்து கவிழ்ந்தனரே!"

வேணுகானம் பிருந்தாவனத்தைமட்டுமா தன் மாதுர்யத்தால் நிறைத்தது? அனைத்துலகமும் செவியுணவின் சுவை கொண்டு மகிழ, இயற்கையும், மிருகங்களும், பக்ஷிகளும் எழுது சித்திரம்போல் மெய்ம்மறந்து நின்றன. மரங்களினின்று தேன் பொழிந்தது. புஷ்பங்கள் மலர்ந்தன; உலர்ந்த மரங்களும் துளிர்த்தன.

"இதுபோன்ற சரத்கால பௌர்ணமியில் என்னுடன் ரமிக்கப்போகிறீர்கள்!" என்று பகவான் முன்பு வரமளித்திருந்தார்: எப்பொழுதெனில், கோபிகையர் கோபாலனையே பர்த்தாவாக அடைய எண்ணி, பகவத் சகோதரியான காத்யாயினிதேவியைப் பூஜைசெய்தபோது, அதற்கிணங்கி. பகவான், (முன் ராமாவதாரத்தில் தண்டகாரண்ய ரிஷிகளுக்கு அளித்த வாக்கைக் கருத்திற்கொண்டு), இங்ஙனம் வரமளித்திருந்தார்.

தைவிகமான புல்லாங்குழலின் நாதம் செவியில் பட்டதும் கோபிகைகள் தங்களை மறந்து ஸ்ரீ க்ருஷ்ணனிடம் சென்ருர்கள். திரள்திரளாக வந்து கண்ணனைக் கண்டு வெட்கி, கவிழ்தலையிட்டு, வணங்கினர்; தூமலர் தூவித்தொழுதனர். அதன் பிறகு

நடந்ததுதான் குரவைக்கூத்து என்ற ராஸக்ரீடை. ஒவ்வொரு கோபிகையின் பக்கத்திலும் ஒரு கண்ணன் நின்று ஆடினான். அதே சமயத்தில், ஒவ்வொரு கோபிகை வீட்டிலும் கோபிகை அவளது கணவன் பக்கலிலேயே இருந்தாள்! அதாவது, சரீரம் கணவனுடன் வீட்டிலும், ஆத்மா கண்ணனுடன் நதிக்கரையிலும் இருந்தன. இந்த லீலைகளின் ரகஸியத்தை அறிந்துகொள்ள அவன் அருள்தான்வேண்டும். கோபிகைகள் ராஸக்ரீடைக்குப் பிறகுதான் தம் புருஷர்களிடம் அதிகமாக அன்பு பூண்டனர் என்றும் ஒரு கவி பாடுகிறார்.

சித்திரம் 8.

சிந்தயந்தீ மோக்ஷமடைதலைச் சித்திரிக்கிறது எட்டாவது ஓவியம். கண்ணன் குழலோசை கேட்டதும் ப்ருந்தாவனலோலனைத் தேடிப்போகப் புறப்பட்டன மனமும், சரீரமும். மாமனாருடைய கட்டுதிட்டத்தை மீறிப்போகமாட்டாத சிந்தயந்தீ, கண்ணனிடத்தே நெஞ்சு பதிந்திருக்கையால் ஏற்பட்ட நிர்மல சுகத்தாலும், அவனைக் கிடைக்கப்பெறுமையாலுண்டான அளவற்ற துக்கத்தாலும், ஸகல பாப புண்யங்களும் கழியப்பெற்று, உயிர்தரிக்கமாட்டாது, மூச்சடங்கி, மோக்ஷமடைந்தாள்.

சித்திரம் 9.

அடுத்த நான்கு படங்களும் ஒளி—நிழல் படங்கள். சைத்ரிகர்களுக்கே க்ருஷ்ண லீலையை இம்முறையில் தீட்டுவதில் ஒரு தனி இன்பம். வாயுள்வையகம் கண்டாள் என்பது 9-வது ஓவியம். "வாயுள் வையகங்கண்ட மடநல்லார், ஆயர்புத்திரன் அல்லன், அருந்தெய்வம், பாயசீருடைப் பண்புடைப் பாலகன், மாயன் என்று மகிழ்ந்தனர்" என்று வர்ணிக்கிறார் பெரியாழ்வார். "மண்ணும் மலையும் கடலும் உலகு ஏழும் உண்ணும் திறத்து மகிழ்ந்து உண்ணும் பிள்ளை!" என்று கண்டுகொள்கிறாள் யசோதை.

சித்திரம் 10.

கண்ணனைக் காணுக் கண் முதலியன பயனிலவென்றுகூறும் பதிகத்தில் திருமங்கையாழ்வார் பாடுகிறார்: "வெறியார் கருங்கூந்தலாய்ச்சியர்வைத்த, உறியார் நறுவெண்ணெய் தானுகந்துண்ட, சிறியானை, செங்கணெடியானைச்சிந்தித்தறியாதார், என்றுமறியாதார் கண்டாமே"

சித்திரம் 11.

"பூங்கோதையாய்ச்சி கடைவெண்ணெய் புக்குண்ண, ஆங்கவளார்த்துப் புடைக்கப் புடைபுண்டு, ஏங்கியிருந்து சிணுங்கிவிளையாடும் ஒங்கோத வண்ணனே சப்பாணி, ஒளி மணிவண்ணனே சப்பாணி!' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின் ஒவியமே 11-வது படம். ஓர் ஆய்ச்சியின் கையில் அகப்பட்டு கண்ணன் அடிபட்டதும் அப்பெருமானது திருவுள்ளமேயன்றி வேறில்லை. கண்ணனை அடித்த ஆய்ச்சி, தன்னைத்தானே அடித்துக்கொண்டதுபோலாயிற்று!

சித்திரம் 12.

"கண்ணன் உலகை ஆள, ராதை கண்ணனை ஆளுகிறாள்!" என்று ராதையின் பெருமை கூறப்படுகிறது. ஆனால் தத்துவமோ, ராதை ஜீவாத்மா, க்ருஷ்ணன் பரமாத்மா என்று வர்ணிக்கிறது. "ராதையின் ஆத்மா க்ருஷ்ணன், க்ருஷ்ணனின் ஆத்மா ராதை" என்று ப்ரஹ்மபுராணம் கூறுகிறது. "ராதையும் க்ருஷ்ணனும் ரஸமயமான அகண்ட ஸாகரம்: லீலையாகவே ஒளியும் நிழலுமாய் இரண்டுருவாய்க் காட்சியளிக்கின்றனர்" என்கிறது அதர்வவேதம். பிரிக்கமுடியாத இந்த தம்பதிகளைச் சித்திரிக்கிறது 12-வது ஓவியம்.

சித்திரம் 13.

யசோதை நந்தகோபர் இருவரும் ஸ்ரீமந் நாராயணனே தம்மிடம் மானிடனாய் வந்து வளர்ந்தருளினனென்று பரிபூர்ணமாயறிந்திருந்த ஞானிகளெனினும், வளர்த்தபாசம் கண்ணனை மகனாகவே நினைத்து, அவன் பிரிவாற்றாமையைச் சகிக்கமுடியாது அவர்களை உருக்கியது. அவன் சம்பந்தப்பட்ட சகலமான வஸ்துக்களையும்—உரல், கயிறு, கோல், வேணு ஆபரணங்கள், மயில் தோகை, மத்து—முதலியவைகளை ஒன்றுசேர்த்து ஓர் இடத்தே வைத்து, அப்பொருட்காட்சியைக் காணும்போது அவனையே காண்பதுபோன்ற அனுபவமேற்பட்டு, பிரிவாற்றாமை மேற்பட்டு உருகும் திவ்ய தம்பதிகளைக் காட்டுகிறது 13-வது ஓவியம்.

சித்திரம் 14.

அனைவருமறிந்த குசேலோபாக்யானத்தைச் சித்திரிக்கின்றது அடுத்த ஓவியம். அவல்கொண்டுகொடுத்து அருள்பெற்றுச் சென்ற கதை

தான். குருகுல சிநேகிதனை கண்ணனிடத்தில் ஐச்வர்யம் கோரியே குசேலரின் மனைவி அவரை அனுப்பினாள்; ஆனால் அவர் விரும்பியது கண்ணனுடைய அருளே: அதையும் அவர் வாய்விட்டுக் கேட்கவில்லை. ஸர்வாந்தர்யாமியான கண்ணனுக்குச் சொல்லியா தெரியவேண்டும்? பொருளையும் அருளையும் வாரி வழங்கினார்.

சித்திரம் 15.

பக்த பராதீனனான கண்ணன் யசோதையிடம் கட்டுண்டு நின்ற எளிமை தானென்னே! அதேபோல் அவளைப்படுத்திய பாடுதானென்னே! ஒரு நாளாவது நிம்மதியாகத் தயிர் கடைய விடுவானா? தயிரை மோராக்க வொட்டாது தடுத்து, மத்தையும் கயிற்றையும் பிடுங்கிக் கொள்வான். எல்லா ஆபரணங்களைப் போலவே இந்த மத்தும் கயிறும் அவனது சோபையை அதிகரிக்கச் செய்யுமாம். இந்த அழகைப் பார்த்துக்கொண்டே ஸகலத்தையும் மறப்பளாம் அன்னை.

உடுப்பி க்ருஷ்ணன் மத்துடன் தான் நித்ய ஸேவை கொடுத்தருளுகிறார் [போடோ படத்தில்ஸேவிக்கவும்.] திருவல்லிக்கேணியிலுள்ள உடுப்பி ஸ்ரீ க்ருஷ்ண மந்திரத்திலும் அங்ஙனமே. மத்துக் கண்ணனுக்குத் தேர் உத்ஸவம் செய்வது மிகவும் விசேஷம். அந்த முறையில் திருவல்லிக்கேணி கிருஷ்ணமந்திரத்திலும் ப்ரதி வாரமும் 'குட்டி ரதம்' மத்துக் கண்ணனைத் தாங்கி கோயிலுள் பவனி வருகிறது. உடுப்பி க்ருஷ்ணன், கோயில், ரதோத்ஸவம் முதலியவற்றைச் சித்திரிக்கிறது 15-வது ஓவியம்.

சித்திரம் 16.

ஆவணி ரோஹிணி என்றாலும், கோகுலாஷ்டமி என்றாலும் குழந்தைமுதல் தொண்டுக்கிழம் வரையில் ஒரே குதூகலம். குட்டிக் கண்ணனின் திருவடிகளை இழை கோலத்தில் இட்டு வாசலிலிருந்து பூஜையறைக்கு 'அழைத்துச் சென்று' கண்ணனுக்கு இஷ்டமான ஸகலவிதமான பக்ஷணங்களையும் பழங்களையும் அறுசுவையுண்டியுடன் ஸமர்ப்பித்து, மலரிட்டும் சொல்மாலையாலும் அர்ச்சித்து, மனம் குளிர்ந்து, பிறகு ஸ்ரீ க்ருஷ்ணப்ரஸாதமாகப் புசிப்பதே நாம் அனுஷ்டித்துவரும் ஸ்ரீ ஜெயந்திக்கொண்டாட்டமாகும். இதுவே 16-வது ஓவியம். இதுமட்டும் போதுமா?

"எங்கும் ஸ்ரீ க்ருஷ்ண விக்ரகம் பிரகாசித்துக்கொண்டே இருக்கிறது: களங்கமற்ற கண்களுக்கே அது புலப்படும்...உலகெங்கும் பரவியிருக்கும் சுத்த ஸத்வமான அன்பின் ஒளியே அது" என்ற சிந்தையுடன், நம்மாழ்வார் "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்றே உணர்ந்ததுபோல், எல்லாம் கண்ணன், எங்கும் கண்ணன் என்ற மனப்பரிபக்குவத்தை அடைய ஸ்ரீ ஜெயந்தி நன்னாளில் அனைவரும் ஆர்வம் அடைவோமாக! இருதயம் பரிசுத்தமாக அவன் பாதகமலங்களின்றி வேறு கதி ஏது? மனித உருவில் தோன்றிய, புண்டரீகாக்ஷனாகிய, ஸ்ரீமந் நாராயணனை, கண்ணபிரானுக்கு மேலான பரம்பொருளை அறியமுடியுமா?

இதுவே ஸ்ரீ ஜெயந்தி சிந்தனையின் ஒரு சிறு திவலை. ஓவிய மலர் மாலையும் சொல்மாலையும் கண்ணன் கழலிணையில் இனிது ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸர்வம் ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணமஸ்து.

தடக்கூத்து — சிறிய திருமடல்

கண்ணிலே மையிட்டு, அரையிலே மேகலை தரித்து, கச்சு அணிந்து, தலைமயிர் முடியை எடுத்துக்கட்டி, ஸர்வாபரண பூஷிதையாகப் பந்தடிக்கும் விளையாட்டிலே ஊன்றியிருந்தாள், பரகால நாயகி. அவ்வமயம், தாமரைக்கண்ணன் எனப்பேர்பெற்ற ஒருவன், அனைவரும் மகிழப் பறையறைந்துகொண்டு, "இக்கூத்துக்குத் தப்பிப்பிழைக்கும் பெண்டிரும் இத்தெருவே உண்டோ?" என்று சொல்லிக்கொண்டு இரண்டு குடங்களை மேலெடுத்து, குடக்கூத்து ஆடி நின்றமை கண்ட தோழி, கண்ணை அங்கே வைத்து, வாயாலே "வாராயோ!" என்றழைத்தாள்; நாயகியும் சடக்கென எழுந்து அங்கே சென்றாள். சென்றதும், மேனிநிறம் இழந்து, கைவளை கழலப்பெற்று, நிலைதடுமாறி நின்றாள். கூத்தாடும் கண்ணனைக் கண்டதுமுதல் அறிவு அழியப்பெற்று, க்ருஷ்ண விரஹத்தால் மடலெடுக்கவும் துணிந்தாள். இதன் விளைவே பிரதி வெள்ளிக்கிழமையும் ஒவ்வொரு கோவிலிலும் ஸேவிக்கும் "சிறிய திருமடல்' என்கிற திருமங்கையாழ்வார் திவ்யப்ரபந்தம்.

நாயகனுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாத நாயகி, அவனோடு கூடுதற்காகச் செய்யும் ஸாஹஸ ப்ரவ்ருத்திதான் மடல் எனப்படுவது. புருஷோத்தமனான பகவான் ஒருவனே ஆண்; மற்றெல்லாரும் பெண்ணே என்பது தத்துவம். அதனால்தான் ஆழ்வார் பிராட்டி நிலையடைந்து பாசுரமிடுகிறார். திருமங்கையாழ்வாரைப்போலவே நம்மாழ்வாரும் மடலூர்வதாகப் பேசுகின்றார், மாசறு சோதி என்னும் பதிகத்தில்.

இவ்விரு ஆழ்வார்களும் கண்ணனது குடக்கூத்தில் ஈடுபட்டதேபோல் வேறு எந்த ஆழ்வாரும் ஈடுபடவில்லை என்றே சொல்லலாம். பெரியாழ்வாரும் "குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல வெங்கோவே! மடங்கொள் மதிமுகத்தாரை மால் செய்பவல்ல என்னைந்தா!" என்று தாய்ப்பேச்சில்தான் பேசுகிறார்.

நம்மாழ்வாரோவெனில் "கோவிந்தன், குடக்கூத்தாடும் கோபாலன்' என்று அவன் லீலையைச் சொல்லிக் கூத்தாடி, தான் பேறு பெற்றதாகவும் தன்னைச் சேர்ந்த ஏழேழ்தலைமுறையினரும் மேன்மையடைந்ததாகவும்குதுகலிக்கிறார்." அவன் குணசாலியானாலும் சரி, குணஹீனனாயினும் சரி, என் நெஞ்சம அவனையல்லது அறியாது" என்கிறார். "பெண்மைக்குரிய ஒடுக்கமின்றி வீதி தோறும் ஸகலலோகமும் அவனைச் சொல்லும் பழிச்சொல்லால் தூற்றி, மடலூர்ந்தாவது, அவன் திருத்துழாய் மாலையை, அவன் தரப்பெற்று தலையில் அணிவேன்" என்கிறார். "உன் குடக்கூத்தைக்கண்டு அனுபவிக்கப் பெறாத பாவியேனுக்கு உன் திருவடிகளைக் காணும்படியாக ஒருநாள் கூட வந்து தோன்றமாட்டேன் என்கிறாயே!" என்றும் ஏங்குகிறார். குடக்கூத்தில் ஈடுபட்ட மாறன், கலியன் திருவடிகளே சரணம்.

தசாவதாரமும் பூர்ணாவதாரமும்

ஆழ்வார்களது அருள் வாக்கை ஆழ்ந்து நோக்கினால் யாவரும் ஏகமனதாய் ஸ்ரீக்ருஷ்ணனே எல்லா அவதாரங்களுக்கும் மூலகாரணன் என்றும், க்ருஷ்ணாவதாரமே பூர்ணாவதாரம் என்றும் கருதியதாக நன்கு புலப்படும்.

இதனையே பாத்மபுராணத்தில் சிவபெருமான்தெளியச்சொல்லியிருக்கிறார். "கண்ணபிரான் ஸர்வஜ்ஞர், ஸர்வாந்தர்யாமி; புதிது புதிதாய்க் காணப்படுபவர்: அவதாரங்களுக்கெல்லாம்மூலகாரணர்" என்று.

ஸ்ரீ த்யாகய்யர்வாள் இயற்றியுள்ள தசாவதாரக் கீர்த்தனையில் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, ந்ருஸிம்ஹ, வாமன, பரசுராம, ராம, பலராம-க்ருஷ்ண, ஆதி-பௌத்த, கல்கி, ஆக அவதாரமெடுத்த பரம்பொருள் ஸ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மமே என்று பாடியிருக்கிறார். ஆழ்வார்கள் கண்ணுக்கு எல்லாம கண்ணன் என்றது த்யாகய்யர் கண்ணுக்கு எல்லாம ராமனாயிற்று: அவ்வளவுதான்.

ராமனே கண்ணனான். எல்லாம் கண்ணன். எங்கும்கண்ணன்.

ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணமயம் ஜகத்!



தக்ஷிணத்வாரகை ராஜமன்னர்

உடுப்பி கிருஷ்ணன்

ஸ்ரீ ராம நவமி சிந்தனைகள்

ஸ்ரீராமநவமி நன்னாளிலே நமது சிந்தனைகள் அலையலையாக எழுகின்றன. குண ஸௌந்தர்யம, ரூபஸௌந்தர்யம், த்யாக ஸௌந்தர்யம்— இவையனைத்தும் ஒருங்கே ஒருருக்கொண்டு நம் கண்முன்னே காட்சியளிப்பதைக் கண்டு குதுகலிக்கின்றோம். அன்பர்களான பக்தர்களுக்குத் தம வடிவழகைக் காட்டி அவர்களை அகமகிழ்விக்கச் செய்யவும், விரோதிகளான ராவணுதிகளையும் வடிவழகைக் காட்டி வசீகரிக்கப் பார்ப்பதற்குமே மனித சரீரம எடுத்து, படாதன பட்டான் பகவான் எனபதும் புலனுகின்றது.

ராமனைக் கல்யாண குணக்கடலான புருஷோத்தமனுகவே நமது திவ்ய ப்ரபந்தங்கள அனுபவிக்கின்றன. "இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட கோயில்" என்று போற்றப் பெற்ற ஸ்ரீராமாநுஜரின் ஆழ்ந்த ராம பக்தியையும், ஆழ்வார்களின் ராம குணுனுபவத்தையும் நெஞ்சிலே தேக்கிய ஸ்ரீ காஞ்சீ மஹா வித்வான் அண்ணங்கராசார்ய ஸ்வாமி தமது அபூர்வ ராமாயணம் என்னும் அற்புத நூலில், வால்மீகி குறிப்பிட்ட ராம குணங்களைப் பதினுருக எண்ணிக் காட்டி, ஸ்ரீ ராம—சந்த்ரனின் இந்தப் பதினுறு கலைகளுக்குள் வால்மீகி ராமாயணம் முழுவதுமே அடங்கியுள்ளதாக மெய்ப்பிக்கிருர். கம்பனும் இங்ஙனமே ராம சரிதத்தை இணைத்துப் பார்த்ததுண்டு என்பது "கற்றை வெண்ணிலவு நீக்கிக் கருணையாம் அமிழ்தம காலும், முற்றுறு கலையிற் றுய முழு மதிமுகத்தினுனை" என்றயுத்த காண்டச் செய்யுட் பகுதியால் விளங்குகிறது. [16 குணங்களைப் பிறகு கவனிப்போம்.]

இராம கதையின் ஸாரத்தைப் பின்வருமாறும் கூறுவர். அதாவது, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுமே இதில் ப்ரதானமாகப பேசபபடுகின்றன; ராமனை இணை பிரியாது

அவனே தஞ்சமென்று லக்ஷ்மணனும் ஸீதையும் பின்பற்றுவதே போல், பொருளும் இன்பமும் தர்மத்தைத் துணையாகக்கொண்டு செயல் நடத்துவதே இனிது என்ற தத்துவம் போதிக்கப்படுகிறது.

படிப்பு வாஸனையே யற்ற நாட்டுப்புறத்து ஜனங்களிடையே ராமகதை மூன்றே பாதமுள்ள ஒரே வாக்யத்தில் முடிந்துவிடும்: "இராமக்கோனன் பெண்சாதியை, இராவணக்கோனன் கொண்டு போனன்; அனுமக்கோனன் அடித்துப் பிடித்துக் கொண்டு வந்தான்!" அவ்வளவுதான். ஆனல், அதன் உட்கருத்து எவ்வளவு அடிப்படையானது பாருங்கள்: "உள்ளம் உணர்ச்சி மயம்; உணர்ச்சிகளுள் தலையானவை — பெண்ணின் கற்பு, ஆணின் வீரம். பெண்மையின் உயிர்நாடியான கற்பைக் காக்க ஆண்கள் வீர வேலி போடவேண்டும்: இதுவே அறம். வீரன் ராமனின் உயிர் ஸீதை; ஸீதையின் உயிர் அவளது கற்பு. இதுவே ராமாயண ஸாரம்.

2. ராமாயண த்ரிவேணி.

வண்டுகள் மலரில் தேன் குடைவதுபோல் ரஸிகர்கள் ராமாயணத்தில் திளைக்கிருர்கள். இமயம் முதல் குமரிவரை ராமகதை பரவியிருக்கிறது: தமிழ் நாட்டில் கம்பராமாயணம், வடநாட்டில் துளஸி ராமாயணம், நாடெங்கும் வால்மீகி ராமாயணம். இவை தவிர, காளிதாஸர் இயற்றிய ரகுவம்சம், பவபூதியின் மஹாவீர சரிதம், (உத்தர ராம சரிதம்), தவிர, அத்யாத்ம ராமாயணம்— இப்படி ராம கதையே பாரத நாட்டின் தாரகமாகவும் உலகின் போக்கிஷமாகவும் விளங்குகின்றது.

ராமாயண த்ரிவேணி என்று ஒருவித ரஸானுபவம் உண்டு; இதில், ஆதி காவ்யமான வால்மீகி ராமாயணமும், அருட் காவியயான கம்பராமாயணமும், பக்தி காவ்யமான துளஸீ ராமாயணமும் கலந்து அனுபவிக்கப்படுகின்றன,—தேனும் பாலும் கன்னலும் கலந்த அமுதமாக.

பாடும் பக்த மணிகள் கோஷ்டியிலே துளஸிதாஸருக்கும் த்யாகய்யர்வாளுக்கும் சிறந்த ஸ்தானமுண்டு. நம் ஆழ்வார் ஆசார்யர்கள் வெளியிட்டருளிய பக்திரஸத்தை இவ்விரு பக்த மணிகளின் பாடல்களிலும் நன்கு காணலாம். வாழ்க்கையை உருவாக்கி ஆறுதல் அளிக்கவல்ல பக்திச் சுரங்கம் என்றே அவற்றைக் கூறலாம். தோட்டி முதல் தொண்டைமான்வரை, குடிசை முதல் அரண்மனை வரையில், மாவராலும், எங்கும் பாடப்பட்டு வரும் பெருமை வாய்ந்தவை அவை.

வால்மீகி மஹரிஷியின் அம்சமென்றுக்கொண்டா டப்படும் துளஸீதாஸரின் அருள் வாக்கைக் காண்போம்: "ஆழ்ந்த புதையல்களைப்போல அகத்தே மறைந்தும் புறத்தே சிதறியும் உள்ளன இராம கதைகளாகிற பலவகை மாணிக்கங்கள். அவை, சம்ஸாரமாகிய இரவின் தோஷம் நீங்குமாறு ஞான ஒளிபெற்ற சித்தமுடையோர் கண்களுக்கே புலப்படுவன ... மிக்க பரிசுத்தமானது ராமபிரானுடைய திருநாமம்; வேத சாஸ்த்ர புராண ஸாராம்சமானது. மங்களத்திற்கு இடமானது ... துளஸீதாஸனின் இந்த ராமகதையானது சுபகரமானது; கலியின் கொடுமையை அகற்றுவது; மேலும இக்கவிதா ரூபமான ப்ரவாகம் புனிதமான கங்கைக்கு நிகரானது...ரகுராமருடைய பெருமை சொல்லுக்கு அடங்காதது; ஆயினும் அவர் மகிமையைச் சொல்லாதவர் இல்லை. ஏனெனின், ராமபஜனை பல்வகைப் பயனையும் அளிக்கும் என்று வேதம் கூறுகிறது...பக்தர்பால் பற்றுக்கொண்ட பரந்தாமன் மானிட வேடந் தாங்கிப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து, அத்யந்த க்ருபையைக் காட்டுகிறான்...நான்மறைகள் இராமபிரானின் திவ்ய குணங்களை ஓதுவதில் கனவிலும் அயர்வை அறியாதவை...சகல விதத்திலும் பூஜிக்கத்தக்கவன் அந்தத் தாமரைக் கண்ணனாகிய பக்த ரக்ஷகன்...உள்ளும் புறமும் ஒருங்கே ஒளியுறவேண்டுமெனவிரும்புவாயானால் உனது நாவாகிய வாசல் நிலையின் மேல் ராமநாமமாகிய மணிவிளக்கை ஏற்றி வைப்பாயாக!"

கம்பன் காட்டும் அவதார ரஹஸ்யத்தைப் பின் வருமாறு கூறுவர்: "இராமன் அறத்தின் மூர்த்தியாய் வந்து அவதரித்தனன்; இளமையிலேயே ஜனங்களிடம் விசேஷ அன்புள்ளவனாயிருந்தான். அவர்கள் சாமான்யர்கள்தானே என்று நினைப்பதேயில்லையாம். இத்தகைய கருணையே பின்னாளில் த்யாகமாய்க் கனிந்து, பிறப்பு முதலிய எந்த வகையான வேறுபாடுகளையும் கருதாமல், வேடனையும வானரத்தையும் அரக்கனையும் சகோதரராகத் தழுவிக் கொள்ளுகிறது. சகோதர தர்மத்தை வளர்த்து உலகத்தை வாழ்விக்கும் தெய்விக சக்தி இராமனைப் போன்ற தியாகமூர்த்தி மூலமாக வெளிப்படுகிறது. தவிர, கம்பனது இராமாவதாரம் சரணாகதி சாஸ்திரமாகவும இலகுகின்றது.

வாலிவாயிலாகவும், சுக்ரீவன் வாயிலாகவும் ராமனின் அவதார தத்துவத்தை வெளியிடும் அழகு கவனிக்கத்தக்கது. "மேல் ஒரு பொருளும் இல்லாமெய்ப்பொருள் வில்லும் தாங்கிக் கால்தரையதோய நின்று கட்புலக்கு உற்ற தம்மா!" என்று மாணமடையும் நிலையிலிருக்கும் வாலி தன் மகனைப்பார்த்துக் கூறுகிறான். அதேபோல் ராமபிரானைச் சுக்ரீவன் முதன் முதலில் தரிசித்துச் சரணமடைந்ததை மூன்று பாடல்களால் வர்ணிக்கும் கம்பன், ராமனிடம் சுக்ரீவன் முதலில் உத்தம மனித நிலையைக் கண்டான் என்றும், பிறகு லட்சியபுருஷ நிலையை நோக்கினான் என்றும், கடைசியாக

அவதார நிலையை—புருஷோத்தம நிலையைத்—தேறினன் என்றும் படிப்படியாகக் கூறியுள்ளான். மானுடச் சட்டையைக் கண்டது முதல் நிலை. அன்புப் பார்வையுடன் நோக்கியது இரண்டாவது நிலை. தெளிந்த பார்வையில் தேவதேவன் மானுடச் சட்டையைக் கிழிக் காட்சியளிப்பது மூன்றுவது, கடைசி, நிலை. ஆக, உத்தம புருஷ நிலை, லட்சிய புருஷ நிலை, புருஷோத்தம நிலை என்ற மூன்று படிகளையும் சுக்ரீவன் வாயிலாக வெளியிட்டிருக்கிறுன் கம்பன்.

வால்மீகி கூறிய உத்தமபுருஷன் கதையைக் கம்பன் புருஷோத்தமன் கதையாக்கினன். இதற்கிடையே எத்தனை நூற்றுண்டுகள் உருண்டோடியிருக்கின்றன. வால்மீகிக்குப்பின் திவ்ய ப்ரபந்த ரஸாநுபவங்களிலும் காளிதாஸன் முதலான மகாகவிகளின் வர்ணனைகளிலும், வளர்ந்து வளர்ந்து, வால்மீகியின் உத்தமபுருஷன் கம்பனின் புருஷோத்தமனுகிறுன். 'காசில் கோற்றத்து இராமன் கதை' கம்பன் உள்ளத்திலே ஊறி, 'இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறுமாக்கதையாக'ப் பெருகுகின்றது.

இராம கதை யார் வாயினின்று வெளிப்பட்டாலும் அது உயர்ந்த தேசிய லட்சியங்கள் நிறைந்த நிகரற்ற பொக்கிஷச் சாலையாகவே அமைகின்றது. அளவற்ற காம்பீர்யம் வாய்ந்த ஞானகங்கை என்று வால்மீகி ராமாயணத்தை வர்ணித்தால், அந்தக் கங்கையினுல் போஷிக்கப் பெற்ற அற்புதக் காவியப்பூஞ்சோலை என்றே கம்பராமாயணத்தைக் குறிப்பிடலாம். அங்ஙனமே, பக்திப்பயிருக்கு உயிரளிக்கும் இசைவெள்ளமாகிய நீர்ப்பாசனம் என்றே துளஸீ ராமாயணத்தைக்கொண்டாடலாம். இந்த மூன்று ராமாயண ரத்தினங்களும் ஸம்ஸ்க்ருதம், தமிழ், ஹிந்தி என்ற மூன்று செல்வப்புதல்விகள் அன்னை பாரத தேவிக்குச் சமர்ப்பித்த மகுடமணிகளல்லவா?—முறையே மஹாகாவிய, நாடக காவிய, இசைநாடக அணிகளாக!

''கதைதரு முனிவன் செஞ்சொற் கவிக்கலை தந்த கம்பன்,
விதவித நீதி சொல்லும் வித்தகத் துளஸி தாஸன்,
மதிமிகு புலவர் ஏட்டு மக்களெல் லாரும் போற்றித்,
துதிமிகும் இராம நாமம் சொல்லுவார் வெல்லு வாரே''

''வாழிய இராமன் வீரம், வாழிய சீதை கற்பு,
வாழிய இளவல் சேவை, வாழிய பரதன் அன்பு,
வாழிய அனுமன் ஆற்றல், வாழிய குகன்வ ணக்கம்,
வாழிய உலக மெல்லாம் அறநெறி வாழ்க மாதோ!

— சுத்தானந்தபாரதி — ''பாரத சக்தி''

3. ஆழ்வார்கள் உகந்து அனுபவித்த இராமன்

ஆழ்வார்கள் பாசுரங்களில் இராமபிரானைப்பற்றி அற்புதமாக விசேஷணங்களிட்டு அருளிச்செய்யப்பட்டுள்ள வாக்குகள் பலபல. ஒருசமயம் ஸ்ரீ காஞ்சி ப்ர. அ. ஸ்வாமி 320 ராமகதாம்ருத, குணானுபவ சந்தைகளைத் தொகுத்து வெளியிட்டருளினார். அதனின்றும் சில ஸாரமான குறிப்புகளை அன்பர்களுக்கு எடுத்துக்காட்டுகிறோம்.

ஆழ்வார்கள் வாக்கில் ராமனைப்பற்றியோ, அவனது குணத்தையோ சேஷ்டிதத்தையோ குறித்துவந்துள்ள சந்தைகளைப் பின்வருமாறு கணக்கிடுகிறார்:—பொய்கையார் 4, பூதத்தார் 5, பேயார் 3, திருமழிசைப்பிரான் 26, நம்மாழ்வார் 55, மதுரகவிகள் 0, குலசேகரர் 33, பெரியாழ்வார் 40, ஆண்டாள் 10, தொண்டரடிப்பொடி 3, திருப்பாணாழ்வார் 2, திருமங்கை மன்னன் 139.—ஆக மொத்தம் 320 இடங்களில் இராமபிரானைப்பற்றிய பிரஸ்தாவம் வருகிறது. பாசுர எண்ணிக்கையில் திருமங்கையாழ்வார் முதல் ஸ்தானமும், கதாஸாரத்தில் குலசேகராழ்வார் முதன்மை ஸ்தானமும் பெறுகின்றனர்.

இராமனது விஜயஸ்ரீயையே அதிகம் உகந்து ஆழ்வார்கள் பாடியிருப்பதிலிருந்து, சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியான், பொல்லா அரக்கர்களைக் கிள்ளிக் களையவே வந்துதித்தான்போலும் என்று மேலெழுந்த வாரியாகத் தோற்றக்கூடும். அவதார ரஹஸ்யம் இதுவன்று என்று முதலிலேயே விளக்கியுள்ளோம்.

குலசேகராழ்வார், பெருமாள் திருமொழியில், பத்தாம் பதிகத்தில் அனுபவிக்கும் ராமகதாம்ருதத்தைப் பருகுவோம் (முதலாயிரம்—741 முதல் 751 வரை.) இத்திருமொழி ஸ்ரீராமாயண ஸங்க்ரஹமெனப்போற்றப்படுகிறது; இதனில் ஸ்ரீராமசரிதத்தை வால்மீகி பேசி அனுபவித்தாற்போலவே ஆழ்வாரும் பேசியனுபவிக்கிறார். பகவான் சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்தது முதல், பரமபதம் புக்கது இறுதியாக, ராமகதை முழுவதையும் சுருக்கமாக அமைக்கிறார், இனிய தமிழ்மாலையாக.

ஸ்ரீராமாவதாரத்திலே பகவான் எழுந்தருளியிருந்த இருப்பை நாம் கேட்டு அனுபவிக்க இயலுமேயொழிய நேரில் ஸேவிக்க முடியாதன்றோ! அக்குறை தீர, எக்காலத்திலுமுள்ளார் அனுபவிக்கைக்காகவே தில்லை நகரில் திருச்சித்திரகூடத்திலிருந்ததுபோலவே வீற்றிருக்கின்றான்—அதுவும், அனுமனுடன்கூட. [இங்கு நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கிய விஷயம் யாதெனில்: ஹநுமான் பால்யத்திலேயே ப்ரஹ்மாவிடம் சிரஞ்ஜீவி வரம்பெற்றவர். பிறகு, ஸ்ரீராமபிரானிடம், உலகில் ராமகதை உள்ளளவும் தாம் ஜீவித்து ராமபக்தி பண்ணும்படியான வரத்தைக் கோரிப் பெற்றவர். இவ்விருவிதமாகவும் சிரஞ்ஜீவியான இந்தப் பரமபக்த சிகாமணி, ஸ்ரீராமன் பரமபதத்துக்குத் திருப்பியெழுந்தருளும்போது, அவரைவிட்டுப் பிரியமாட்டாது மிகவும் மனம் வருந்தினாராம்.

இத்தகைய பக்தமணியைத் தாமும் விடமாட்டாமல் ஸ்ரீராமன் இவருடனே தில்லைநகர்த் திருச்சித்திரகூடத்தில் நித்யவாஸம் செய்தருளுகிறாராம்.]

பெரியாழ்வாருக்குத் திருக்கோட்டியூரே ஆய்ப்பாடியானதுபோல் இவ்வாழ்வாருக்குத் தில்லைநகரே திருச்சித்திரகூடமாகின்றது. அதுமட்டுமா? ராமகதையின் முக்ய கட்டங்களனைத்தும் அங்கேயே அவர் அகக்கண்முன் காட்சியளிக்கின்றன. காணுங்கள் ஒன்றன் பின் ஒன்ருய். எட்டாம்பத்தில் ராமனைப் பரம்பொருளாக உணர்ந்த கௌஸலையின் வாக்கினால் ராமனுக்குத் தாலாட்டுப் பாடினார். ஒன்பதாம் பத்தில் ராமனைத் தன் மகனாகவே பாவித்த தசரதர் வாக்கினால் பிரிவாற்ருமை தாங்காது புலம்பினார். இப்போது பத்தாம் பத்தில் ராமகதை முழுவதையும் ஸங்க்ரஹிக்கிருர்.

(741) பெரிய காளமேகம் போன்ற வடிவமுடைய செந்தாமரைக் கண்ணன் ஸ்ரீ ராமனென்னும் திருநாமத்துடன் சூர்ய வம்சத்துக்குக் குலவிளக்காய் மஹாவீரனாய்த் தோன்றியருளினான். அனைத்துலகும் விளக்குஞ் சோதியே அங்ஙனம் அவதரித்தது. (742) முனிவன் கட்டளைப்படி பெண்ணென்று பாராமல் தாடகைதன் உரத்தைக் கீறி, வல்லரக்கர் உயிருண்டு, மந்திரம் கொள் மறைமுனிவன் வேள்வி காத்த மைந்தன் ஸ்ரீ ராமன். (743) சிவதனுஸ்ஸை முறித்து உத்தம லக்ஷணம் நிறைந்த வனிதா ரத்னத்தை மணந்து, பரசுராமனை வென்று அவரது வில்லைப் பெற்ற மஹாவீரனே எம் ஸ்வாமி. (744) கைகேயி சொல்லால் ராஜ்யத்தைத் துறந்து, கங்கையைக் குகன் உதவியால் கடந்து, வனம் புகுந்து, பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து, சித்திரகூடத்து இருந்தவன் எம் ஸ்வாமி. (745) விராதனைக் கொன்று அகத்தியரிடமிருந்து விஷ்ணுதனுஸ்ஸைப் பெற்று சூர்ப்பணகைக்கு அங்கபங்கம் செய்து, கரதூஷணர்களை நிரஸித்து, மாய மானை மடியச்செய்த மஹாவீரன் எம் ஸ்வாமியே. (746) பிராட்டியைப் பிரிந்து தளர் வெய்தி, ஜடாயுவை வைகுந்தத் தேற்றி, சுக்ரீவனுடன் ஸ்னேஹஞ் செய்துகொண்டு அவனது விருப்பப்படி வாலியை வதைத்து, இலங்கையை ஹனுமனைக் கொண்டு எரிப்பித்தவனும் எம் ஸ்வாமியே. (747) மலையால் அணைகட்டி கடல் கடந்து, அக்கரை சேர்ந்து, இராவணனுயிரின் உயிரைக் கவர்ந்து, விபீஷணனுக்கு முடி சூட்டி, பிராட்டியுடன் இனிமையாகச் சேர்ந்த செல்வன் எம் ஸ்வாமி. (748) அயோத்திக்கு மீண்டு வந்து அரசு எய்திய பட்டாபி ராமன், அகஸ்தியர் வாயால் ராவணனின் பூர்வ விருத்தாந்தங்களைக் கேட்டு, பிறகு, மிதிலைச் செல்வி உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள் லவகுசர்களுடைய செம்பவளவாயால் தனது சரித்திரமான ஸ்ரீ ராமாயணத்தைக் கேட்டருளியவனுவன். (749) மிக்க தபஸ்ஸுடைய சம்புகனைக் கொன்று, பிராம்மண குமாரனை மீட்டு, அகத்தியரளித்த ரத்னஹாரத்தைப் பூண்டு, சத்ருக்னனைக் கொண்டு லவணாசுரனை

வானேற்றி, துர்வாஸருடைய சாபத்தால் லக்ஷ்மணனைத் துறந்து தவித்தவன் எம் ஸ்வாமி. (750) இளைய பெருமானைப் பிரிந்ததனால் தரிக்கமாட்டாமல் மிக்க க்லேசமடைந்த இராமபிரான் பரமபதத்திற்குத் திரும்ப முற்பட்ட போது அயோத்தியிலுள்ள சராசரங்களையும் வைகுந்தத்து ஏற்றினான். கருடாரூடனாக, சதுர்புஜத்துடன் பரமபதம் சென்று திவ்ய ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளினான் ஸர்வேச்வரன். அந்த இருப்பில் ஒன்றும் குறையாமல் அவ்வாறே நமக்காக இன்று தில்லை நகர்த் திருச்சித்திர கூடத்தில் நித்யவாஸம் செய்தருளுகிறார். (751) பல சிருதி—"குலசேகரன் சொல் செய்த நல் இயல் இன் தமிழ் மாலை பத்தும் வல்லார் நலந்திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே."

இராமபிரானின் விஜயஸ்ரீயைத் தம்முடைய வாயாலே பேசுவதைக் காட்டிலும் தோற்றுப்போன ராக்ஷஸர்களின் வாயாலே பேசியனுபவித்தல் பாங்கு எனத் திருவுள்ளம் பற்றி, அவ்வகையிலே இரண்டு பதிகம் பாடுகிறார் திருமங்கை மன்னன். (பத்தாம் பத்து—இரண்டாந்திருமொழி, மூன்றாந்திருமொழி.) பரம பக்தரான ஆழ்வார் தம்மை விரோதி கோஷ்டியிலே நிறுத்திப் பாடுகிறார், விரோதிகளையும் ஈடுபடுத்தும் வடிவழகு பகவானிடம் நிறைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட. "தடம் பொங்கத்தம் பொங்கோ", "குழமணி தூரம்" என்ற விரண்டும் தோற்றவர்கள் தங்கள் தோல்விக்கு ஈடாக பறையடித்து ஆடும் இருவகைக் கூத்து என்பர்.

எந்த ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை நோக்கினாலும் ரகுவீரனின் விஜயஸ்ரீயைத்தான் மிகுதியாகக் காண்கிறோம். படைபொருதான், சரந்தொட்டான், மராமரஞ்சாய்த்தான், சிலை வளைத்தான், இலங்கை செற்றான், மலையதனாலணை கட்டினான், வேள்விகாத்தான், மாயமான் மாயச்செற்றான், அசுரர்குலங்களைந்தான்,—என்பது போன்ற வாசகங்களையே நிரம்பவும் காண்கின்றோம்.

இவற்றினிடையே ராமனுடைய குணங்களைப்பற்றிய ஈரச்சொற்களும், அவனது திருமேனியழகைக் குறித்த வாசகங்களும் அங்கங்கே வருகின்றன. (இவற்றையெல்லாம் ஆழ்ந்து நோக்கியே நம் ஆசார்யர்கள் ராமனை குணக்கடலாக வர்ணித்தனர். இதனை அபூர்வ ராமாயண ஸாரத்தில் காணலாம்.) "தயரதன் பெற்ற மரகத மணித்தடம், என்னாருயிர்க்காகுத்தன் நாட்டை நலியு மரக்கரை நாடித்தடிந்திட்டு நாட்டையளித்து உய்யச்செய்தான்; சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம் வில் ஒண்மையுடைய வுலக்கை ஒள்வாள் தண்டு கொண்டு புள்ளூர்ந்து உலகில் வன்மையுடைய வரக்கரசுரரை மாளப் படை பொருத நன்மையுடையவன்; காய்சினப் பறவை யூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல் மாசின மாலி மாலி மானென்றங்கவர் படக் கனன்று முன்னின்ற காய்சின வேந்தன்"—இது நம்மாழ்வார்

வாக்கு. "சிலையினாலிலங்கை செற்ற தேவனே தேவனாவான்" என்பது தொண்டரடிப்பொடியாழ்வாரின் ஸித்தாந்தம். "சீற்றமிலாத சீதைமணாளன், சீரணிந்த தோழமை கொண்டவன், விபீடணற்கு நல்லான், சிற்றவை பணியால் முடி துறந்தவன் பரதனும் தம்பி சத்ருக்கனனும் இலக்குமனோடு மைதிலியும் இரவு நன்பகலும் துதிசெய்ய நின்றான், அவனே மனத்துக்கினியான்! இப்படியே ஆழ்வார்களின் இதயகீதம் ரீங்காரம் செய்கின்றது.

ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய திவ்யப்ரபந்தப் பாசுரங்களிலிருந்து, பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை ராம கதையை நம்போல்வார்க்கென்றே தொகுத்தளித்துப் பரமோபகாரம் செய்தருளியுள்ளார். அந்தப் பாசுரப்படி ராமாயணம் நாம் தினமும் அனுஸந்தித்துப் பயன்பெறும்வண்ணம் மிகச் சுருக்கமாயுள்ளது. (181 வரிகள் தான்). இதை அனுஸந்தித்தால் ராமாயணம், நாலாயிரம் இரண்டையும் அனுஸந்தித்த பலனுண்டு என்பர்.

4. அபூர்வ ராமாயண ஸார ஸங்க்ரஹம்.

பதினாறு திருக்குணங்களைச் சொல்லி, "இத்திருக்குணங்கள் அமைந்த ஒரு மனிதன் இப்போது இவ்வுலகிலுளனாயின் எனக்குச் சொல்லியருளவேணும்" என்று நாரத முனிவரிடம் வால்மீகி வினவினர். மிக மகிழ்ந்து விடை கூறலானார் நாரதர். பதினாறு கலைகளுடைய ராம சந்திரனே அந்த குணக்கடல் என்று வர்ணிக்கமுற்பட்டார். இதுவே ஸ்ரீராமாயணத் தொடக்கம்.

"குணவாந், வீர்யவாந், தர்மஜ்ஞ: என்று மூன்று குணத்தினுடைய விவரணமே ஸ்ரீராமாயணம்" என்று லோகாசாரியன் தனித்வயம் என்ற நூலில் அருளிச்செய்ததை யடியொற்றியே இந்தப் பதினாறு குண விளக்கமான அபூர்வ ராமாயண குணாநுபவம் செய்யப்பட்டுள்ளது.

1. க: குணவாந்? என்பது முதற்கேள்வி. சிறந்த குணங்களையுடையவன்யாவன்? என்று பொதுவாகக் கேட்பதாகத் தோன்றும். ஆனால், தன் மேன்மை பாராமல் தாழ்ந்தவர்களோடும் புரையறக் கலந்து பரிமாறும் ஸௌசீல்யத்தையே 'குணம்' என்று சொல்வர் அறிஞர். இந்தச் சீலகுணம் வெளியான ராமசரிதைகளைக் காணுங்கள்: (1) ஸ்ரீமந்நாராயணன் இராமபிரானாகத் திருவவதரித்ததே சீலகுணத்தின் பரீவாஹமாகவுள்ளது. இராமபிரானுடைய சீலகுணத்திற்கு விசேஷித்த இலக்கு குஹப்பெருமாள் போல்வார். (2) கங்கைக் கரையில் குகனைத் தம்பியாகப் பெற்றார். (3) பம்பைக்கரையிலே சுக்ரீவனைத் தம்பிமாகப் பெற்றார். (4) கடற்கரையிலே விபீஷணனைத் தம்பிமாகப் பெற்றார். "நம் தந்தை எழு புத்திரர்களைப் பெற்றானாயினன்" என்று குதுகலிக்கிறானன்றோ! (5) தவிர, பரமபவித்ரமான பரத்வாஜாச்ரமத்தில் அமுது செய்ததுபோலவே பகவான் சபரி திருமாளிகையிலும் அமுது செய்தது என்ன நீர்மை! (6) இதெல்லாவற்றுக்கும்

சிகரம் வைத்ததுபோல் ராமனது ஸௌசீல்யம் ராவணனிடமும் பிரகாசிக்கவில்லையா— "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என்று கருணைகாட்டியபோது! (7) தவிர, "நாடில்லை, காடுதான்!" என்றபோதும் வெறுப்படையாது பரமானந்தம் கொண்டதும் எத்தகைய பெருந்தகைமை! (8) இது மட்டுமா? ரிஷிகள் பக்கலிலே தாழநின்ற சீலம் நெஞ்சை யுருக்குவதாகும். இவைபோல் பலபல.

2. க: வீர்யவாந்?—வீர்யமுடையவன் யாவன்? ஜயஜய மஹாவீர! என்றே தொடங்குகிறது ரகுவீர கத்யம். வீரராகவனைகவும் விஜயராகவனைகவுமே ராமனை ஆழ்வார்கள் வர்ணிக்கிருர்கள். இராவணனே வியந்து போற்றும் வீர்யம் இராமனுக்குள்ளது. மூலபலம் திரண்டவன்று இராமனுடைய அதிமாநுஷப்போர் வல்லமையைப் பேச வால்மீகி முனிவரும் தடுமாறுகின்ருர். கரனுடைய வதத்திலும் இராமன் அஸஹாயசூரன் என்பது வெளிப்பட்டது. இத்தகைய போராற்றல்பெற்ற பெருவீரனுக்கு இராவணன் ஒரு பதார்த்தமோ? ஒரே அடியில் அவனைத் தொலைத்திருக்கக்கூடும்; ஒருவேளை திருந்தி வருவனே என்று பார்த்தார். அது ஈடேறவில்லை; மாண்டொழிந்தான். "இவனுடலைக் காக்கையும் கழுகும் தின்னவிடாமல் பெரியோர்களுக்குச் செய்கிற க்ரமத்திலே ஸம்ஸ்காரம் செய்யவேண்டும். விபீஷணு! அதை நீ செய்வாயாக; அன்றி நான் செய்தே தீருவேன்" என்கிருர் பெருமாள். "இப்போது இவனுக்கு நாம் செய்யக்கூடிய நன்மை இதுவே" என்கிருர். விரோதியையும் திருத்தமுயல்வது; அது கைகூடாவிடில் கடைசியாகக் கொன்றெழிப்பது—இதுவே ஸத்ய பராக்ரமம். தவிர, பகவான், தான் விகாரப்படாமலேயே ஸகல சேதநாசேதனங்களையும் விகாரப்படுத்துவதுதான் வீர்யம் என்றும் கூறுவர்.

3. க: தர்மஜ்ஞ:?—தருமமறிந்தவர் யார்? இரக்கமே பரமதர்மமென்பது ராமபிரானுடைய கொள்கை. கருணுகாகுத்ஸ்தன் என்றே ராமனுக்குத் திருநாமமிடுகிருர் ஸ்வாமி தேசிகன். "இலங்கை மெறிந்த கருணுகரன்" என்கிருர் செயங்கொண்டார். கம்பரும் "கடுமையார் கானகத்துக்கருணையார் கலிஎக" என்றும், "கருணையங்கடல் இடந்தனன் கருங்கடல் நோக்கி" என்றுமே குறிப்பிடுகிருர். இராமனது அறக்கருணையும் மறக்கருணையும் அங்கங்கே பெருக்கெடுத்தோடும் சந்தர்ப்பங்களைக் காண்கின்ருேம். பிறர்படும் துயரைக்கண்டு தானும் துயருற்றிருக்கும் கருணையைப் பலவிடங்களில் காண்கிருேம். இதுதான் தயாளுவான புருஷனின் மிகச்சிறந்த தன்மையாகும்; பரதுக்க துக்கித்வமே குணங்களில் தலையானது. தவிர, பிராட்டி பெருமாளை தர்மஜ்ஞர் என்று சொல்லி உடனே அதனை விவரிக்கிற வார்த்தையாக "சரணுகதவத்ஸல:" என்றுரைத்ததை உற்று நோக்கும்போது சரணுகத பரித்ராணமே, அதாவது அடைக்கலம் புகுந்தவர்களைக் காத்தருள்வதே, இவ்வவதாரத்தில் பகவான் கைப்பற்றிய தருமமாகும் என்பது தெளிவாகிறது.

4. க: க்ருதஜ்ஞ:?—? க்ருதஜ்ஞதாகுணம் நிறைந்தவன் யார்? ஏதேனுமொருவிதத்தில் யாரேனும் ஒருதவி செய்தாலும் அதனால் எப்போதும் உள்ளம் பூரித்திருப்பதாகவும், நூற்றுக்கணக்கான தீங்குகளிழைத்தாலும் அவற்றைச் சிறிதும் நெஞ்சிற்கொள்வதில்லையாகவும் ஸ்ரீராம குணதிசயம் கூறப்பட்டுள்ளது. மனித பாவனைக்கேற்ப எல்லாவற்றையும் நடித்துக் காட்டுகிறான் பகவான். ஆஞ்சநேயனைச் சுக்ரீவன் பகவானிடம் அனுப்பியது அவனுடைய காரியத்திற்காகவேயாயினும், இராமன் அங்ஙனம் கொள்ளாது, அதனைத் தனக்குச் செய்த பேருதவியாகக் கொண்டே, சுக்ரீவனிடத்துப் பேரருள் புரிந்தனன். அதேபோல், விபீடணன் தன்னிருப்பிடம் தேடிவந்த ஒரு சிறிய செயலையே பேருதவியாகக்கொண்டு, அவனிடத்து மிக்க பரிவு காட்டியருளினன் இராமன். "விபீஷணோவா ஸுக்ரீவ! யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்று பெருமாள் கூறியதன் கருத்தென்ன? விபீஷணனுக வேடம் பூண்டு மகாபாவி ராவணனே வந்திருப்பினும் அவனையே தாராளமாக அழைத்து வா!—என்று ராவணன் செய்த அபராதத்தையும் கருத்திற்கொள்ளாது சரணாகதவத்ஸலன், இந்த அபராதி இப்போதாவது வந்தானே என்ற க்ருதஜ்ஞதையோடு, கூறியருளினன்.

5. க: ஸத்ய வாக்ய:?—ஸத்ய வாக்யன் யாவன்? "உள்ளதை உள்ளபடியே கண்டு, உள்ளபடியே சொல்வதுதான் ஸத்யம்" என்று சாதாரணமாகச் சொல்வர். ஆனால் ஸ்ரீ பாஷ்யகாரர் "தான் கண்டபடியே சொல்வது ஸத்யம்" என்றார் கீதாபாஷ்யத்தில். வ்யாஸ ஸ்மிருதி இன்னும் ஒருபடி செல்கிறது, "ஸத்யம் பூத ஹிதம் ப்ரோக்தம்" என்ற கொள்கையால்: அதாவது கண்டதைக் கண்டபடியே சொல்வது பிறருக்கு ஹிதமாயிருந்தால் நன்று; அன்றி, அஹிதமாயிருந்தால் அது ஸத்யமாகாது! ஸத்ய வசனத்தால் அனர்த்தம் விளைவதாயின் அது அஸத்ய வசனமே என்பது நூற்கொள்கை. ஆக "இன்னது ஸத்யம் இன்னது அஸத்யம் என்று லேசாகக் கண்டுபிடிக்க இயலாது. ராமனுடைய ஸத்யவாதித்வம் அவனது வாக்கிலேயே வெளிவந்திருக்கிறது. "ராமோ த்விர்நாபி பாஷதே" என்று கைகேயியிடம் ஆணையிட்டபோதும், சுக்ரீவனிடம் ஸத்யத்தின் மேலாணையிட்டு உறுதி கூறியபோதும் இதைக் காண்கிறோம். பிறருடைய வாக்கினாலும் ராமனுடைய ஸத்யவாதித்வம் வெளியாகியிருக்கிறது. "ஸத்யேந லோகாந் ஜயதி" என்று ராகவனை தசரதன் கொண்டாடுகிறான். அந்த ஸத்ய வாக்கின் பெருமையே ராமன் மனித பாவனையிலிருக்கும்போதே ஜடாயுவுக்கு முக்தி யளித்ததாம்: பரத்வத்தினாலன்றாம். "வநவாஸோ மஹோதய:" என்ற வாக்கை ராமன் சொன்னபோது அதில் பொய்மை சிறிதுமில்லை; வனவாஸ குதூகலம் ஸத்யமாகவே யிருந்தது என்பது ராமனது ஸத்யவாதித்வத்தையே காட்டுகிறது.

6. க: த்ருட வ்ரத:?—திடமான விரதமுடையவன் யாவன்; இராமபிரான் எதிலும் மிக்க உறுதி யுடையவன். எல்லாக் காரியங்

களிலுமே திண்ணமான ஊக்கமுடையவனாயினும், இராமன் முக்யமாகக் கொண்ட காரியம் ஒன்றே—அதுதான் சரணாகத பரித்ராணம். ஆச்ரித ரக்ஷணத்தில் இராமபிரான் திடமான விரத முடையவனென்பது பின்வரும் வாக்கால் தெளிவாகும்; "ஸீதே! நான் என் உயிரைவிட்டாலும் விடுவேன், உன்னையும் இலக்குவனையும் விட்டாலும் விடுவேன்; ஆனால் ஒருவர்க்குப் பிரதிக்ஞை செய்து கொடுத்து, அதைத் தவறுவதென்பது முடியாது. அதிலும் பிராம்மணர்களுக்குச் செய்த பிரதிக்ஞையென்றால் எள்ளளவும் தவறமாட்டேன்." இதேபோல், விபீஷணனை அங்கீகரிக்கும் விஷயத்திலும் இராமனது உறுதிப்பாடு வெளிப்படுகிறது: "சரணாகதனான இவனை அங்கீகரிப்பதனால் நமக்குத் தோல்வியே உண்டாவதானாலும், அதற்கு மேல் மரணமே நேர்வதானாலும் அதுவே எனக்கு உடன்பாடு...இவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் சரணம் என்ற சொல்லைச் சொன்னதே போதும் ... சிபிச்சக்கரவர்த்தியின் சரித்திரம் மறந்து போயிற்றோ..." என்று இப்படிப் பலபல சொல்லி, தன் உறுதியை வெளியிட்டு, "ஸ்ரீராம சரம ச்லோகம்" என்று ப்ரஸித்தி பெற்ற "ஸக்ருதேவ ப்ரபந்நாய' என்பதை அருளிச் செய்தான். "ஏதத் வ்ரதம் மம" என்று தனது திட வ்ரதத்தை நிரூபித்தான்.

7. சாரித்ரேண ச கோ யுக்த?—நன்னடத்தை நல்லொழுக்கம் உடையவன் யாவன்? பெரியோர்களைப் பணிதல், தந்தை தாய் பேணுதல், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை வழுவறச் செய்தல், தெய்வ பக்தியுடைமை, பிறரை நலியாமை, பிறர் பொருள் தாரமென்றிவற்றை நெஞ்சாலும் நினையாமை, என்று இனைய ஒழுக்கங்களுக்குப் பொதுப் பெயரான பெயர் சாரித்ர மென்பது. இவையெல்லாம் ராமபிரான் பக்கலிலே செவ்வனே குடிகொண்டிருக்குமழகை அளவின்றி அனுபவிக்கலாம். "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்று மானிடவேடம் பூண்டு நடிக்கும் இவ்வவதாரத்தில் அவரது சரித்ரம் அதற்கிணங்கவே அமைந்திருக்கிறது. இராமனது செயல்களுக்கெல்லாம் பெரியோர்களுடைய நியமனமே அவ்வப்போது காரணமாயிருந்தது. இராமனது மாத்ருபக்தி கைகேயியினிடத்தும் எவ்வளவு ஆழப் பதிந்திருந்தது என்பது அவரது வாக்கினாலேயே தெளிவாகிறது. ராமன் அனுட்டான சீலன் என்பது 'கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம்" என்ற முனிவன் வாக்கினால் ஸ்பஷ்டமாகிறது. ராமனே பரமாத்மாவாயிருப்பினும் மனுஷ்ய பாவனைக்குத் தக்கபடி அவன் தேவதாராதனம் செய்து காட்டினான். "த்யாயந் நாராயணம்தேவம்" என்பது வால்மீகி வாக்கு. பிறரை நலியாமை என்ற சரித்ரமும் ராமனிடமுண்டு; ராக்ஷஸவதம் 'விநாசாய ச துஷ்க்ருதாம்' என்ற தர்மப்படியே நடந்தது. ராமனது ஏகபத்நீ வ்ரதம் ப்ரஸித்தம். இத்யாதி.

8. ஸர்வபூதேஷு கோ ஹித:?—ஸர்வபூதங்களிடத்தும் ஹிதபரனாயிருக்குந்தன்மையன் யாவன்? உலகில் அன்பர்களை ப்ரியபரர்

என்றும் ஹிதபரர் என்றும் இருவகையாகப் பிரிப்பர்; தாயாரை ப்ரியபரை என்றும் தந்தையை ஹிதபரர் என்றும் கூறுவர் அப்ரியமான ஹிதங்களைச் செய்யும் தந்தையின் ஸ்தானத்தில் பகவான் இருப்பதைப்பற்றியே இந்த வினா ("ஸர்வபூதேஷு-கோ ஹித:?") எழுந்தது. ராஜனின் தண்ட நீதியும் மருத்துவனின் கொடிய சிகிச்சையும் ஹிதபுத்தியினாலேயே நடப்பவை. இராமபிரான் அரக்கர் குலங்களுக்குத் துக்கங்களை விளைவித்தது ஒரு புறம் இருக்கட்டும்; அந்தரங்க அன்பர்களுக்குங்கூட கஷ்டங்களை விளைத்ததாகக் காண்கின்றோம். உதாரணமாக, சொன்னசொல் தவறிய சுக்ரீவன் விஷயமாக பகவான்கடுங் கோபங்கொண்டு லக்ஷ்மணனுக்கு இட்ட கட்டளையும், ராவண வதமான பிறகு பிராட்டிக்கு அக்னிப்ரவேசம் செய்வதற்கு முன்பாகப் பெருமாள் சொன்ன கடுஞ்சொற்களும் ஹிதவகுப்பில் சேர்க்கத்தக்கவையே. ஸர்வேச்வரனுடைய தன்மையை நெஞ்சிற் கொண்டே வால்மீகி இந்தக் கேள்வியைக் கேட்டதாகத் தெரிகிறது. கஷ்டங்கள் பகவத் ஸங்கல்பத்தினாலேயே நேருகின்றன: காருணிகனான பகவானால் அவை ஹித புத்திபடியாகவே விளைக்கப்படுகின்றன. இது சாஸ்த்ரஸித்தம்.

9. க: வித்வாந்?—எல்லாம் அறிந்தவர் யார்? இராமபிரானின் வித்வத்தன்மை வாசாமகோசரம் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்று பகவான் நடித்த மனுஷ்ய பாவனைக்குச் சேரவே ஸ்ரீ ராமாயண கதைகள் பெரும்பாலும் நடைபெற்றிருக்கின்றன: இதையொட்டியே இந்தக் கேள்வி கேட்கப்படுகின்றது. வஸிஷ்டர் பக்கலிலே சிஷ்ய வ்ருத்தி செய்து ஸகல வேதங்களையும் சாஸ்த்ரங்களையும் ஓதியுணர்ந்து இளமையிலேயே வித்வானென்று பேர்பெற்றவன் ராமபிரான். அகத்திய முனிவர் பக்கல் ஆதித்ய ஹ்ருதயோபதேசம் பெற்றான். வித்வாந் என்பதற்கு ஸர்வஜ்ஞன் என்று பொருள் கூறலாம். பகவதம்சமாகையாலே இயற்கையாகவே ஸர்வஜ்ஞனாயிருப்பதில் வியப்பொன்றுமில்லை. வித்வாந் என்பதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறுவர்: "வித்வாந் விபஸ்சித் தோஷஜ்ஞ:", அதாவது, தோஷங்களை அறியுமவன் வித்வாந். "தோஷமில்லாதவனைக் கைக்கொண்டால் நமது கருணைக்கு என்ன பயன்?" என்பது ராகவன் திருவுள்ளமாம். உலகோர் கை விடுவதற்காக தோஷம் காண்பர்; இராகவன் கைக்கொள்வதற்காக தோஷம் காண்பனும். வாத்ஸல்ய குணத்திற்கு நிதியான ராமன் தோஷங்களையே பற்றாசாகக்கொண்டு கைக்கொள்வன்.

10. க: ஸமர்த்த:?—ஸமர்த்தன் யார்? வித்வத் என்பது தனிப்பட்டது, ஸாமர்த்யமென்பது தனிப்பட்டது. இராமன் செய்திருக்கிற காரியங்களுள் சிலவற்றை மேலெழ நோக்குங்கால் இவன் அஸமர்த்தனோ என்று நினைக்க நேரும்; உட்புகுந்து ஆராய்ந்தவாறே 'இவனில் மிக்க ஸமர்த்தனில்லை;' என்று அறுதியிடலாகும். உதாரணமாக, மஹாபலிஷ்டனான வாலியுடன்

நட்புக்கொள்ளாமல் அவனிடம் அஞ்சி யொளிந்திருந்த சுக்ரீவனைத் துணைகொள்கிறான். இதுமட்டுமா? கடலரசனை நோக்கிச் சரணாகதி பண்ணுகிறான்; அதுவும், விபீஷணனை உபாயம் கேட்டு! தனது பெருங்குணத்தை உலகில் விளக்கிக் காட்டவேண்டியே இராமன் சுக்ரீவனைப் பரிக்ரஹித்ததும், விபீஷணனின் யோசனைப்படி நடந்து கொண்டதும். "இளையவர்களுக்கு அருளும் இராகவன்" என்றே பெயர் பெற்றவனன்றோ ராமபிரான். உண்மையில் ராமனுக்குத் தனது சிலையும் கணையும் துணையேயன்றி வேறெதுவும் துணையன்று; ஆழ்ந்து நோக்கின் அவைகூடத் துணையல்ல: (ராமனே சுக்ரீவனிடம் கூறியபடி) ஸங்கல்பமொன்றுதான் அந்த ஸமர்த்தனக்கு உற்றதுணை: மானிடபாவனையை ஏற்றுள்ள பரப்ரஹ்மமான பகவான மிகஉயர்ந்த ஸமர்த்தனன்றோ!

11. ஏகப்ரியதர்சந: க:?—திகட்டாவமுதன் யார்? எவ்வளவு காலம் பார்த்துக்கொண்டிருந்தாலும் தெவிட்டாமல் இனிமையே செல்லும்படியான பார்வையையுடையவன் ராமபிரான். இப்படி அழகு குடிகொண்டிருந்தது கண்டே வஸிஷ்டபகவான் ராமன் என்று திருநாமம் சாற்றினன்; தன் அழகைக்காட்டி ஓவாது களிக்கச் செய்பவன் என்பதே தேறின கருத்து. சந்திரனைக் காட்டிலும் அழகிய திருமுகத்தையுடைய ராமன், "பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்று ஆண்களும் மோகிக்கும்படி லோகாதீதமான அழகு நிரம்பியவனாயிருந்தான் என்பது கவியின் வாக்கு. இராமனது ஓரோரவயவத்தின் அழகைக் கண்டவர்கள் மற்றோர் அவயவத்திற் கண் செலுத்த மாட்டாதவர்களாயினர் என்பதனால் திவ்ய மங்கள விக்ரஹஸௌந்தர்யம் ஒப்புயர்வற்றதென்று தெளிவாகிறது. அழகில் ஈடுபடவறியாத அரண்யவாஸிகளும் இராமனது வடிவழகைக் கண்டு வியந்தனரன்றோ! மூக்கும் காதும் அறுப்புண்ட சூர்ப்பணகையின் வாக்கிலும், இராமபாணம் தாக்கிய வாலியின் வாக்கிலும், முறையே "ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ..." "ஓவியத்தெழுதவொண்ணா உருவத்தா" என்றுமன்றோ வந்தது! இராமனைக் காண்பது இனிது என்பதுபோல் ராமன பிறரைக் காண்பதும் இனிது என்றும் பொருள் கொள்ளலாம்.

12. ஆத்மவாந் க:?—ஆத்மாவை உடையவன் யாவன்? அதாவது, ஜீவாத்மா, தைரியம், உடல், இயல்பு, பரமாத்மா என்ற ஐந்து பொருள்களும் பொருந்திய ஆத்மவாந் யார்? இராமபிரானே தான். (1) ஸர்வேச்வரன் ராமனாய்த் தோன்றி ஒரு ஜீவாத்மபாவத்தைத் தன்பால் ஆவாஹனம் செய்துகொண்டான். (2) எதற்கும் சளைக்காமல் கொண்ட கொள்கையை நிறைவேற்றியே நிற்கவல்ல தைரியம் உடையவன் ராமன். இதைப் பலபலவிடங்களில் காண்கின்றோம். (3) கருணையடியான அப்ராக்ருத திவ்ய தேஹமுடையன் ராமன். பரம ஸுந்தர விலக்ஷண திவ்யமங்கள விக்ரஹமுடைய ரூபஸம்பந்நன். (4) எவ்விதமான

ஸ்வபாவமுடையவன் ராமன் என்னில், அடியார்களிட்ட வழக்காயிருக்கையாகிற ஆச்ரித பாரதந்த்ரியமே ராமனுக்கு இயற்கை என்று தெளிவாக ஏற்படுகிறது.

சுக்ரீவனைப் பரம பக்தனாகத் திருவுள்ளம்பற்றி, அவனுக்குப் பரதந்த்ரனாய், அவன் சொற்படி வாலிவதம் செய்தார் பெருமாள். (5) மனுஷ்யனாய்ப் பிறந்திருக்கச் செய்தேயும் பரமாத்மாவாயிருக்குந்தன்மையிலும் குறையற்றவன் ராமன். மோக்ஷப்ரதத்வமென்பது பகவானுக்கே அஸாதாரணமாகையால், ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுத்ததிலிருந்து பரமாத்மத்தன்மை புலனாகிறது. அது ஸத்ய வாக்கின் மகிமையினாலெனினும் பரமாத்ம பாவம் பொலிந்ததில் தட்டில்லை.

14. த்யுதிமாந் க:?—ஒளியையுடையவன் யாவன்? என்பது பதினான்காவது வினா. [13-வது வினாவும் 16-வது வினாவும் ஒன்றாய் விவரிக்கப்படும்.] இராமனை சூர்யனாகவும் ரத்நமாகவும் வர்ணிப்பதுண்டு. ராமஸூர்யனுக்கும் ராமரத்நத்திற்கும் பெருமையை விளைக்கின்ற பேரொளி ஸீதாபிராட்டியேயாவள். இதனை அவளது வாயாலேயும், இராமனது வாக்கினாலும் அறிகிறோம். ஸூர்யன் ப்ரபையைவிட்டுப் பிரியாதாப்போலே எம்பெருமானும் நித்யஸித்தமான லக்ஷ்மீ ஸம்பந்தத்தை யுடையனாயிருப்பன் என்பதை நெஞ்சிற்கொண்டே த்யுதிமாந் க:? என்ற வினா எழுந்தது. பிராட்டிமுற்படப் பிரிந்தது, நடுவிற் பிரிந்தது, அனந்தரம் பிரிந்தது என்றதெல்லாம் திவ்யமங்கள விக்ரகத்தைப்பற்றியதேயன்றி, திவ்யாத்ம ஸ்வரூபத்தைப்பற்றியதன்று. இக்கேள்வியில் இரு தத்துவங்களும் கலசியேயிருக்கின்றன. ராமன் நடித்த மனுஷ்ய பாவனைக்குச் சேர்ந்த தத்துவம் ஒன்று; ஸ்ரீமந்நாராயணன தன்மைக்குச் சேர்ந்த தத்துவம் ஒன்று; இரண்டையும் கருத்திற்கொண்டே இக்கேள்விக்குப் பதில் விவரிக்கப்படுகிறது. தவிர, ஒளியின் ஸ்தானத்தில் பிராட்டிக்குப் பதிலாகத் திருக்குணங்களை வைத்து நிர்வஹிப்பதுமுண்டு. ஏற்கெனவே வ்யக்தமாகச் சொன்ன குணங்கள் போக மிகுந்த குணங்கள் யாவும் த்யுதிமாந் க: என்பதிலடங்கும்.

15. அநஸூயக: க:?—அஸூயையில்லாதவன் யாவன்? நற்றங்களையும் குற்றமாகக் கொள்ளும் துர்க்குணம் அஸூயையெனப்படும்; அஃதில்லாதவன் இராமபிரான் என்று தேறி நிற்கும். உலகில் ஸகலவிதமான வ்யாதிகளுக்கும் மருந்துண்டு; அஸூயையென்னும் வ்யாதிக்கு மருந்தே இடையாது. அஸூயையின் எதிர்த்தட்டான குணம் வாத்ஸல்யம். க: வத்ஸல:? என்று கேட்பதற்குப்பதிலாகவே க: அநஸூயக: என்று கேட்டுள்ளார் போலும். குற்றங்களையும் நற்றமாகக் கொள்கிற வாத்ஸல்யமுடையவன் யாவன்? என்று கேட்பதே இங்குற்றது. இத்தூய அன்பு நிலை வெளியானவிடங்களில் தலையான விடம் காண்மின்: விபீஷணன் அடைக்கலம் புகுந்தவன்று இரண்டு பக்ஷங்கள் தோனறின; துஷ்டனாகையாலே அங்கீகரிக்கத் தக்கவனல்லன்

என்பது சுக்ரீவன் பக்ஷம்; யோக்யனாகையாலே அங்கீகரிக்கத்தக்கவனே என்பது அனுமன் பக்ஷம்; பகவான் இவ்விரு பக்ஷங்களையும் கண்டித்து மூன்றாவதாக தனது விலக்ஷண பக்ஷத்தை வெளியிட்டான்: அதாவது, விபீஷணன் தோஷவானாகையாலேயே கைக்கொள்ளத் தக்கவன் என்பதாம். குற்றங் குறைகளையே பச்சையாகக் கொண்டு சரணாகதர்களைக் கைப்பற்றுகிறார் என்பதே பெருமாளுக்கு ஏற்றம். இது விஷயமாக வேதாந்த தேசிகனும் கூரத்தாழ்வானும் நிதி போன்ற ரஹஸ்யார்த்தங்களை விளக்கியிருக்கிறார்கள். தவிர, பிறர் பெருமை கண்டு பொறாமையாகிய அஸூயையை அடையாதவன் இராமன் என்பதும் ப்ரஸித்தம்.

13. க: ஜிதக்ரோத:?—
16. கஸ்யபிப்யதி தேவாச்ச
ஜாதரோஷஸ்ய ஸம்யுகே

} இவ்விரு வினாக்களும் ஒன்றாக சேர்த்து விவரிக்கப்படுகின்றன.

No. 111708

இவற்றில் முதல் கேள்விக்கு, கோபத்தை வென்றவன் யாவன் என்பது பொருள்; இரண்டாவது கேள்விக்கு, போர்க்களத்தில் எவனுடைய கோபத்தைப் பார்த்துத் தேவர்களும் அஞ்சி நடுங்குவார்கள்? என்பது பொருள். இவ்விரு வினாக்களும் ஒன்றுக்கொன்று மாறானதுபோல் தோன்றினாலும், இரண்டையும் பொருந்தவைத்து ஒருங்கே விவரிக்கமுடியும். கோபத்தை வெல்வதாவது அதை ஸ்வாதீனப்படுத்திவைத்துக் கொள்கை. வேண்டும்போது கோபத்தை வரவழைத்துக்கொள்வதும், காரியம் ஆனவாறே இருக்குமிடம் தெரியாமற் போம்படிச் செய்வதும் உத்தம புருஷ லக்ஷணம். இராமனது தன்மையோ, வென்னில், சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற என்று சொல்லுகிறபடியே வந்தேறியான கோபம் அளவிடவொண்ணாததாகவே யிருக்கும். மற்றைப்போதுகளில் பார்த்தால், இவனிடத்து ஒரு நாளும் கோபம் வந்து குடிபுகாது என்னும்படி பரம ஸௌம்யனாயிருப்பன். யாவரோடும் சிரித்துக்கொண்டே பேசும் இயல்பினன். 'இராமனுக்குக்கோபமோ அனுக்ரஹமோ ஒருபோதும்காரணமின்றி உண்டாகாது; தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டித்தே தீருவன்; குற்றமற்றவர்களிடத்தில் கோபமேகொள்ளான்!' என்பதே அயோத்தி மக்கள் வாக்கு. வேண்டாத சமயங்களில் கோபத்தை விலக்கி, வேண்டிய சமயங்களிற் கொள்பவன் ராமபிரான். கடைசி வினாவினால் கண்கொண்டு காணவொண்ணாத அபரிமிதமான கோபமே குறிப்பிடப்படுகிறது; சாதாரண கோபமில்லை. சாதாரண மனித ஸ்வபாவத்திற்கு மாறுபட்டது பகவானது தன்மை; பிறர் தன்னளவிலே எத்தனை தீங்கு செய்தாலும் சீற்றமுறான் பகவான்; அவன் தன்னடியார்க்குத் தீங்கிழைப்பார் திறத்திலேயே மிக்க சீற்றங்கொள்வான். உடலில் கத்தியிட்டால் மருந்திட்டு ஆற்றலாம்; உயிர்நிலையில் கத்தியிட்டால் மருந்தில்லையே! பாகவதர்களை பகவான் தன் உயிர்நிலையாகக் கருதுகிறான். ஸ்ரீராமபிரான் தன்னளவில் அபசாரப்பட்டவர்களிடத்தே சீற்றங்கொள்வதற்கு

மிகவும் சிரமப்படுவதாகவும், தன்னடியார் திறத்து அபசாரப்பட்டவர்களிடத்துத் தான் கோபமிட்ட வழக்காகி நின்றதாகவும் வான்மீகி வெகு அழகாக எடுத்துக் காட்டுகின்றார். வரமாட்டேனென்கிற கோபத்தை வருந்தியழைப்பது ஓரிடம; கோபத்தைத்தன வசத்தில் வைத்துக்கொள்ள மாட்டாமல், கோபத்துக்கே தான் வசப்பட்டு விட்டதாக விருப்பது ஓர் நிலை. ஆரண்ய காண்டத்திலும் யுத்த காண்டத்திலும இவ்விரு நிலைகளுக்கும் அனேக உதாரணங்களைக் காண்கிறோம. வால்மீகியின் வினாக்களுக்கு விடை கூறிய நாரத முனிவர் ராமபிரானை "ஸதைவ ப்ரியதர்சந:" என்றும், "ஸோமவத ப்ரியதர்சந:" என்றும் சொல்லி, "காலாக்நிஸத்ருச: க்ரோதே" என்று சொல்லி, இரு வினாக்களுக்கும் தகுந்த விடைகளைக் கூறி வைத்தார்.

கல்யாண குணக்கடல்

ஸ்ரீ ராமபிரானது திருக்கல்யாண குணங்களை ஆச்சரியமாக அனுபவிக்கும பேறு அபூர்வ ராமாயணததின மூலம வாய்ததது. 160 பக்கங்கொண்ட இநநூல தொட்டவிடமெலலாம இனிக்கும கற்கண்டைப் போன்றது. ஸ்ரீ பர. அ. ஸ்வாமி ஒருவரால்தான இத்தகைய முறையில்—ஆராவதமுதமாய்—எழுதமுடியும என்ற நிகரற்ற புகழ்பெற்ற சொல் ஓவியம. அதன ஸார ஸங்க்ரஹத்தை வெளியிடும முறையில் ஸ்ரீ ராமநவமி நன்னாளை நன்கு கழிக்கின்றேன; இந்த மஹாஸுக்ருதத்திற்கு மூலகாரணம் ஆழ்வார் ஆசார்யர் ஸ்ரீ ஸூக்திகளே.

5. ராம நாடகக் கீர்த்தனைகள்

கம்பராமாயணம அரங்கேறிய ஸ்ரீரங்கத்திலே அந்த மண்டபத்திலேயே சீகாழி அருணாசலக கவிராயரின ராம நாடகம அரங்கேறியது. இவரும கம்பனைப்போல நம்மாழ்வாரைய காப்பாகப பாடியிருக்கிறார். ராமனை மும்மூர்த்திகளின அவதாரமாயக் கம்பன கூறுவது போலவே இவரும கூறுகிறார். தாம ப்ரஸங்கித்து அனுபவித்த கம்பராமாயணத்தைப பண்டித பாமர ரஞ்சகமாக்கவேண்டும என்ற உறுதியுடனேயே இவர் கம்பனையே பின்பற்றி, தமது நாடகபாணிக்கு ஏற்றவிதமாக மிகவும் லளிதமான நடையில, அங்கங்கே கம்பனின சொல்லும் பொருளும பரிமளிக்க, அமைத்துப பாடியுள்ளார். விருத்தங்கள, கீர்த்தனங்கள, கண்ணிகளை, சமயத்திற்கு ஏற்றபண்களுடன இசைத்திருக்கிறார்; பக்திரஸம் மட்டுமின்றிவீரத்தையும காம்பீர்யத்தையுமசபதஜாலங்களில் மிடுக்காகவெளியிடுகிறார். தமிழ் இசை, தமிழ இசை என்று ப்ரசாரம் செய்துவரும் இந்நாளில ராம நாடகக கீர்த்தனையைப பாடிப் பரப்ப முயற்சி நடைபெறவில்லை யென்பது எத்தனை குறைவு! ராம நாடகக் கீர்த்தனைகளைப் பாட, தக்க தமிழப பயிற்சி வேண்டும். இசையுலகில ராம நாடகக் கீர்த்தனை தனக்கு உரிய ஸ்தானம் பெற்றுத தமிழ் மக்களிடையே நிலைபெறவேண்டும். ராம பக்தி ப்ரசாரத்தில் இதுவும் ஒரு முக்கிய அம்சமே.



1. கல்யாணஸம்ப்ரதாய கீர்த்தனைகள்.

ஸ்ரீ ராமநவமி






1
2
3
4
5
6
7


1
2
3
4
5




1
3
2
4
5

ஸ்ரீராமநவமீ





வால்மீகியின் அபராவதாரமோ? கம்பனின் ஆந்த்ர ஆவேசமோ? ஆஞ்சநேயனின அம்சமோ? அன்றி ஆழ்வார்களின் அந்தராத்மாவோ?—என்றெல்லாம் திகைப்படையும்படி அமைந்துள்ளது ஸ்ரீ தியாகராஜரது சரித்திரமும் கீர்த்தனும்ருதமும். அனவரதமும ராம சரணாரவிந்தத்தில் மனத்தை நிறுத்தி, ஸதா ராமாம்ருத பானத்தைச் செய்து உய்ந்தவர் அவர். ராமமந்திரந்தான் தாரகம் என்பது அவரது திடமான ஸித்தாந்தம், இதனால் அவருக்கு எல்லாம் ராமனே!

தியாகய்யர்வாளின் கீர்த்தனங்களின் சிறப்பை விளக்க முற்பட்டால் ஒரு தனி நூலாக விரியும். பொறுக்கு மணிகளான சில கீர்த்தனங்களை எடுத்து, அவற்றின் ஓவிய விளக்கத்தையும் அளித்து ஸ்ரீராமநவமியைக் கொண்டாடுவோம்.

ஓவிய மலர்கள் 1, 2, 3,—
கல்யாண ஸம்ப்ரதாய கீர்த்தனைகள்

ஸீதா—ராம தம்பதிகளைத் தம் மனக்கண்முன் நிறுத்தி கல்யாண உத்ஸவ ஸம்ப்ரதாயக் கீர்த்தனைகளை அருளிச் செய்திருக்குமழகு வேறெங்கும் காண்பதற்கில்லை. எதுகுலகாம்போதியில் எச்சரிகை, (அழைப்பு), சங்கராபரணத்தில் லக்ஷ்மீ கல்யாணம், மத்யமாவதியில் நலங்கு,சங்கராபரணத்தில் எண்ணெய்க்காப்பு, சுரடியில்மங்களஹாரத்தி,பந்துவராளியில்சோபானை,நீலாம்பரியில்ஊஞ்சல், ஸஹானவில் லாலி, ஆஹிரியில் சயனஅறைபாடல், ரீதிகௌளையில் நித்திரை செய்விக்கும் பாடல், தன்யாசியில் மங்களம், பௌளியில் பள்ளி எழுப்புதல்—ஆக, கல்யாண ஸம்ப்ரதாயப்படி கல்யாணராமனுக்கு உத்ஸவம் செய்து குதுகலிக்கிறார். முதல் மூன்று ஓவியங்களில் இதை ஸாரமாகக் காணலாம்.

ஓவிய மலர் 4—ஸீதம்ம மாயம்ம....

தியாகய்யரின் பரம பந்துக்களைக் காணுங்கள். (1) ஸீதை அன்னையாக அன்னமூட்டுகிறாள். (2) ஸ்ரீராமபிரான் தந்தையாய்க் கல்வியூட்டுகிறார். (3) லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், ஹனுமன், கருடன ஆகியவர்களுடன சகோதரன்போல் விளையாடுகிறார். (4) பரமசிவன், விநாயகர், குஹன, இந்திராதி தேவர்கள், வசிஷ்ட, பராசர, நாரத, சனகாதி முனிவர்கள் உள்பட பரம பந்துக்களாய் ஆசிர்வதிக்கிறார்கள். ஆக, ஜகன்மாதாவும் லோகபிதாவுமே தனக்குத் தாய் தந்தையர் என்று ஸித்தாந்தம் செய்கிறார்.

ஓவியமலர் 5—லேகுந நின்னு

ராமா! உன்னை ஏன் எல்லோரும் சூழ்ந்துகொள்கிறார்கள் என்பதை நான் அறிந்து விட்டேன. ஆச்ரித ரக்ஷகத்வம் உன்னிடம் பரிபூர்ணமாய் நிறைந்திருப்பதே அதன காரணம். அதுமட்டுமா? நீ கருணஸாகரனல்லவா? உன்னிடம் இம்மஹிமைகளை அறிந்தே எல்லோரும் உன்னைச் சுற்றியிருக்கிறார்கள்.

ஓவியமலர் 6—ஸ்ரீராம ! ரகுராம!

(1) சாக்ஷாத் பரந்தாமனையே புத்திரனாக அடைந்த கௌஸல்யை அந்தக் குழந்தை ராமனுடைய அழகிய கண்ணாடிபோன்ற கன்னங்களில் ஆனந்தமாய் முத்தமிடவும், (2) அக்குழந்தையைத் தசரதர் வாயார "ராமா! வாடா!" என்று அழைத்து இன்புறவும், (3) ஸ்ரீராமனுடைய பணிவிடைகளைச் செய்து இன்புற ஸ்ரீ லக்ஷ்மணனும், (4) ராமலக்ஷ்மணர்களின் அழகைக் கண்டு உள்ளம் பூரிக்க விச்வாமித்ர முனிவரும், (5) ராமனது திவ்ய சரணகமலத்தால் தனது சாபம் தீர்த்துக்கொள்ள அகலியையும், (6) அதே பாக்யம் பெற்ற சிவதனுசும், (7) தன் அருமை மகளைப் பாணிக்ரகணம் செய்துகொடுத்துக் கண்ணாரக்கண்டு களித்த ஜனக மஹாராஜனும், பரமாத்மாவின் மலர்க்கரங்களைப் பற்றி இன்பமடைய ஜானகியும், (8) என்ன மா தவம் செய்தார்களோ! என்ன பேறு பெற்றார்களோ! என்று மெய்ம்மறந்து உள்ளம் பூரிக்கிறார் தியாகய்யர்.

ஓவியமலர் 7—க்ஷீரஸாகரசயன !

பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரதத்துவமே (1) ராமனாகத் திருவவதரித்துள்ளதும், (2) அன்று ஆதிமூலமே என்று கதறிய கஜேந்திராழ்வானுக்கு ஓடிவந்து அருள் செய்ததும் (3) பக்தன் ராமதாஸனின் பந்தமொழித்துக் காத்ததும், (4) பிராட்டியை யடைய மலையால் அணைகட்டி கடல் கடந்ததும்—இந்த ப்ரஸித்த சரித்ரமனைத்தும் கேள்விப்பட்டிருக்கிறேன். தாரக நாம! என்னையும் காப்பாற்றியருள்வாயாக!

ஓவியமலர் 8—தீனஜனாவன.

த்யாகய்யர் இயற்றிய தசாவதார கீர்த்தனை இது. பாகவத ப்ரியனும் ஆகமமூலனுமான ஸ்ரீ சேஷசாயியே த்யாகராஜர் வணங்கும் ஸ்ரீராமனாகத் தோன்றியுள்ளான். பாற்கடலில் பள்ளி கொள்ளும் அந்தப் பரதத்துவமே எல்லா அவதாரங்களையும் செய்தருளுவது, ஆதி பௌத்தரும் வரப்போகும் கல்கியும் உட்பட. பூபாளராகத்தில், (எளியமுறையில் பாடக்கூடிய மெட்டில்) அமைத்துள்ள இக்கீர்த்தனை தினந்தோறும் உதயகீதமாகப் பாடிப் பரவசமடைய வேண்டியதே என்பது பக்தர்களின் கொள்கை.

ஓவியமலர் 9—நாமொரால கிம்பவேமி ?

ஸ்ரீராமா! என் முறையீடு கேழ்க்கவில்லையா? வாலி சுக்ரீவ சகோதரர்கள் சண்டையிட்டபோது, சுக்ரீவனின் முறையீட்டைக் கேட்டு, வாலியை ஹதம்செய்து, சுக்ரீவனுக்கு முடி சூட்ட வில்லையா? விபீஷணன் இராவணனிடம் விவாதம் செய்து, பயனின்றிப் பிரிந்து வந்து, உம்மிடம் சரணாகதி செய்ததை ஏற்க வில்லையா? இப்படிக்கிருக்க என் முறையீடு மட்டும்தானா உன் செவியில் படவில்லை? என்று உருகுகிறார் த்யாகய்யர்.

ஓவியமலர் 10—எந்துகீசலாழ?

ஸ்ரீராமா! என்னைக் காப்பதற்கு உனக்கு ஏன் தோன்றவில்லை? காப்பாற்ற வேண்டாமென்று உன்னை எந்தப் பெண்மணி சொன்னாள்? கௌஸல்யா தேவியா? அஹல்யையா? ஸீதாபிராட்டியேயா? அன்றி சபரியா? அல்லது உனக்கேதான் மனமில்லையா? இந்தச் சோதனையை என்னால் தாளமுடியுமா? என்று கதறுகிறார், பக்தியின் சிகரத்தில்.

ஓவியமலர் 11—இந்துகா ஈதநுவுநு

எதற்காக இந்தச் சரீரத்தை வளர்க்கின்றோம்? கைங்கர்யம் செய்யவா, பணத்தை எண்ணவா? கடவுளைக் காணவா, வேசியரைக் காணவா? த்யானிக்கவா, வம்பளக்கவா? பூஜை செய்யவா, துர்விநியோகம் செய்யவா? க்ஷேத்ரப்பிரதக்ஷிணத்திற்கா, ஊர் சுற்றவா? ராமனை அடிபணியவா, அன்றி நமனின் அடிமையாயிருக்கவா?

ஓவியமலர் 12—ஏதாவுனரா

ராமனே ஸகலமும் என்ற பக்திப்பெருக்குடன் இருந்த த்யாகய்யரைச் சோதிக்கவே பகவான் முன்வந்தான். திருக்கோவிலாழ்வாரில் இஷ்டதெய்வமான ஸ்ரீராமனின் விக்ரஹம் காணவில்லை ஸபரிவாரராய் வெளியேறியிருக்கிறார். அய்யர்வாள் கதறுகிறார். ராமா! நீ ஸீதா, கௌரீ, வாகீச்வரி முதலியவர்களிடம் மறைந்திருக்கிறாயா? பூமிக்குள்ளே ஒளிந்து கொண்டிருக்கிறாயா? பூதகணங்களிடையே புகுந்திருக்கிறாயா? பிரம்மா விஷ்ணு சிவனுடன் ஐக்யமாகி விட்டாயா? ராமா! எங்குதானிருக்கிறாய்? எங்குத் தேடியும் காணவில்லையே! என்று அலைகிறார். இக்கீர்த்தனையின் உள்ளுறை பொருள் யாதெனின் உலகிலுள்ள எல்லா அடிப்படைத் தத்துவங்களும் ராமன் என்ற பரம்பொருளில் அடங்கியிருப்பதே.

ஓவிய மலர் 13—நாதஸுதாரஸம்பிலநு

ப்ரணவ நாதமாகிற ஓங்காரத்திலிருந்தே சகல சப்தங்களும் ஜனித்தவை. வாழ்வின் துயரை மாற்றி அழிவற்ற நித்யானந்தத்தை யளிக்கும் ஸங்கீதாம்ருதம் ஓம்காரத்தின் ஸாரமே! வேத, புராண ஆகம சாஸ்த்ரங்களுக்கு ஆதாரமான ஓம்காரமே உலகில் இராமனாக உருக்கொண்டது. அவரது கோதண்டத்தின் ஏழு மணிகளே ஸங்கீதத்தின் ஸப்த ஸ்வரங்கள்; ஸ்வர ராகமே அந்த வில்; அதன் மூன்று நாண்கயிறுகளே துரித, நய, தேசியப் பிரிவுகள். தங்கு தடையின்றிப் பறக்கும் ராமபாணங்களே ஸரஸமான ஸந்தர்ப்ப ஸங்கதிகளை விவரிக்கும் ஸாஹித்யங்கள்! இத்தகைய ப்ரணவநாதனைப் பாடி பஜிப்பதைவிட உலகில் வேறு பாக்யமுண்டா? ராம நாமமே ஜீவன்.

ஓவிய மலர் 14—ஏலாவதாரம்

ப்ரபுவே! இப்புவியில் நீ இராமபிரானாகத் திருவவதரித்தது ஏன்? பசுக்களை மேய்ப்பதற்கா? அதாவது பசுப்ராயமான மக்களைத் திருத்திப்பணிகொள்ளவா? அன்றி அயோத்தியைப் பாலனம் செய்யவா? அதாவது தர்ம ராஜ்யமாகிற ராம ராஜ்யத்தை, மண்ணில் விண்ணை, நாட்டிப் பரிபாலிக்கவா? யோகிகளைக் காப்பதற்கா? (உனக்குத்தான மனத்துக்கினியான் என்ற பெரும் புகழுண்டே!) அன்றி, ரோகிகளை ஸம்ரக்ஷித்து ஆறுதலளிப்பதற்கா? இவையெல்லாம் இருக்கட்டும். உன்னைப் பிரணவ நாதனாகப் பஜித்து ராக ரத்ன மாலிகையால் அர்ச்சிக்கும் இந்த தியாகராஜனை ஆட்கொள்ளவே அவதரித்தனையோ!

ஓவியமலர் 15—சிந்திந்ஸ்துன்னாடே

த்யாகராஜருடைய தாரகநாம கீர்த்தனைகளை ஜனங்கள் நாடெங்கும பக்தியுடன் பஜனை செய்ய முற்பட்டதும் யமதூதர்களின சூலம், பாசக்கயிறு முதலியவற்றுக்கு வேலை குறையவாரம்பித்ததாம். ராமபஜனையிலீடுபட்டிருக்கும் பக்தர்களை நாமோ, நமது தூதர்களோ எப்படி அணுகமுடியும்? என்ற பெருஞ்சிந்தனையிலாழ்ந்தான் யமதர்மராஜன! இந்தக் கீர்த்தனை "கொடுமை செய்யும் கூற்றமும் என் கோலாடி குறுகப்பெற" என்ற பெரியாழ்வார் வாக்கை எப்படி ப்ரதிபலிக்கின்றது பாருங்கள்! "சார்ங்கவில் சேவகனே! உடல் உருகி வாய் திறந்து உன்னை மடுத்து நிறைத்துக்கொண்டேன்; இனி, கொடிய தண்டங்களை நடத்துபவனான யமனும் எனது செங்கோல் செல்லுமிடங்களில் அணுகவல்லவனல்லன்" என்றே பாடுகிறார் பெரியாழ்வாரும். "நாவலிட்டுழிதருகின்றோம், நமன் தமர் தலைகள்மீதே!" என்றே கர்ஜிக்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வாரும; நின் நாமம் கற்ற ஆவலிப்பு இது! இதுவே பக்தர்களின் ஸாத்விகச் செருக்கு. இதுபோல் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை த்யாகய்யர்வாள் வாக்கு அனுஸரிப்பதைப் பல அம்சங்களில் காணலாம். ஓர் உதாரணத்துடனேயே நிறுத்திக்கொள்வோம்.

நீநாமரூபமுலகு நித்ய ஜெயமங்களம்.

"சிற்குணத்தர் தெரிவரு நன்னிலை
எற்குணத்தற் கரியது மூன்றனுள்
முற்குணத்தவரே முதலோர் அவர்
நற்குணக் கடல் ஆடுதல் நன்றரோ!" — கம்பநாட்டாழ்வார்.

சொல் ஒன்று; வில் ஒன்று; இல் ஒன்று
ஒகமாட; ஒகபாண, ஒக பத்நி...

கற்பார் இராம பிரானை யல்லால் மற்றும் கற்பரோ! — நம்மாழ்வார்.



ப்ரத்யக்ஷ தெய்வம் திருவேங்கடமுடையான்



ஸ்வாமி புஷ்கரணி



மந்திபாயும் வடவேங்கடம்

திருவேங்கடமுடையான் அவதார தின சிந்தனைகள்



“ மலர்மேவு திருமகளும் வார்தடங்கண் நிலமகளும்
அலர்மேவு குழல்நீளை அணங்கும்இரு மருங்கிருப்ப
வலனேந்து பரமபத மாமணிமண் டபத்திலமர்
நலனேந்த பரம்பொருளாய் நான்கு வியூகமுமானாய்
உபயகிரிப் புயராம னெடுகண்ணன் முதலான
விபவஉரு வமுமெடுத்து வீறுமுயிர் தோறுங்குடிகொள்
அந்தரியா மியுமான தமையாமே எளிதாக
இந்தநெடு வேங்கடத்தில் எல்லோரும் தொழநின்றாய்!”

என்று பாடினார், திருவேங்கடக்கலம்பகத்தில், ஸ்ரீ அந்தகக்கவி வீரராகவ முதலியார். ஆழ்வாராசார்யர்களின் அருள்வாக்கை அனுஸரித்ததாகவே இந்தப் பாடல் அமைந்துள்ளது. ஸ்ரீமந் நாராயணனான ஸர்வேச்வரனுடைய ஐந்து நிலைகளான பரம், வியூஹம், அந்தர்யாமி, விபவம், அர்ச்சை ஆகியவற்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் அர்ச்சையே நம்போன்ற சேதனர்கள் அறிந்து

பக்தி செய்து உய்வு பெறுவதற்கு எளிதானது—உரியது, என்று நம் முன்னோர்கள் அறுதியிட்டதையே இப்பாடல் அழகாக அறிவுறுத்துகின்றது.

ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்ரம்

திருமலையில் நாள்தோறும் ஸுப்ரபாதகாலத்தில் அனுஸந்திக்கப்பட்டுவரும் ஸ்ரீவேங்கடேசஸ்தோத்ரம் (13 ச்லோகங்கள் கொண்டது) மணவாள மாமுனிகளின் நியமனத்தின்பேரில் அவரது சிஷ்யர்களுள் ஒருவரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் பணித்ததாகும்; அதனிலும் அருளிச்செயலின் ஆழ்பொருளே ஸம்ஸ்க்ருத வாக்காகப் பரிமளிக்கிறது. பரதத்துவமே தனது கருணை விலாஸத்தாலே "திருவேங்கடமுடையான்" என்ற திவ்யமங்களத் திருமேனிகொண்டு, திருமலையில் எழுந்தருளி, ப்ரபத்தி செய்வோர்க்கு அந்தமில் நலம் அருளுவது ப்ரத்யக்ஷம். இதையொட்டியே கலௌ வேங்கட நாயக: என்ற ஸித்தாந்தம் எழுந்தது. ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்ரத்தின் ஸாரத்தை முதலில் அனுபவித்துவிட்டு, பிறகு அதற்கு மூல நிதியான, ஊற்றுவாயான, அருளிச்செயல் அமுதக் கடலில் அவகாஹிப்போம்.

ஸ்ரீபத்மாவதீ ஸமேத ஸ்ரீஸ்ரீநிவாஸபரப்ரஹ்மணே நம:
அலர்மேல்மங்கை யுறைமார்பன் அடியிணை வாழி!

1. கமலாகுச—அலர்மேல் மங்கை யுறைமார்பா! நீலமேனியையுடைய நீ, பிராட்டியின் குங்குமக்குழம்பினால் செந்நிறம் பெற்று, ஒப்பற்ற தேஜஸ்ஸுடன் விளங்குகிறாய். புண்டரீகாக்ஷனை பரதத்துவமே! உலகங்கட்கெல்லாம் இறைவனே! திருமலை அப்பனே! நித்யஸ்ரீர் நித்யமங்களமாக விளங்குவாயாக! உனக்குப் பல்லாண்டு பல்லாண்டு கூறுகிறேன்.

2. ஸ சதுர்முக—தெய்வமெனப் போற்றப்படும் ஸகல தெய்வங்களுக்கும் சிரோபூஷணமாக விளங்குபவனே! அடிபணிந்தவர்களிடத்தில் அதிசயிக்கத்தக்க வாத்ஸல்யமுடைய கருணை நிதியே! வ்ருஷபகிரியென்ற திருமலைக்கு இறைவனே! ரக்ஷித்து அருள்வாயாக!

3. அதிவேலதயா—ஸர்வாபராத ஸஹிஷ்ணு என்று நிகரிலாப்புகழ் பெற்ற உனக்கும் ஸஹிக்கமுடியாதபடி அளவற்ற பாபத்தை க்ஷணந்தோறும் செய்து, நூற்றுக்கணக்கான குற்றங்களினால் நிறைந்திருக்கிற இந்தப் பாபிஷ்டனை உனது பரம க்ருபையாலே விரைந்து காத்தருளவேண்டும்.

4. அதிவேங்கடசைல—ஔதார்யமே உருக்கொண்டு திருமலையில் எழுந்தருளியிருக்கும் என் அப்பன், அவரவர் விரும்புவதைக்காட்டிலும் அதிகமாகவே அளித்தருளும் வள்ளல், வேதங்களினுல் பரதெய்வமாக ஓதப்பட்ட லக்ஷ்மீபதியேயாகும்; இந்தத் திருவேங்கடமுடையானைத்தவிர வேருனதொரு பரதத்துவத்தை அறியேன்.

5. கலவேணுரவ—கண்ணபிரானே திருவேங்கடமுடையானுகத் தோன்றியிருக்கிருன் இந்த யுகத்தில். குழலிசையால் கோபாலர்களையும் பசு பக்ஷி ஜாதிகளையும் கந்தவர்களையும் குதுகலப்படுத்தியவனும், தனது மன்மதகோடி ப்ரகாசத்தினுல் ஆய்ச்சியரை வசீகரித்தவனும், ஸாக்ஷாத் தர்மஸ்வரூபியுமான இந்த வாஸுதேவனைக் காட்டிலும் வேறொருவரையும் எண்ணமாட்டேன்.

6, 7, 8. அபிராமகுணுகர, அவநீதநயா, ஸுமுகம்—இந்தத் திருவேங்கடமுடையானை யாரென்று பார்த்தீர்கள்! இவனே திருக்கல்யாண குணங்களுக்குப் பிறப்பிடமானவன்; ரகுகுல திலகனுய்த் தசரதாத்மஜனுய்த் தோன்றிய நிகரற்ற வில்லாளியான மஹாவீரன். இவனே லக்ஷ்மீபதியும் கருணைக்கடலும்; ஸீதாப்பிராட்டிக்கு மனத்துக்கினிய இராமசந்திரன்; ராக்ஷஸேச்வரனுகிய இருளை யகற்றும் சூரியனும் இவனே. நல்ல தேவியையும் பழுதுபடாத அம்புகளையும் உடைய இந்தக் குணக்கடல் தண்ணளியே வடிவெடுத்தவன்; ஸர்வபூத ஸுஹ்ருத்; நீசர்க்கும் எளியன; அனைவர்க்கும் இன்பமளிப்பவன். இத்தகைய இந்த இராமபிரானைத் தவிர்த்து வேறு ஒருவரையும் ஒருவிதமாகவும் ஒருகாலும் ஸேவிக்கமாட்டேன்.

9, 11, 12. விநாவேங்கடேசம், வ்ருஷசைலாதிப, ஸ்ரீஸ்ரீநிவாஸ:—ஸ்ரீ ஸ்ரீநிவாஸனே பரதத்துவமும வைத்தமாநிதியும் குலதெய்வமும் பரமகதியுமாவான்; வ்ருஷசைலம், வ்ருஷபாத்ரி, பணிசைலம், என்பதெல்லாம் திருமலையையே; திருமலையப்பனே அடியேன் தொழும் தெய்வம்: அவனைத் தவிர்த்து வேறொரு நாதனில்லையென்பது ஸத்யம். ஸதா ஸர்வதா அவனையே ஸ்மரணை செய்தபடியே யிருக்கிறேன். ஸகல தாபங்களையும் போக்கவல்ல அவ்வொப்பிலா அப்பன், திருவுள்ளம் மிகவுமுகந்தருளி, நன்மையே புரிந்தருளவேண்டும்.

10, 13. அஹம்தூரதஸ்தே, அஜ்ஞானிநா—தூரதேசத்திலிருந்து வந்து விருப்பத்துடன் உன தாமரை அடியிணைகளில் அடிபணிகின்றேன். என்ருே ஒருநாள் செய்யும் இந்த ஸேவை

யினால் நித்யமும் ஸேவிப்பதனாலுண்டாகும் பலனை நீ அவசியம் அளித்தருளவேண்டும். சேஷசைலமாகிற திருமலையின் சிகரத்தில் நீலமணிபோல் விளங்கும் எம்பெருமானே! அவிவேகியான சீலமில்லாச் சிறியேன் செய்த குற்றங்களையெல்லாம் உனது ப்ரஸித்தமான நிர்ஹேதுக க்ருபையினாலே க்ஷமித்து அருள வேண்டியது.

ஷை 13 ச்லோகங்களுடன் ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்ரம் முடிவு பெறுகிறது. அதைச் சேர்ந்தாற்போலவே அலர்மேல் மங்கைப் பிராட்டியை வணங்கி ஒரு ச்லோகம் அருளிச் செய்துள்ளார்—(ஈசானும்): திருமலை அப்பனின் திருமார்பில் நித்யவாஸம் செய்யும் தாமரையாளான அவனது ப்ராண வல்லபை, உலகுக்கெல்லாம் ஈச்வரி; வாத்ஸல்யம் நிறைந்த பரம பூஜ்யையான, ஜெகன்மாதாவான அவளே, பரதெய்வமான பகவானுடைய க்ஷமா குணத்தை வளரச் செய்பவள்.

திருவேங்கடமுடையானுக்கு மங்களாசாஸனம் செய்யும் இந்த ஸ்தோத்திரம் அருளிச்செயலின் ஸாரநிதியாய் அமைந்திருப்பது தெளிவு. பரதத்துவமே, ராமகிருஷ்ணாதி அவதாரங்களைச் செய்தருளிய பரம்பொருளே, இன்று திருமலை அப்பனாக ஸேவை ஸாதிக்கிறார்; அவரே குணக்கடல்; அவரது திருவுள்ள உகப்பே நாம் கோரும பலன் — இதுவே இதன் ஸாரப்பொருள். இனி, இதன் மூலநிதியை அனுபவிப்போம.

அருளிச்செயல் அமுதக் கடல்

[★ நாலாயிரப் பாசுர எண்.]

1. பொய்கையாழ்வார் — ராம கிருஷ்ணாதி விபவாவதார சேஷ்டிதங்களைப் பேசிமனுபவித்த ஆழ்வார், என்றைக்கோ கழிந்த அவ்வவதாரங்களின் திருக்குணங்கள் இன்றைக்கும் நன்குவிளங்குமாறு, பின்னானார் வணங்குஞ் சோதியாக ஸேவை ஸாதித்தருளுகின்ற அர்ச்சாவதாரத்தை யனுபவிக்க ஆசைகொள்கிறார். திருமலையே அவர் கண்முன் முதலில் காட்சியளிக்கின்றது. பகவானைக் காட்டிலும அவன ஸம்பந்தப்பட்ட பொருள்களே பரம உத்தேச்யம் என்றகொள்கைப்படி, திருவேங்கடமுடையானை நினைக்கும்போதே நெஞ்சம் திருமலையிலேயே நின்று அனுபவிக்க முற்படுகிறது. ★(2107) ஐச்வர்யார்த்திகள், கைவல்யார்த்திகள், முமுக்ஷுக்கள் ஆகிய மூவகை அதிகாரிகளுடைய வினைச்சுடரை அணைக்கின்ற திருவேங்கட மலையே நித்யஸூரிகளுடைய ஹ்ருதயமாகிற விளக்கைத் தூண்டி ஜ்வலிப்பிக்கின்ற மலையாகும். (2120) பாற்கடலில்

பள்ளிகொள்ளும் கடல் வண்ணன் முன்பு மஹாவராஹமாய் பூமியைக் கோட்டாற் குத்தி எடுத்தார்; கோவிந்தனாய் கோவர்த்தனகிரியைக் குடையாய்ப் பிடித்தார்; கம்ஸனை பயத்தால் முடித்தார்; அவர் தமது பெருமையெல்லாம் தோற்ற நின்றது திருமலையிலேயாம்; (2149) பரமபதநாதனே! மண்ணுலகில் அவதரிப்பவனே! திருமலையில் நின்றருள்பவனே! உன்னுடைய பெருமையை ஸர்வஜ்ஞனான உன்னாலுமே அறியமுடியாதெனின், அறியக்கூடியவர் யார்? (2180) எக்காலத்திலும் நம்மை ரக்ஷிப்பதில் தீக்ஷை கொண்டுள்ள திருமலை அப்பன், ஆஸ்திகர்களுடைய மனத்திலே நித்யவாஸம் பண்ணுவதில் உகப்புக்கொள்பவன், இப்போது இந்த ஹ்ருதயத்திலே வந்து புகுந்து நிரந்தர ஸ்தானம் பெற்றுவிட்டான்.

2. பூதத்தாழ்வார்—"கோல்தேடியோடும்கொழுந்ததேபோன்றதே, மால்தேடி யோடும்மனம்" என்னும்படியாக ஆசை கரைபுரண்டு செல்லப்பெற்ற ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே திருவேங்கடமுடையான் வந்து குடிகொள்கிறான். (2209) வைதிகர் அனைவராலும் தேவாதிதேவன் எனப் போற்றப்படுபவனும், பாற்கடலில் பள்ளிகொள்பவனும், முன் ஒருநாள் குதிரையுருக்கொண்டுவந்த கேசியின் வாயைக் கீண்ட ஆயர் மகனும், நினைப்பதற்கும் அருமையான சிறப்பு மிகுந்த கோயிலிலே பள்ளிகொள்பவனும், திருமலையிலே ஸர்வஸுலபனாய்க் கொண்டு எழுந்தளிநிற்பவனுமான ஸர்வேச்வரன் இப்போது என் மனஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுகிறான். (2226) ஸகலவேதங்களினாலும் பரம்பொருளாகப் பிரதிபாதிக்கப்பட்டவனும் அந்த மேன்மை விளங்கத் திருமலையிலே நித்யஸூரிகளும் வந்து அடிபணிய நிற்பவனுமான ஸ்ரீநிவாஸனின் திருவடிகளிற் பழகுகின்ற பக்தர்கள் செல்வம் படைத்தாலும் செருக்குக்கொள்ளமாட்டார்கள்; செல்வம் இழந்தாலும் தளர்வடையமாட்டார்கள்; இதுவே திருமலையப்பனை அடிபணிந்த பாகவதர்களின் பெருமையாகும்.

3. பேயாழ்வார்—(2295) நான்கு வேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற எம்பெருமான் திருமலையிலே ஸௌலப்யத்துடன் வந்துநின்று, தேவர்களும் வணங்கும்படி நிற்கிற நிலையிலே ஆச்ரயித்து, அப்பெருமானிடத்திலேயே நெஞ்சை ஊன்றவைத்தால், சிற்றின்பங்களிலே விருப்பம் ஒழிந்து, பரதத்துவத்தை உணர்த்தும் சாஸ்திரங்களிலே நெஞ்சைச் செலுத்துவதற்கு அனுகூலமாகும். (2313) திருப்பாற் கடல், திருவனந்தாழ்வான், ஸ்ரீவை

குண்டம், வேத வேதாங்கங்கள், யோகிகளின் ஹ்ருதயகமலம் ஆகியவற்றை இடமாகக் கொண்டவனே இப்போது திருமலையில் நிற்கும் ப்ரத்யக்ஷ தெய்வமாகும். (2320) ஜகத்திலுள்ள பொருளெல்லாம் தானேயாயிருக்கும் பெருமான் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனாய்ப் பின்பு என் ஹ்ருதயத்தை விட்டுப்போகிறானில்லை. (2344) பகவான் செய்தருளின அவதாரங்களில் சங்கர நாராயண—ஹரிஹர—அவதாரம் என்பதொன்று; பாதிவடிவம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியாகவும் பாதிவடிவம் பரமசிவமூர்த்தியாகவும் கொண்ட இவ்வவதாரம் ஆழ்வார் கண்ணுக்குப்புலனாகிறது. பகவான்கொண்ட கோலங்களெல்லாம் பக்தர்களுக்கு உத்தேசியமே என்ற கொள்கையில் சங்கரநாராயணாவதாரமும் திருவேங்கடமுடையானும் ஏகதத்துவமாகவே அநுஸந்திக்கிறார்.

4. திருமழிசைப்பிரான்—(832) கூர்மாவதாரத்திலே கடையப்பட்ட திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளியவனும், காலநேமியைக் கொன்றொழித்தவனும், வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்கருள் செய்தவனும், இப்போது திருமலையில் வந்து நிற்பவனுமான எம்பெருமானுடைய திருவடிகளையே நாள்தோறும் ஆச்ரயித்து உஜ்ஜீவிப்போமாக! (2420) திருவேங்கடமுடையானை ஸேவிக்கப் பெறவேணுமென்றும், திருமலையிலே நித்யவாஸம் பண்ணப்பெற வேணுமென்றும், இதுவே எனக்கு ஆவலாயிருக்கிறது: இந்த மனோரதம் கைகூட, கூடலிழைக்கின்றேன் என்கிறார் ஆழ்வார், நாயகி பாவனையில். பகவத்ஸம்ச்லேஷத்திலுள்ள ஆவலைக் கூறும் முறைகளிலே "கூடலிழைத்தல்'' என்ற குறிபார்க்கையும் ஒன்றாம். (2423) சகலமான தேவர்களும் தங்கள் தங்கள் அதிகாரம் பெறுவதற்கும் நிலைப்பதற்கும் திருமலையிலே சென்று அப்பன் திருவடிகளிலே துதிப்பர். நீங்களும் திருமலையைச் சென்று வணங்குங்கள்; அது, தன் ஸ்வபாவத்தினால், பாவங்களைப் போக்குவதில் நிலைநின்றிருக்கும். (2429) பரமபதத்தில் எம்பெருமானுடைய பரத்வத்தை அநுபவிக்கும் நித்யஸூரிகள், அவனது எளிமைக் குணங்களை யநுபவிக்கத் திருமலையிலேவந்து தொழுகின்றார்கள். தேவர்களுக்கு அஸுரர்களால் நேரும் துன்பங்களைச் சக்ராயுதத்தால் தொலைத்துக் காத்தருளும் பகவான், நமது துன்பங்களைத் தொலைத்தருளவே திருமலையில் எழுந்தருளியிருக்கிறான்.

5. நம்மாழ்வார்—(2923) வைதிகர்களால் ஓதப்படுகிற ஸகல வேதங்களிலும் பரம போக்யனாகப் பிரதிபாதிக்கப்படுகிறவனும், கல்யாண குணக்கடலானவனுமான திருமலையப்பனைக் குறித்து, "ஜோதிமயமான திருமேனியையுடையவனாய், எல்லா உலகும்

தொழும் ஸகலஜகத்காரணனுன ஆதிமூர்த்தி இவனே'' என்று நான் சொன்னுல் அது ஒரு பெருமையாகுமோ? (2926) எம்பெருமானுக்கு மிக உகப்பான திருமலேதான் நமக்கும் பரமப்ராப்யம். குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன், அன்று உலகளந்த பரம புருஷன், இன்று வந்து சேர்ந்த இடமான திருமலேயொன்றை மாத்திரமே தொழப் பெறில், நமது வினேகள் யாவும் தொலேந் தொழியுமே! என்றென்றும் இந்த மலேயே நமக்கு ரக்ஷகம். (3319) திருவேங்கடமுடையானே! பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சையென்ற ஐந்து ப்ரகாரங்களேக்கொண்டு அடியார்களே உகப்பித்தருளும் நீ, என் ஆவியுள் புகுந்தபிறகு, என் கண்ணுக்குத் தோற்றுமல் ஒளிந்தால் நான் ஸஹிப்பேனு? (3326) ப்ரளய காலத்தில் உலகங்களேயெல்லாம் அமுதுசெய்த பெரு வாயையுடையவனே! நிகரில்லாத புகழுடைய பெருமானே! அப்ராக்ருத மான தேஜோமய திவ்ய மங்கள விக்ரஹத்தை உடையவனே! மிகப் பெரியோனே! அடியேன் ஆருயிரே! உலகுக்கெல்லாம் திலகம்போன்ற திருமலேயில் விளங்கும் என் ஸ்வாமியே! குல பரம்பரையாக உனக்கு அடிமைப்பட்டிருப்பவனுன அடியேன் உன்து திருவடிகளே வந்தடையும்படி அருளுவாயாக! (3328) அருளே வடிவெடுத்த பரம்பொருளே! ஆச்சரிய குணக்கடலே! நெஞ்சுக்குள்ளே புகுந்து தித்திக்கும் அமுதே! தேவாதிதேவனே! அடியேன் விஷயத்தில் இரங்கி யருளவேண்டும். (3335) அலர் மேல் மங்கை ஒரு க்ஷணமும் பிரிந்திருக்கமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு நித்யவாஸம் பண்ணப்பெற்ற திருமார்பை உடையவனே! ஒப்பற்ற புகழுடையவனே! மூவுலகுக்கும் நாயகனே! நீசனுன என்னேயும் அடிமைகொள்பவனே! நிகரிலாத்தேவர்களும் மஹர்ஷிகளும் விரும்பிவந்து பணியும் திருமலேயில் வாழ்பவனே! புகல்ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்துபுகுந்தேன்

7. குலசேகராழ்வார்—திருவேங்கடமலேயில் வாழ்ச்சி கிடைக்கப்பெற்றுல், விவேகமற்ற திர்யக்காகப் பிறப்பதும் பரம உத்தேச்யம், இந்த ஆழ்வாருக்கு. திருமலேயோடு ஸம்பந்தமுடைய ஏதாவதொரு பிறப்பு வாய்த்தால் போதுமானது. (685) எம்பெருமானது திருவருள் நோக்கம் பதியுமாறு அவன் கண்முகப்பிலே, ஓர் அசேதனப்பொருளாகி—படியாகி—அந்த நிலேயிலேயே புகவாரின் பவளவாய் காணும்படியான சைதந்யமும் பெறவேண்டும் என்ற விசேஷ விண்ணப்பத்தைத் திருவேங்கடமுடையான் திருவடிவாரத்தில் செய்கிருர், ஆழ்வார். இதை யொட்டியே ஸந்நிதியின் உள் வாசற்படி ''குலசேகரன்படி'' யாயிற்று. (686) எத்

தலையும் ஐச்வர்யத்தையும் விரும்பமாட்டேன். செம்பவளவாயான் எம்பெருமான் திருவேங்கடம் என்னும் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே!

8. பெரியாழ்வார்—(180) இராவணனை முடித்து நல்ல விபீஷணனுக்கு முடிசூட்டி, 'என் பெயர் ப்ரகாசிக்குமளவும் செங்கோல் செலுத்தக்கடவது' என்று அருள் செய்த ராமபிரானே திருமலையில் வாழ்ந்தருளுகிறான். (184) ஆயர்மங்கையரிடையே நிச்சலும் தீமைகள் செய்த கண்ணபிரானே திருமலையில் எழுந்தருளியிருக்கிற என் ஸ்வாமி. (207) என்னுடையவன் என்று அபிமானிக்கும்படி திருமலையில் நிற்பவன் ஸகல வேதங்களுக்கும் பொருளாயிருப்பவனே! (463) ஆகாசத்தளவும் உயர்ந்திருக்கப்பெற்ற கொடுமுடியையுடைய திருவேங்கட மலையை இருப்பிடமாகக் கொண்டவனே! உலகத்தவர்களை வாழ்விப்பதற்கென்றே கல்யாண குணங்கள் நிறைந்து எழுந்தருளியிருப்பவனே! அடியாரது குற்றத்தைக் கண்ணெடுத்துப் பாராத சதிரையுடையவனே! எனது ஆத்மாவுக்கும் என் உடைமையான சரீரத்திற்கும் உன்னுடைய சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டேன். உன் அருளையே விரும்பிநின்றேன். அதனையே பரம புருஷார்த்தமாகக் கொள்ளும் நிலைமையை எனக்கு அமைத்து அருளினையே, இனிச்செய்யவேண்டுவது என்ன இருக்கிறது? உன் அபேக்ஷிதமும் தலைக்கட்டிற்று; என் அபேக்ஷிதமும் தலைக்கட்டிற்று இனி உன் திருவுள்ளப்படி நடப்பதே எனது கடமை.

9. ஆண்டாள்—(506) காமதேவா! கொத்தலர் பூங்கணை தொடுத்து, கோவிந்தநாமத்தை நெஞ்சில் தரித்துக்கொண்டு, அற்புதனை திருவேங்கடமுடையான் என்கிற விளக்கிலே நான் சேரும்படி என்னை நீ செய்யவேண்டும். (535) கூடல் தெய்வமே! வாமனாவதாரம் செய்த எம்பெருமான் மனமுவந்து திருவேங்கட மலையில் நித்யவாஸம் செய்தருளுகிறான்; அவன் ஓடிவந்து என்னுடைய கையைப் பிடித்துத் தன்னோடு அணைத்துக் கொள்வனாகில் நீ கூடவேண்டும். (579) திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கிற என் கோவிந்தன் குணம்பாடி, அதுவே தாரகமாக என் பிராணனை ரக்ஷித்திருக்க என்னால் முடியுமோ? (585) திருமலையை இருப்பிடமாகக்கொண்டு வாழ்கின்ற மதயானைபோலெழுந்த காளமேகங்களே! சேஷசாயியின் வார்த்தை இப்படிப் பொய்யாகி விட்டதே! ஆச்ரிதரக்ஷகன் என்பதையே மறந்து ஓர் பெண் கொடியை வதைசெய்தான் எனப்பெயர்பெறப்போகிறான் வேங்கடவன். (601) பாடும் குயில்காள்! ஏன் இப்படிக் கர்ணகடூரமாகக்

கூச்சலிடுகிறீர்கள்? விலக்ஷணமான திருவேங்கடமலையை இருப்பிடமாக உடைய அழகன் எனக்கு ஒருவாழ்வு தந்தால் அப்போது இங்குவந்து பாடுங்கள். அப்போது நானே உங்களை வரவழைத்து உங்களது பாட்டுக்களைக் கேட்பேன். (604) மேசமே! நல் வேங்கடத்துள் நின்ற அழகப்பிரானார் தம்மை என்னெஞ்சத்து அகப்படத் தழுவ நின்று, என்னை அவரோடே ஒரு வ்யக்தியாக நெருக்கி வைத்துப் பிறகு நீ வர்ஷிப்பாயாகில் அப்போதன்றோ உன்னுடைய மழைபொழிதல் ஆனந்தகரமாயிருக்கும்!

11. திருப்பாணாழ்வார்—(927) பரிசுத்தனாய், ஜகத்காரணபூதனாய், மஹோபகாரகனாய், அடியார்க்கு என்னை ஆட்படுத்துகையாலே வந்த சிறந்த புகழை உடையவனாய், நித்யஸூரிகட்குத் தலைவனாயிருந்தும் ஆச்ரிதர்களுக்காகத் திருமலையில்வந்து தங்குபவன், ஆச்ரயிப்போர்க்கு ஸர்வஸுலபன்; அடிபணிகின்றவர்களின் தோஷங்களைக் காண்கையாகிற தோஷமில்லாத வத்ஸலன். (939) கிளைக்குக் கிளை தாவும் குரங்குகளும் பக்திசெய்யும் திருவேங்கடமலையில் நித்யஸூரிகள் புஷ்பங்களைக்கொண்டு ஆராதிக்கும்படி நிற்கிறான் ஆதிபிரான்.

12. திருமங்கையாழ்வார்— "சீரார் திருவேங்கடமே!", "தெய்வ வடமலை", "மின்னிமழைதவழும் வேகங்டம்" என்றெல்லாம் அழைக்கிறார் திருமடலில். திருவேங்கடமுடையானைக் கண்ணபிரானாக அனுபவிக்கிறார் முதலில். (1020) அர்ஜுனனுக்காக பாரதயுத்தத்தில் கையும் அணியும் வகுத்து வெற்றிபெற்ற பரஞ்சோதியானவனும், திருவாய்ப்பாடியிலே ராஸக்ரீடை செய்தருளின கோபாலனும், தன்னைத்துதிப்பவர்களுடைய மனத்துள் வஸிப்பவனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தை அடை நெஞ்சமே! (1021) மாவலியினது யாகபூமியிலே பிரமசாரிவேஷத்துடன் எழுந்தருளித் தனது திருக்கையாலே பூமியை யாசித்தவனும், மராமரம் ஏழும் எய்த வலிவையுடையவனும், அஷ்டபுஜங்களையுடையவனும், திடமான துதிக்கையையுடைய கஜேந்திரனது துன்பத்தைப் போக்கினவனுமான எம்பெருமானே திருமலையில் எழுந்தருளியிருக்கிறான். (1023) பஞ்சபூதஸ்வரூபியானவனும், ஸஹஸ்ரநாமங்களாலும் பிரதிபாதிக்கப்பட்டவனும், கருமமடியாகப் பிறத்தல் இல்லாதவனுமான எம்பெருமான் வளருகிற இடமான திருமலையை அடை நெஞ்சமே. (1037) இராவணனுடைய திண்ணிய சரீரம் பிளந்துபோம்படியாக அம்புகளை எய்த ராமனே திருமலையப்பனாக ஸேவைஸாதிக்கிறான்: அவனே என் துன்பங்களை நீக்கியருளவேண்டும். (1275) ஒளி

விளங்காநின்ற சிகரத்தையுடைய திருவேங்கட மலையின்மேல் பொருந்தியிருப்பவன் வேதங்களால் காணக்கூடிய நல்ல விளக்கானவன். (1849) பொன்போல் விரும்பத்தகுந்தவனும், நீலமணி போன்றவனும், அழகு மிக்கதோர் மின்னற்கொடிபோன்று உஜ்ஜ்வலஸ்வரூபியானவனும் என்னை ஆட்கொண்ட ஸ்வாமியுமான ஸர்வேச்வரனை திருமலையின் சிகரத்தில் ஸேவித்தேன். (2001) திருமங்கையாழ்வாருடைய ஹ்ருதயத்துள்ளே வந்து நித்யவாஸம் செய்வதற்கு உபாயாநுஷ்டானமாகவன்றே திருப்பாற்கடலிலும் திருவேங்கடமலையிலும் வஸித்தது! இப்போது அவ்விடங்களை யெல்லாம்விட்டு ஆழ்வாருடைய ஹ்ருதயத்தினுள்ளே எளியனாயுளன் பரமபுருஷன்... இத்தியாதி.

ப்ரத்யக்ஷ தெய்வம்

ஆக, இதுவரை அனுபவித்த அருளிச்செயல் ஸாரத்தினின்றும், அதனை அனுஸரித்தே தோன்றிய ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்ரம், திருவேங்கடக்கலம்பகம் இரண்டிலிருந்தும் வெளிப்படுகிற தேறின பொருளாவது: தேவாதிதேவனான பரமபதநிலையன் ஜகத்ரக்ஷணார்த்தமாக முதலில் திருப்பாற்கடலில் வந்து தங்கி, பின்பு விபவாவதாரமெடுத்து, "இப்படி நாம் வருவதும் போவதுமாக இராமல் ஸ்திரப்ரதிஷ்டையாக இருந்து ஸம்ஸாரிகளைக்காக்க வேண்டும்" என்று திருவுள்ளம்பற்றியே திருமலை முதலிய திருப்பதிகளில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருந்து, பக்தர்களுடைய நெஞ்சிலே குடிகொள்கிறான் என்பதே. நமக்காகவே ஸர்வஸுலபனாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவடிகளை மறக்க முடியுமா? அவனை இடைவிடாது அனுபவித்து ஆத்மாவுக்கு நன்மையை விளைத்துக்கொள்ளவேண்டாமா? நம்மையுமறியாமல் "திருவேங்கடமலை" என்று சொல்லிவிட்டாலே, பகவான் நம்மைத் திருவேங்கடம் பாடினவராகக் கொள்கிறான். புத்திபூர்வமாகச் சொல்லாதிருக்கும்போதே, இந்தச் சொல் இவன் வாயிலிருந்து வந்ததேயென்று உகந்து, எம்பெருமான் தானே 'மடிமாங்காயிட்டுத் திருவுள்ளம்பற்றுகிறானாம்.' அங்ஙனமாயின், புத்தி பூர்வமாகவே பக்திசெய்தால் திருமலை அப்பன் என்னதான் செய்தருளமாட்டான்? பரமபதத்திலுள்ள நித்யமுக்தர்களுங்கூட இத்திருமலையிலேவந்து அடிமை செய்கையில் நாம் அடிமை செய்யக்குறையென்? வைகுண்டத்தில் பகவானது புகழுக்கு அந்தமுண்டு; இங்குத் திருமலையில் அவனது ஸௌசில்யாதி கல்யாண குணங்களால் அவன் புகழுக்கு அந்தமில்லை. எளிதாக எல்லோரும் தொழநிற்கிறார் இந்த நெடு வேங்கடத்தில்!

"க்ருதே து நாஸிம்ஹோ ரூக் த்ரேதாயாம் ரகுநந்தன: |
த்வாபரே வாஸுதேவஸ்ச கலௌ வேங்கட நாயக: ||"

என்ற ஆதித்யபுராண ச்லோகமும் யுகக்ரமத்தில் பகவான் தனது சங்கல்பப்படி செய்தருளிய அவதாரங்களைக் குறிப்பிடுகிறது.

ஸ்ரீவேங்கடேச்வரனை விஷ்ணுவாகவும், சிவனாகவும், முருகனாகவும், சக்தி தேவியாகவும் அவரவர் தம் தமது கருத்துப்படி வணங்குகின்றனர்; அங்ஙனம் வணங்குவதற்கு ஆதாரமும் காட்டுகின்றனர். ஸ்ரீ ஆதி சங்கரர் ஷை ஸந்நிதியில் பகவானுடைய திருவடிவாரத்தில் "ஸ்ரீ" சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்த சரித்திரத்தையும், ஸ்ரீ ராமானுஜர் திருமலை அப்பனுக்குச் சங்குசக்கரம், ஸமர்ப்பித்த சரித்திரத்தையும், நாகாபரண—திருவாபரண—வஸ்த்ர விசேஷங்களையும், நவராத்ரியின்போது ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளும் தனிச்சிறப்பையும், மார்கழியில் வில்வார்ச்சனை செய்யும் விசித்திரத்தையும், கோவில் மதில்மேல் சிங்கம் இருப்பதையும் அவரவர் தத்தம் கொள்கைக்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

எல்லாத் தெய்வங்களும் ஒருங்கே ஒருருக்கொண்ட சமஷ்டி தெய்வமே—பரதத்துவமே—வேங்கடமுடையான் என்பது இங்ஙனம் தெளிவாகின்றது. கோவிந்த கோஷத்தினிடையே அந்தத் திவ்யமங்கள திருமேனியை ஸேவிக்கும்போது நமது சிறுமையும் அவரது பெருமையும் நமக்குப் புலனாகின்றது. வேங்கடமுடையானே ப்ரத்யக்ஷ தெய்வம் என்று நன்கு உணர்கின்றோம். பயபக்தியுடன் அடிபணிகின்றோம். நமது ஸகலவிதமான தொல்லைகளையும் மறந்துவிடுகிறோம்; அவனேகதி, அவனது திருவுள்ளப்படியே எல்லாம் நடைபெறும் என்றும் தேறுகின்றோம். இது அனுபவஸித்தம்.

யாரை ஏமாற்றினாலும் இந்த எழுமலையானை ஏமாற்றமுடியாது என்பது ப்ரஸித்தம். திருமலையில் செலுத்த வேண்டிய எந்த ப்ரார்த்தனையையும் செலுத்தி நிறைவேற்றத் தவறமாட்டார்கள். ஸுமங்கலியும் பிரார்த்தனையிருந்தால் கணவனுடன் மொட்டையடித்துக் கொள்ளத் தயங்கமாட்டாள். கைக்குழந்தையானாலும் தொண்டுக்கிழமாயிருந்தாலும் ப்ரார்த்தனை செலுத்தும் விஷயத்தில் ஒரே கண்டிப்புத்தான.

ஸ்ரீ வேங்கடாசலபதியின் பெயருக்கு ஒரு தனிகரால் மாற்றப்பட்டிருந்த இரண்டு 'ப்ரோநோட்' கடன் பத்திரங்கள் விஷயமாக 'நோடீஸ்' போனதுமே கடன் கொடுக்க வேண்டியவர் அலறிக்கொண்டு பயபக்தியுடன் பணத்தைக் கொண்டுவந்து கட்டிய செய்தியைச் சமீபத்தில் பத்திரிகையில் பார்க்கவில்லையா? ஒரு

பக்தருடைய காணிக்கை விஷயமாக பகவான் வாதியானார்; அவரெதிரில் ப்ரதிவாதியாக நிற்பதற்கு யாருக்குத் தைர்யம் வரும்? நாஸ்திகனையும் நல்வழிப்படுத்தும் நாயகனன்றோ ஆனந்த நிலைய விமானத்தினடியில் கோயில் கொண்டிருப்பது!

“அபரிச்சின்னமைச்வர்யம்” என்று ஆரம்பிக்கும் ஒருச்லோகம் அடியார்களுக்கு அந்தமில் நலம் அருளும் அப்பனின் அந்தமில் புகழ் பாடுகிறது: “அடிபணிவோர்க்கு அளவற்ற அருளும் பொருளும் அளிக்கும் வேங்கட மாமலையின்மீது சிரிய:பதியான ஸர்வேச்வரன் வைகுந்தத்தையும் திருப்பாற்கடலையும் ஆலந்தளிரையும் விட மிகுந்த மன உகப்புடன் எழுந்தருளியிருக்கிறான்; அவனே பக்தவத்ஸலன்:ஸகல ஸௌபாக்யங்களையும் அளித்தருள்பவன்.”

அலர்மேல்மங்கையுறைமார்பனான ஸ்ரீநிவாஸனே திருவல்லிக்கேணியில் ஸ்ரீ வேங்கடக்ருஷ்ணனாகச் சேவை ஸாதிக்கிறார் என்பது “எந்தை ஒரு அல்லித்தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன் திருவல்லிக்கேணியான் சென்று” என்ற பேயாழ்வார் வாக்கிலிருந்து தெளிவாகிறது. இதற்கு ஒரு சரித்திரமும் கூறுவதுண்டு. திவ்ய தேச யாத்திரையின் மத்தியில் திருமலையில் பக்திப் பெருக்குடன் வணங்கிய ஸுமதி என்ற துண்டீரமண்டலத்தரசனுக்குத் திருவேங்கடமுடையானைப் பாரதப்போரில் பார்த்தனுக்குச்சாரதியாய்நின்ற திருக்கோலத்தில் ஸேவிக்கவேண்டுமென்ற பேரவா எழுந்தது; மனமுருகிப் பிரார்த்தித்தான்; அவனது ப்ரார்த்தனைக்கு இரங்கி திருமலை அப்பன் அங்ஙனமே ப்ருந்தாரண்யம் என்ற திருவல்லிக்கேணியில் கைரவிணி புஷ்கரணியின் கரையில் ஸேவை ஸாதிப்பதாகக் கருணைகூர்ந்து வாக்களித்தார். வேங்கட க்ருஷ்ணன், பார்த்தசாரதி, கீதாசார்யன் என்ற பர்யாய நாமங்களுடன் ருக்மிணீஸமேதராக, பலராமன், அநிருத்தன், ப்ரத்யும்நன், ஸாத்யகி முதலானாரோடு ஒரேகுடும்பமாக பக்தன் ஸுமதிக்குச் சேவை சாதித்தருளி, அவனை இன்பவெள்ளத்தில் திளையச்செய்தார், பகவான் ஸ்ரீ வேங்கடேச்வரன்.

அன்று ஸுமதிக்காக அளித்த ஸேவையே இன்றும் நமக்குக் கிடைத்துவருகிறது: வலதுதிருக்கையில் சங்கமும், இடது திருக்கையில் தானமுத்திரையும் கொண்ட திவ்யமங்கள விக்ரகமாக, சக்கரமில்லாமல், வேங்கடக்ருஷ்ணன் காட்சி தருகிறார். பாரதப்போரில் காட்சிதந்த கண்ணனைப்போல, பார்த்தன் தன் தேர்முன் நின்ற திருவல்லிக்கேணியானை ஸேவிக்கும்போது திருவேங்கடமுடையானை நினைக்காமலிருக்க எங்ஙனம் முடியும்?

ஆணைப்பார் இவன் நேரில்லைகாண்
திருவோணத்தான் உலகாளுமென்பார்களே! ★

பங்குனி உத்திரம்

திருக்கல்யாண மஹோத்ஸவம்

திருவல்லிக்கேணி

ஸ்ரீவேதவல்லித் தாயாரும், ஸ்ரீ ரங்கநாதஸ்வாமியும்

ஸ்ரீவேதவல்லித் தாயார்

பெரிய பிராட்டியார் அவதார தின சிந்தனை.

❋

"பங்குனி உத்தரம்" என்றதுமே பெரியதோர் குதூகலம் நமது மனத்திலே எழுகின்றது. அதற்குக்காரணம் நாம் வருடந்தோறும் ஸேவிக்கும் பங்குனியுத்தரத் திருக்கல்யாண மகோத்ஸவக் காட்சியேயாகும். திருவல்லிக்கேணியில் ஸ்ரீ வேதவல்லித்தாயாருக்கும் 'மந்நாதன்' என்று அவளால் குதூகலத்துடன் அழைக்கப்பட்ட ஸ்ரீ ரங்கநாதஸ்வாமிக்கும் மாசி மாத சுக்லபக்ஷ த்வாதசியன்று திருக்கல்யாண மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறதெனினும் பங்குனி யுத்தரத்தன்றும்கூட நடைபெறுகிறது ப்ரஸித்தம். இதற்குக் காரணம் பங்குனியுத்தரம் பெரிய பிராட்டியாரின் திரு நக்ஷத்திரமென்பதேயாம்.

ஸ்ரீ காஞ்சியில் பெருந்தேவித்தாயாருக்கும் பேரருளாளனுக்கும் திருக்கல்யாணமும், பூலோக வைகுண்டமென்ற ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாயகிக்கும் அழகிய மணவாளனுக்கும் திருமணமும் இப்பங்குனி யுத்தர உத்ஸவத்தில் அதிவிசேஷம். இங்ஙனமே எல்லா ஸ்தலங்களிலும் நடைபெறுவதையும், பிராட்டியும் பகவானும் ஏக ஸிம்மாஸனத்திலே வீற்றிருக்கும்போது கத்யத்ரயம் ஸேவிக்கப்படுவதையும் காண்கின்றோம்.

பெரிய பிராட்டியாரின் திருவவதார தினமாகிய பங்குனி யுத்தர நன்னாளில் நமது சிந்தனையைப் பிராட்டியின் பெருமை விஷயத்தில் செலுத்துவோமாக. (1) திருவல்லிக்கேணி ஸ்தல புராணம்; (2) ஸ்ரீஸூக்தம்; (3) ஸ்ரீ விஷ்ணுபுராணம்; (4) லக்ஷ்ம்யஷ்டகம்; (5) லக்ஷ்ம்யஷ்டோத்தர சதம்; (6) சதுச் ச்லோகீ; (7) சரணாகதி கத்யம்; (8) ஸ்ரீஸ்தவம்; (9) ஸ்ரீகுணரத்னகோசம்; (10) ஸ்ரீஸ்துதி; (11) தயாசதகம்; (12) மும்மணிக்கோவை; (13) ஸ்ரீவசனபூஷணம்; (14) கனகதாராஸ்தோத்ரம்; (15) லக்ஷ்மீ ஸஹஸ்ரம் முதலியவற்றிலிருந்து சில திவலைகளை யனுபவிப்பதே நமக்குப் பங்குனியுத்தரப் பண்டிகைக் கொண்டாட்டமாகும்.

1. ப்ருந்தாரண்ய நிவாஸினி

ப்ருந்தாரண்ய க்ஷேத்திரம் என்ற இத் திருவல்லிக்கேணியில் பிருகு முதலிய ஸப்தரிஷிகளும் கைரவிணி என்ற புண்ய தீர்த்தத்

தின் கரையிலே மோக்ஷத்தைக் கருதிக் கடுந்தவம் புரிந்த சமயம் ஒரு சந்தனமரத்தினடியில் பெரிய பிராட்டியார் ஒரு பெண் மகவாய் அவதரித்தருளினர். குழந்தையைக் கண்டெடுத்த பிருகு முனிவர் "வேதவல்லி" என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்துவந்தார். தனது திவ்ய மஹிஷி ப்ருகுபுத்ரியாக வளர்ந்து வருவதை முன்னிட்டு, அவளை இத் தலத்தில் மணப்பதற்கு ஒரு அழகிய மாப்பிள்ளையாக வந்தார் பகவான். மாசிமாத சுக்லபக்ஷத்வாதசியன்று பிருகு முனிவரது ஆச்ரமத்தில் மிக்க ஒளியுடன் தாமே தோன்றியருளிய அழகிய மணவாளனைப் பார்த்து, புன்னகை பூத்து, "மந்நாதன்" என்று பூரிப்புடன் கூறினளாம் ப்ருகுபுத்ரி. வேதவல்லியை மணம் புரிந்த மந்நாதன் ப்ருகு முனிவரின் வேண்டுகோளின்படி இன்றும் இத் தலத்தில் ஸேவையளிக்கின்ருர். இத் திவ்ய தம்பதிகளின் ஏகாஸன ஸேவையை இவ்வியாஸத்தின் முகப்புப்படத்தில் காண்க.

பகவான் உலகுக்கெல்லாம் பிதா; பிராட்டி உலகுக்கெல்லாம் மாதா; உலகனைத்தும் இவ்விருவரது மக்கள்; அன்னையும் பிதாவும் நம்மால் ஒருங்கே வழிபட வேண்டியவர்கள்: இவ்விருவர்களது சேர்த்தியே நமக்குத் தஞ்சம்; அதுவே அருள்சுரந்து நம்மைக் காக்கும். இதுவே இந்தப் பங்குனியுத்தர உத்ஸவத்தின் தத்துவம்.

2. ஸ்ரீஸூக்தம்.

பதினைந்து ரிக்குகளைக்கொண்ட ஸ்ரீஸூக்தம் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் புகழைபபாடும் விதத்தைக் காணுங்கள். 11-வது ரிக்கு கூறுவதாவது: "கர்த்தமரிஷியே! நீர் உமது புதல்வியாக எடுத்து வளர்த்த மோக்ஷலக்ஷ்மி தன கடாக்ஷத்தினல உம்மை ச்ரேஷ்டராகச் செய்தாள். அப்படி லக்ஷ்மீகடாக்ஷம பெற்ற நீர் என்னிடத்தில் அனுக்ரஹம் பண்ணவேணும். நீர் புருஷகாரம்பண்ணி, ஸகல ஜகத்தையும் சிருஷ்டிக்கிறவளாய்த் தாமரைப் பூமாலையையணிந்திருக்கிற மோக்ஷலக்ஷ்மியை என்னுடைய குலத்திலே நித்யவாஸம் பண்ணும்படிச் செய்யும்!" 13-வது ரிக்கு கூறுவதாவது: "ஸ்ரீமஹாவிஷ்ணுவே! அம்ருதத்தினல் நனைந்திருக்கிற திருமேனியையுடையவளுமாய், அந்தரிக்ஷலோகத்துக்கு ஈச்வரியாய், அல்லது எல்லாருடைய ஹ்ருதயகமலத்தில் வஸிக்கிறவளாயும், தாமரை மாலையையுடையவளாயும், ஸந்தோஷிப்பிக்கிறவளாயும், பரிசுத்தையாயுமிருக்கிற மோக்ஷலக்ஷ்மியை என்னிடத்தில் சேர்ப்பியும்!" 14-வது ரிக்கு கூறுவதாவது: "லோகபரிபாலனத்துக்காகச் செங்கோலைக் கையிலேந்துபவளும், தர்மதண்டரூபியாயிருப்

பவளும், வாக்ரூபமாயிருப்பவளுமான லக்ஷ்மியை என்னிடம் ஸ்திரப்படுத்தும்". கடைசி ரிக்கு முடிப்பதாவது: "எந்த மோக்ஷ லக்ஷ்மியின் கடாட்சத்தினால் தனம், பசுக்கள், தாஸர்கள், வாஹனங்கள், புத்ராதிகள் இவை முதலான ஐச்வர்யத்தை யடைவேனோ, அந்த ஸ்ரீமஹாலக்ஷ்மி என் க்ருஹத்திலே நித்யவாஸம் பண்ணும்படிச் செய்தருள வேண்டும்.

இந்தப் பதினைந்து ரிக்குகளைக்கொண்டே மஹாலக்ஷ்மிக்கு ஆராதனம் செய்வோர் சிஷ்டர். முதல் ரிக்கினால் ஆவாஹனம் செய்து, பிறகு முறையே ஒவ்வொரு ரிக்கினால் ஆஸனம், அர்க்யம், பாத்யம், ஆசமனம், ஸ்நானம், வஸ்த்ரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நிவேதநம் முதலியவற்றைச் சமர்ப்பித்து, ப்ரதக்ஷிணம் செய்வர். ஹோமத்தை க்ரமேண செய்துமுடித்து, ஸ்ரீ மஹாலக்ஷ்மியை த்யானித்து, 28 முறை ஸ்ரீஸூக்தத்தை ஜபித்து, கடைசி ரிக்கினால் உத்வாஸநம் செய்வர். ஒவ்வொரு ரிக்கு ஒவ்வொரு பலனைக் கொடுக்குமென்றும், தனத்தை எல்லா ரிக்குகளும் கொடுக்கும் என்றும் கூறப்படுவதால் ஸம்பத்தைக் கோருபவர்கள் இந்த ஸ்ரீஸூக்தத்தின் பதினைந்து ரிக்குகளையும் தினந்தோறும் ஜபிப்பார்கள். மனஸ்ஸினால் மனிதன் இச்சிப்பது ஆனந்தம்; எல்லாருக்கும் ஆனந்தத்தை யுண்டாக்குகிறவள் ஸ்ரீ மஹாலக்ஷ்மி.

3. ஸ்ரீவிஷ்ணுபுராண ஸ்ரீ ஸ்துதி.

கோப முனியின் சாபத்தால் தாரித்ரிய இருளில் அவதிப்பட்ட இந்திரன், ஐச்வர்ய லக்ஷ்மியின் கடாக்ஷத்தால் ஒளி பெற்று தேஜஸ்வியானான். தனக்குக் கிடைத்த நல்வாழ்வு ஸகலருக்கும் கிடைக்கட்டும் என்று அதற்கு வகையும் செய்தான். ஸமஸ்த ஐச்வர்ய காரணமாய் இந்திரனாலே செய்யப்பட்ட ஸ்ரீ ஸ்துதியை நித்யமும் பக்தியுடன் பாராயணம் செய்தால் ஒருகாலும் அசுபத்தையடையாமலும் ஸர்வமனோரதங்களும் நிறைவேறப் பெற்றும் சிறப்பாக வாழலாம்.

ஸ்ரீ ஸ்துதியின் ஸாரமான தத்துவங்களைக் காண்போம்: "மலர்ந்த தாமரையை யொத்த கண்ணழகையுடையவளே! நீ தாமரையில் வீற்றிருக்கிறாய்; கையில் தாமரை தரித்திருக்கிறாய்; முகமண்டலமும் தாமரையை யொத்திருக்கிறது. நீயே மலர்மகள்... ஸகல மங்களஸ்வரூபியான நீ, உலகங்களைப் பரிசுத்தம் செய்வதற்காகப் பல ஸ்வரூபங்களுடன் விளங்குகிறாய். வித்யைகளில் எத்தனை வகையுண்டோ அத்தனையும் நீயே. மூவுலகும் உன்

கடாக்ஷத்தைப் பெற்றால் தான் ஸௌபாக்யங்களைப் பெறுகின்றன; இன்றேல் நாசமடைகின்றன. உன் திருவருள் உண்டாயின் பார்யை, புத்ர பந்து மித்ர, க்ருஹ, க்ஷேத்ர, வாஹனாதிகள் ப்ராப்தமாகின்றன. அதுமட்டுமா? தேகாரோக்யமும் ஐச்வர்யமும் சத்ரு ஜயமும் சுகமும் கிடைப்பது நிச்சயமாகிறது. உன் திருவருளுக்கு எவன் இலக்காகிறானோ அவனே ச்ரேஷ்டன், குணவான், புண்யவான், புத்திமான், சூரன், பராக்ரமசாலி—யாவும் ஆகிறான். நீ உதறித்தள்ளினால் அவனிடமுள்ள ஸகல ஸத்குணங்களும் துர்க்குணங்களாக மாறிவிடுகின்றன. உன் திருக்கல்யாண குணங்களை நான்முகனாலும் ஸம்பூர்ணமாகத் துதிக்க முடியாது. ஸகல உலகங்களுக்கும் நீயே தாய்; பகவான் நாராயணனே தந்தை. சராசரஸ்வரூபமான இப்பிரபஞ்சமெல்லாம் நீங்களிருவரே வ்யாபித்திருக்கிறீர்கள்...''

ஆக, பிராட்டியும் ஈச்வர தத்துவமும் சேர்ந்தே மிதுனமாகவே அருள்புரிகிறார்கள். ஸ்ரீ ஸூக்தத்தையும் ஸ்ரீ விஷ்ணு புராணத்தையும் பின்பற்றியே நமது ஆழ்வார்களுடைய அருள்வாக்கும் அமைந்திருப்பதை நாம் நன்கு உணர்கின்றோம், "அகலகில்லேன் இறையும்'' என்ற ஓர் உதாரணமே போதுமன்றோ!

4. ஸ்ரீமஹாலக்ஷ்ம்யஷ்டகஸ்தவம்.

ஸ்ரீ விஷ்ணு புராணத்திலுள்ள ஸ்ரீ ஸ்துதியைப் போன்றேயுள்ளது இந்த அஷ்டகமும். இதுவும் இந்திரனால் செய்யப்பட்டது. இதன் பலச்ருதியைப் பாருங்கள்—தினமும் ஒருமுறை பாராயணம் செய்தால் மஹாபாபவிநாசனம்; இருமுறை பாராயணம் செய்தால் தனதான்ய ஸம்ருத்தி; மும்முறை பாராயணம் செய்தால் மஹா சத்ரு விநாசனம்; தவிர, மஹாலக்ஷ்மி என்றென்றும் பிரஸந்ந வதனத்துடன் ஸ்திரப்ரதிஷ்டையாயிருப்பள். பரதத்துவமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பத்நி என்ற உந்நத ஸ்தானத்துக்கு உகந்தவாறு அமைந்துள்ளன இந்த ஸ்தோத்திரத்தின் சொல்லழகும் சொல்லடுக்கும். ஸர்வேச்வரனுக்குள்ள ஸர்வஜ்ஞத்வமும், ஸகல சக்திகளும் ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கும் இருப்பதாக இவ்வஷ்டகத்தில் கூறுவதிலிருந்தும் திவ்ய தம்பதிகள் மிதுனமாகவே அருள் சுரப்பது தெளிவாகின்றது.

5. லக்ஷ்மி அஷ்டோத்தர சதம்.

அன்னையின் கல்யாண குணங்களையும் அவதாரங்களையும் அடியொற்றி நூற்றெட்டு திருநாமங்களைக் கொண்ட ஒரு

அஷ்டோத்தர சதநாம மாலை ஸமர்ப்பிக்கப்படுகிறது. அனேகமாக எல்லா ஸந்நிதிகளிலும் அர்ச்சனையின்போது இந்த நாமாவளியே ஸேவிக்கப்படுகிறது. இவற்றுள் சில திரு நாமங்களைக் காணுங்கள்;— வித்யா, ஸர்வபூதஹிதப்ரதா, அனுக்ரஹப்ரதா, லோகசோகவிநாசினீ, தாரித்ர்யநாசினீ, யசஸ்வினீ. சுபப்ரதா. ஸர்வோபத்ரவவாரிணீ, த்ரிகாலஜ்ஞான ஸம்பன்னா...இத்யாதி.

6 சதுச் ச்லோகி.

பரம புருஷனான பகவானுக்கு ஏற்பட்ட தனிச்சிறப்பான ஸ்வாமித்வம், ஸௌலப்யம், மோக்ஷப்ரதத்வம், ப்ராப்யத்வம் ஆகிய நான்கு ஸ்வபாவங்களிலும் பிராட்டிக்கும் பிரியாதசம்பந்தம் உண்டு என்பதை ஆளவந்தார் சதுச் ச்லோகியில் விளக்குகிறார். அங்ஙனமே, பகவானுடைய திருவவதாரங்களுக்கும் திவ்ய ரூபங்களுக்கும் தகுந்தவாறே பிராட்டியும் பிரிவின்றித் தோன்றுவதையும் ஆளவந்தார் எடுத்துக்காட்டுகிறார். மூன்று ச்லோகங்களால் பத்தினியான ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு பகவானுடைய ஸ்வரூபம், விக்ரஹம் அவதாரம் முதலியவற்றில் எப்பொழுதும்பிரிவில்லாத சேர்த்தியைச் சொல்லி, கடைசி ச்லோகத்தால் பிராட்டியும் பரமபுருஷனைப்போலவே பிரதானமாக அடையவேண்டிய ப்ரயோஜனமே என்பதை அறிவுறுத்துகிறார். அமைப்பு, குணங்கள், லீலைகள், மஹிமை முதலியவற்றால் அத்யத்புதமாக உள்ள "ஸ்ரீ" என்ற திருநாமமுள்ள பிராட்டியினுடைய ஸம்பந்தம் பகவானுக்கும் மிகவும் ப்ரியமானது.

7. சரணாகதி கத்யம்.

உலகில் எது ஸித்திக்க வேணுமானாலும் பிராட்டியருளாலேயே ஸித்தித்தாக வேண்டுமென்ற அத்யவஸாயத்துடன் எம்பெருமானார் முதலில் பிராட்டியைச் சரணம் புகுந்து, பிறகு பெருமாள் திருவடிவாரத்திலே சரணாகதி பண்ணுகிறார். பங்குனியுத்தரத்திருநாளில் ஸ்ரீரங்கநாதனும் ஸ்ரீரங்கநாச்சியாருமான சேர்த்தியிலே ஈடுபட்ட ஸ்வாமி ராமானுஜர் கத்யத்ரயத்தை விண்ணப்பித்தார் என்று கூறுவர்; சிலர், சரணாகதி கத்யம் மட்டும் அனுஸந்திக்கப்பட்டதாகக் கூறுவர்.

சரணாகதி கத்யத்தின் முதல் சூர்ணையின் பொருள் வருமாறு: "ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனான நாராயணனுக்கு உகப்பாயும் தகுந்துமிருக்கிற ஸ்வரூபம், விக்ரஹம், குணம் விபூதி இவைகளையும், ஐச்வர்யம், ஸௌசீல்யம், முதலிய எல்லையில்லாத சிறப்புடைய எண்ணமுடியாத கல்யாணகுண ஸமூஹங்களையும்

உடையவளாய், பரமபூஜ்யையாய், ஸ்ரீ என்று திருநாமமுடையவளாய், வடிவில் புகர் நிறைந்தவளாய், தேவாதி தேவனான எம்பெருமானுடைய திவ்யமஹிஷியாய், ஸகல ஜகத்துக்கும் மாதாவாய், அடியோமுக்குத் தாயாய், புகலற்றவர்களுக்குப் புகலாயிருக்கின்ற பெரிய பிராட்டியை, புகலொன்றில்லா அடியேன் சரணம் புகுகின்றேன்''.

ஸ்ரீ ஸூக்தம், ஸ்ரீ விஷ்ணுபுராணம், ஆழ்வார்களின் அருளிச்செயல், ஆளவந்தாரின் சதுச்ச்லோகி ஆகியவற்றின் ஆழ்பொருளனைத்தையும் ஒருங்கே திரட்டி ஓர் சூர்ணையில் ஸ்வாமி ஸங்கிரஹித்திருக்கிறார் என்பது தெளிவாகிறதன்றோ!

8. ஸ்ரீஸ்தவம்.

ஸ்வாமி எம்பெருமானார் கடைப்பிடித்த வழியையே பின்பற்றி பரமகாருணிகரான கூரத்தாழ்வான் பதினொன்று ச்லோகங்கள் கொண்ட ஸ்ரீஸ்தவத்தை இயற்றியருளி, பிராட்டியின் ஸ்வரூப ரூபகுண விபூதிகளை அனைவரும் உணர்ந்து உய்யும்படி அனுக்ரஹித்துள்ளார்.

அகில லோகங்களுடைய சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார விஷயத்திலும், அவரவர்க்கு ஸ்வர்க்கத்தையோ, மோக்ஷத்தையோ அன்றி நரகத்தையோ அளிப்பதிலும் அலர்மேல் மங்கையின் முக ஜாடையைக் கவனித்து, அவளது திருவுள்ளத்தை அறிந்து, அதன்படி நடக்கின்றனம் பகவான், என்கிறார் ஆழ்வான். பிராட்டியிடம் இல்லாத கல்யாண குணங்களே உலகில் கிடையா; அவளது குணங்களின் எல்லையையும் பேசி முடிக்க யாராலும் முடியாது; அவை வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவை. பிராட்டியின் சேர்த்தியால்தான் புருஷோத்தமனுக்குப் பெருமை; திருமகளால் தான தன்னைப் பாக்யசாலியாகக் கருதுகிறான் பகவான். மங்களகரமானதும் சிலாகிக்கத்தக்கதுமான எப்பொருளும் ஸ்ரீதேவியின் அதீனமாயிருக்கிறது. பிராட்டியின் பெருமை அளவற்றது; அவளது கடாக்ஷமே ப்ரபஞ்சங்களின் ஸத்தைக்குக் காரணம். பெரிய பிராட்டியாரின் கடைக்கண்பார்வைக்கு ஒருக்ஷண காலம் பாத்திரமாயிருந்தாலும் போதுமானது.

9. ஸ்ரீகுணரத்னகோசம்.

எம்பெருமானுக்கும் பிராட்டியினால்தான் ஏற்றம் என்ற தத்வார்த்தம் வேதம் முதற்கொண்டு ஸகல ப்ரமாணங்களாலும் தேறுவதாகும். ஸ்ரீ குணரத்ன கோசத்தில் பட்டர் இதுவிஷய

மாகச் சில அர்த்தவிசேஷங்களை நவநிதிகள் போலவும் நவரத்னங் கள்போலவும் அருளிச் செய்திருக்கிறார்.

29, 30 ச்லோகங்களைக் காணுங்கள். எம்பெருமானுடைய பெருமை பிராட்டியின் ஸம்பந்தத்தினால் வந்தது என்றும், பிராட்டியின் பெருமை ஸ்வதஸ்ஸித்தமானது என்றும் கூறுகிறார். இதற்கு ஒரு உதாரணம் காட்டி விளக்குகிறார். "புஷ்பத்திற்குப் பரிமளத்தினால் ஏற்றம்; பரிமளத்திற்கு இயற்கையாகவே ஏற்றம்". மேலும், பிராட்டியின் கடாக்ஷாதிசயங்கள் பட்டவிடமே பரப்ரஹ்மமாகிறது என்றுகூறி, பிராட்டியின் வைபவம் மேம்பாடு டையது என்பதை அறிவுறுத்துகிறார். இதற்கு ஆதாரமாகப் பின்வரும் ஐதிஹ்யத்தைக் குறிப்பிடலாம்: "எது பரதத்துவம் என்று விசாரிக்கப்புகுந்த வேதாந்தங்கள் ஸ்ரீமந்நாராயணனுடைய திருமார்பில் பிராட்டியின் திருவடிச்சுவடு கண்டு 'இவனே பரம புருஷன்' என்று நிர்ணயித்துக் கவலை தீர்ந்தனவாம்."

பூவும் மணமும், மாணிக்கமும் ஒளியும்போலே பெருமாளும் பிராட்டியும் விட்டுப்பிரியாத மிதுநம் என்று தெளிவாகிறது. "என்னில் சீதைவேறல்லள்" என்றான் பர்த்தா; "நான் ராமனில் வேறல்லள்" என்றாள் பத்னி. இத்தகைய திவ்யதம்பதிகளைச் சேர்த்தியில் பற்றுவதே நமக்கு ஸ்வரூபம்.

10. ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீஸ்துதி.

"அளவிடவரிய ப்ரஸித்தமான மஹிமை பொருந்தியவளும், மங்களத்துக்கும் மேலான மங்களத்தைச் செய்பவளும், தன்னுடைய காந்தி விசேஷத்தால் மதுவஸுரனின் நிரஸனத்தைச் செய்தவளும், ஸ்ரீமந் நாராயணனின் திருமார்பகத்தையலங்கரிப்பவளும், இகம் பரம் இரண்டிலும் நன்மையை விரும்புபவர்களுக்கு நன்மையே வடிவெடுத்தவளும், ரக்ஷிப்பதையே இயல்பாக உள்ளவளும், ஸ்ரீ என்று பெயர் கொண்டவளுமாகிய உம்மை வேறு கதியில்லாதவனான அடியேன சரணமடைகின்றேன்......

"வர்ணிக்க முடியாத கருணையின் எல்லை நிலமாயும், ஸ்திரமான ஆனந்த ஸ்வரூபிணியாயும், உபநிஷத்துக்களுக்கு கற்பக மாலைபோல் அலங்காரமானவளும, மது என்னும அசுரனை ஜயித்த பகவானுக்கு ஆச்சர்யமான ஐச்வர்யரூபிணியாயும,காமதேனுவைப் போல ஸகலருடைய மனோரதங்களையும் அளிப்பவளும் மங்களங் களை அளிப்பதில் எடுக்க எடுக்கக் குறையாத மாநிதி போன்று உள்ளவளுமான இபபடிப்பட்ட மகிமை பொருந்திய ஜகன்மாதா எப்போதும் எனது மனத்தில் வசிப்பாளாக!"

11. தயாசதகம்.

இதுவும் ஸ்வாமி தேசிகன் பணித்தது. "உணர்வு என்கிற தாய்ப்பாலை அளிப்பவளும், கருணையே வடிவெடுத்தது போன்றவளும், உலக மனைத்துக்கும் அன்னையும், திருமலையப்பனுக்கும் ச்ரேயஸ்ஸைக் கொடுப்பவளுமான பிராட்டியைச் சரணம் அடைகின்றேன்" என்று தொடங்குகிறார். இந்த தயாதேவி, சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேசு என்னும் குணங்களைத் தனக்குப் பின் தொடரும் ஊழியர்களாகவும், ஜ்ஞானம் என்னும் குணம் தனக்கு முன் கையில் விளக்கைவைத்துக்கொண்டு வெளிச்சம் காட்டும் வழிகாட்டியாயும் கொண்டவளாக வர்ணிக்கப்படுகிறாள். தயாதேவியின் விளையாட்டுகளாலே பகவான் தனது ஸ்வாதந்த்ரியத்தை யிழந்து, அபராதிகளான சத்துருக்களுக்குத் தண்டன மார்க்கத்தைக்கூட நற்கதியை விளைவிப்பதாகச் செய்கிறானாம்; க்ஷமையின் வசமாக அவன் இருப்பதே இதற்குக்காரணம். குஹன், சுக்ரீவன், சபரி, குசேலர், கூனி, இடைப்பெண்கள், மாலாகாரர் ஆகியோருடைய தாழ்வையும், பகவானின் மேன்மையையும் தயாதேவி தனனுடைய அபரிமிதமான பிரவாஹங்களாலே நிரப்பி பலாத்காரமாய் ஸமமாக்குகிறாளாம்: அவளே பகவானுடைய திருவுள்ள ஸ்வரூபமாய்விடுகிறாள்.

12. மும்மணிக்கோவை.

இதுவும் ஸ்வாமி தேசிகனின ப்ரபந்தம். இதன் முதல் பாட்டே நமது கவனத்தைக் கவரும் அழகைக் காணுங்கள். "அருள் தரும் அடியவர்பால் மெய்மையைவைத்து, தெருள்தர நின்ற தெய்வ நாயகா! நின் அருள் எனும் சீர் ஓர் அரிவையானதென நிற்கும்! எமக்கு இருள் செக ஓர் இன் ஒளிவிளக்காய் நிற்கும்; மணிவரையன்ன நின் திருவுருவில் அணியமர் ஆகம் அலங்கலாய் இலங்கி நிற்கும்; நின் படிக்கெல்லாம் தன்படி ஏற்க நிற்கும்; அன்புடன் உன்னோடு அவதரித்தருளி, வேண்டுரை கேட்டு, மீண்டு அவை கேட்பித்து, ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று, தன்னடி சேர்ந்த தமர் உனையணுக, நின்னுடன் சேர்ந்து நிற்கும்; நின் திருவே அருள் தரும்!" இந்தப் பாசுரத்தில் பிராட்டியின் புருஷகார வைபவம் முழுதும் பொதிந்து இடப்பதைக் காண்கின்றோம். "ஸ்ரீ" என்னும் சப்தத்திற்குக் கூறப்படும் ஆறு அர்த்தங்களும் இதனில் அடங்கியிருக்கின்றன. இவ்வியாசத்தின் முடிவில் இந்த அம்சங்களை ஆராய்வோம்.

13. ஸ்ரீவசனபூஷணம்

பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசனபூஷணத்தில் முதல் ப்ரகரணத்தில் புருஷகார வைபவத்தைப்பற்றிப் பேசுமிடத்தில் பல அரிய அர்த்த விசேஷங்களை வெளியிட்டுள்ளார். குற்றமே வடிவான சேதநர்களையும் எம்பெருமானுடைய விஷயீகாரத்துக்கு இலக்காக்கி, அங்கீகரிப்பிக்கின்ற புருஷகாரபூதையானவள் அருளன்னையான பிராட்டியே. பகவானிடம் அவள், "இந்தச் சேதநனுடைய குற்றங்களைக் கணக்கிட்டுக் கதவடைத்தால் இவனுக்குப் போக்கிடமுண்டோ? பராங்முகமாய்த் திரியுமவனை வேணுமாகில் சாஸ்த்ரப்படி சிக்ஷியும்; பக்தியுடன் வந்துவிட்ட இவனிடத்தில் க்ருபையைக் காட்டிக் காத்தருள்வீர்!" என்று நமக்காகப் புருஷகாரம் செய்தருளுகிருள்.

சேதநனிடத்திலோ பரமக்ருபையுடன், "ஐயோ! இவனுடைய துர்ப்புத்தி நீங்கி, அனுகூல புத்தி உண்டாக வேணுமே!" என்று தீமனங்கெடுத்து, நல்வழிப்படுத்த முற்படுகிருள். அதனுல் பகவானை ஆச்ரயிக்க வேண்டும் என்ற ருசி நமது மனத்தில் உதிக்கின்றது. சுழல் காற்றுப்போலே க்ஷணந்தோறும் சுழன்று வருகின்ற நெஞ்சிற்பிறந்த அந்த ருசி, மறுக்ஷணமே மாறிவிடக் கூடுமாதலால், அப்படி மாறுவதற்கு முன்னமே, அந்தருசி பிறந்த க்ஷணத்திலேயே, ஆச்ரயிக்கும்படி ஸௌகர்யமாயிருப்பதற்காகவே எம்பெருமானேடே பிராட்டி நித்யஸம்பந்தம் பெற்றவளாயிருக்கிருள்.

பிராட்டியின் புருஷகாரத்வத்திற்கு இன்றியமையாதவை மூன்று முக்கிய குணங்கள்; அவை முறையே க்ருபை, பாரதந்த்ரியம், அநந்யார்ஹத்வம். பிராட்டி ஸீதாதேவியாகத் தோன்றிய போது ஸ்ரீராகவனிடமிருந்து மும்முறை பிரிந்து, ஷை மூன்று குணங்களையும் ப்ரகாசிப்பித்தருளினுள் என்பதைச் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லும் ஸ்ரீராமாயணம் விளக்குவதாக ஸ்ரீவசனபூஷணம் அறுதியிடுகின்றது.

தேவமாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத்தான் இலங்கையில் சிறை புகுந்தாள்; ராவணன் பிரித்தான் என்பது வ்யாஜமே! தன்னை ஹிம்ஸித்த ராக்ஷஸிகளையும் வானரஸேனையின் சித்ரவதத்திலிருந்து காப்பாற்றினுள். பிராட்டி க்ருபாதிசயத்தை வெளியிட்ட விதம்தான் என்னே!

கர்ப்பிணியான பிராட்டியை லோகாபவாத பரிஹாரத்திற்காகக் காட்டுக்கு அனுப்பினுரே பகவான், அப்போது உயிரையே

விடக்கூடிய அளவற்ற துன்பம் நேர்ந்திருந்த போதிலும், அவள் அங்ஙனம் செய்ய முற்படாது, பர்த்தாவின் நினைவாகவே உயிரை வைத்துக்கொண்டு, பாரதந்த்ரியத்தை வெளிப்படுத்தினாள். பகவான் ஒருவனே ஸ்வதந்த்ரன்; பிராட்டியும் அவனுக்கு உரிமைப்படுகை என்கிற பாரதந்த்ரியத்தைக் கடைப்பிடிப்பது அவளுக்கு ஸ்வரூபம்.

உத்தர ஸ்ரீராமாயணத்தில் கூறப்படும் பிராட்டியின் பூதல ப்ரவேசம், அநந்யார்ஹத்வமாகிற குணத்தைப் பிரகாசப்படுத்துகிறது. "பெருமாளையன்றி மற்றெவரையும் அடியேன் மனத்தினாலும் சிந்தியாதவளாயின், இப் பூமிப் பிராட்டி எனக்கு இடங்கொடுக்கக் கடவள்" என்று ஸீதாப்பிராட்டி சபதம் செய்ததும், பூமிப் பிராட்டி திவ்ய ஸிம்ஹாஸனத்துடன் தோன்றி, அவளை அதன்மீது அமரச் செய்து பூமிக்குள் அழைத்துச் செல்கின்றாள். அநந்யார்ஹ சேஷத்வமாவது, அவனுக்கன்றி மற்றொருவனுக்கும் உரிமைப்படா தொழிகை.

இப்படி, இம்மூன்று குணங்களையும் வெளியிடுகைக்காகவே மூன்று பிரிவும் நேர்ந்தது. இப்படிப்பட்ட குணங்களோடு கூடிய பிராட்டியின் புருஷகாரத்வம் அவள் பகவானிடமிருந்து பிரிந்திருக்கும்போதும் வெளியாகிறது; கூடியிருக்கும்போதும் வெளியாகிறது. ராக்ஷஸிகளைக் காப்பாற்றியதும், காகாஸுரனைக் காப்பாற்றியதும் முறையே உதாரணங்களாகும்.

ஸ்ரீவசனபூஷண சாஸ்த்ரம் பிராட்டியின் புருஷகார வைபவத்தை விளக்கும் விவரணம் அதிசயிதமானது. அதனை ஸாரமாகக் காண்போம்.

(1) கர்மாநுகுணமாகச் சேதநன் பராங்முகனாயிருக்கிறான். அத்தகையவனுக்கு பகவத் ஆச்ரயணத்திலே ருசி பிறக்கும்படிச் செய்கிறாள்.

(2) சேதநனுடைய குற்றங்குறைகளைப் பார்த்து பகவான் சீறாது, அவனை அங்கீகரிக்கும்படிச் செய்கிறாள்.

(3) இப்படி சேதநன், ஈச்வரன், இருவரையும் பிராட்டி திருத்துவது உபதேசத்தாலே. [இதனை விரிவாக "ஸ்ரீராமாநுஜன்" 36-வது இதழில் 7-10 பக்கங்களில் ஸ்ரீ ப்ர.அ. ஸ்வாமி ஸம்வாத ரூபமாகக் காட்டியுள்ளார்.]

(4) பிராட்டியின் உபதேசத்தைப் பெற்றபின் சேதநன் கர்மங்களுக்கு வசப்படமாட்டான். அதுபோல், ஈச்வரனும் சேதநனுடைய க்ர்மங்களை ஒரு பொருளாய் மதியான்.

(5) அநாதி துர்வாஸனை காரணமாக சேதநன் உபதேசத்தாலே திருந்தாமற்போனால் அவனை அருளாலே திருத்துவள்.

(6) கேட்பாரற்ற ஸ்வாதந்தர்யத்தினால் ஈச்வரன் உபதேசத்துக்குச் செவிசாய்க்காவிட்டால், அவனை அழகாலே திருத்துவள்.

(7) புருஷகாரத்துக்கு வைபவமாவது — சேதநனுடைய தோஷத்தையும் குணஹாநியையுமே உபஹாரமாகக் கொண்டு —குற்றத்தை நற்றமாகக்கொண்டு — வாத்ஸல்ய குணத்தை விளங்கச் செய்து அவனை அங்கீகரிப்பதேயாம்.

(8) ஏதேனுமொரு காலத்திலே, ஒரு ஸம்ஸாரி சேதநனுக்கு எம்பெருமானை ஆச்ரயிக்க ருசி பிறந்தால், அந்த க்ஷணத்திலேயே ஆச்ரயிக்கும்படி ஸௌகர்யமாயிருப்பதற்காகவே எம்பெருமானோடு பிராட்டி நித்ய ஸம்பந்தமுடையவளாயிருக்கிறாள். இதனால்தான் ப்ரபத்திக்கு தேச, கால, ப்ரகார, அதிகாரி, பல, நியமமில்லை என்று கூறப்படுகிறது. ருசியொன்றே ப்ரதானம்.

(9) பிராட்டியும் பகவானும் சேதநனுக்குத் தாயும் தகப்பனுமாயிருக்கையாலே, அவனுடைய நன்மை தீமைகளிரண்டும் தங்களுடையதாம்படியான, ஒழிக்கவொழியாத உறவுமுறை ஏற்படுகிறது. அத்தகைய நிலையில் திவ்யதம்பதிகளின் க்ருபா வாத்ஸல்யங்களுக்குக் குறைவு வராது காப்பதுதான் பிராட்டியின் புருஷகாரத்தின் சிறப்பாகும்.

இது போன்ற நவரத்நங்களை நிறைத்துச் சமைத்ததொரு ரத்நபூஷணமே ஸ்ரீவசனபூஷணம் என்ற ப்ரபந்தரத்நம். பூர்வாசார்யர்கள் உபதேசித்த ஸம்ப்ரதாய அர்த்த விசேஷங்களை நிதியாய் நிறைத்து அருளிச் செய்திருக்கிறார் பிள்ளைலோகாசார்யர். ஸம்ஸாரிகளின் இழவை ஸஹிக்கமாட்டாது, பரமக்ருபையுடன், அவர்களை உய்விக்கும்பொருட்டு அவர் அருளிச்செய்துள்ள ப்ரபந்தங்களுள் ரத்நம் போன்றது அது என்பது தெளிவு.

14. கனகதாரா ஸ்தோத்ரம்

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள் (ஆதிசங்கராசார்யர்) அருளிச் செய்துள்ள கனகதாரா ஸ்தோத்ரமானது, ஸ்ரீஸூக்தம், ஸ்ரீவிஷ்ணு புராண ஸ்ரீஸ்துதி இரண்டையும் அனுஸரித்ததாகக் காணப்படுகிறது. சில அம்சங்களைக் குறிப்பிடுவோம்.

"ஸ்ரீமஹாலக்ஷ்மியினுடைய கடாக்ஷவீக்ஷண்யம்தான் விஷ்ணுவுக்குக்கூட ஸகல அபீஷ்டங்களையும் அளிக்கவல்லதாக இருந்து வருகிறது. அத்தகைய மஹிமை வாய்ந்த லக்ஷ்மீ கடாக்ஷம் ஸகல மங்களத்தையும் அளிக்க வேண்டும்.

"ஸ்ரீநிவாஸனுடைய திருமார்பில் விளங்கும் ஸ்ரீயினுடைய அழகானது நீருண்ட மேகத்தின் மத்தியில் தோன்றும் மின்னற் கொடி போன்றுள்ளது. அந்த அழகிய ஆக்ருதியை வர்ணிக்க வார்த்தையுமுண்டோ? ப்ருகு புத்ரியான அவள் அகில உலகுக்கும் அன்னை. அம்மஹாஸ்ரீயேமூர்த்தி ஸகல மங்களங்களையும் அளிப்பாளாக!

"கஜலக்ஷ்மியாய் விளங்கும் ஸமுத்ரராஜ புத்ரியான பிராட்டி, திக் கஜங்களால் தங்கக் குடத்தினுடைய முகவழியாக அபிஷேகம் செய்யப்பட்ட கங்காஜலத்தால் பரிசுத்தமான அங்கங்களுடன் கூடியவளாய் ஜகன்மாதாவாக, மஹாவிஷ்ணுவின் தர்மபத்நியாக இருப்பதால், ப்ராதக் காலத்தில் கண் விழித்ததும் பிரதிதினமும் அவளை நமஸ்கரிக்கின்றேன்.

"ப்ரக்ருதிம் விக்ருதிம்" என்று ஆரம்பிக்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்ம்யஷ்டோத்தரசத ஸ்தோத்ரத்திற்கு த்யான ச்லோகமாக விளங்கும் "ஸரஸிஜ நிலயே" என்ற ச்லோகமும் சங்கராசார்யர் இயற்றிய கனகதாரா ஸ்தோத்ரத்தில் இடம்பெற்றுள்ளது. அதன் பொருளாவது:—

"தாமரைப்பூவில் நித்யவாஸம் செய்யும் லக்ஷ்மீ தேவியே! (தாமரைக் கண்ணுடைய லக்ஷ்மி தேவியே!—என்றும் ஒரு பாடமுண்டு). திருக்கைகளில் தாமரை தரித்திருப்பவளே! நறுமணமிக்க மாலையாலும் அழகிய வெண்பட்டாலும் சோபிக்கிற அன்னையே! ஜகத்தினுடைய உற்பத்தி—விநாசம், வித்யை—அவித்யை, கதி—அகதி என்ற ஆறு தத்துவங்களையும் அறிந்த ஸர்வஜ்ஞையே! ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ப்ரியமான வல்லபையே! அனைவருடைய மனோதத்துவத்தை அறிய வல்லவளே! ஸகல உலகங்கட்கும் ஐச்வர்யத்தை அளிப்பவளே! அனுக்ரஹம் செய்வாயாக!,'

15. ஸ்ரீ லக்ஷ்மீஸஹஸ்ரம்.

மஹாவித்வான் அரசாணிபாலை வேங்கடாசார்ய ஸ்வாமி அருளிச் செய்த லக்ஷ்மீஸஹஸ்ரத்தில், பிராட்டியின் பெருமையை விளக்கியிருக்கும் ச்லோகங்களில் ஒன்று, கம்பனைப் பின்பற்றியிருக்கும் அழகு கவனிக்கத்தக்கது. ராமபாணத்தால் தாக்கப்பட்டு வீழ்ந்த வாலியின் வாயினின்று "ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்த பின்னை, [illegible]கைத்தனைபோலும் செய்கை!" என்ற சொற்கள் வெளிப்[illegible]கின்றன. "பிராட்டி உடனிருந்தால் நீ இத்தகைய இரக்கமற்ற

செயல் புரிந்திருக்கமாட்டாய். அவளது பிரிவு காரணமாகவே நீ செய்வதறியாது திகைத்து இங்ஙனே செய்யலாயிற்று!" என்கிறுன் கம்பனுடைய மௌலி.

லக்ஷ்மீஸஹஸ்ரச்லோகம் கூறுகிறது: "பெரிய பிராட்டியாரே! பெருமாள் காருணிகர் என்று பேர் பெற்றிருந்தாலும் அவரது கருணை உமது அதினமே என்று சொல்லத் தட்டுண்டோ? உம்முடைய ஸம்ச்லேஷம் (சேர்க்கை) அவருக்குக் காருண்யத்தை ஊட்டுகிறது என்றும், விச்லேஷம் (பிரிவு) அதனை ஒட்டுகிறது என்றும் ப்ரத்யக்ஷமாகக் கண்டுள்ளோம். முன்பு, நீர் ஜனகராஜ புத்ரியாக மிதிலையில் வாழ்ந்த காலத்தில், அவர் தாடகையைக் கொன்ருர். நீர் இலங்கையில் சிறையிருந்தபோது, அவர் வாலியைக் கொன்ருர். ஆனல் மஹாகொடிய பாதகனுகிய காகாசுரனை உமது அருளால் காத்தருளினர். ஆக, பெருமாள் உம்மோடு கூடியிருந்த காலத்திற் செய்த செயலையும், உம்மைப் பிரிந்திருந்த காலத்தில் செய்த செயலையும் நோக்குமிடத்து, உமது ஸாமீப்யத்தின் ப்ரபாவம் வெளியாகிறது! அருளன்னையே!

"ஸ்ரீ" சப்தத்தின் ஆறு பொருள்கள்

"ஸ்ரீ" என்ற திருநாமத்தின் ஒப்புயர்வற்ற பெருமையை "ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி! ப்ரூம, கதம் த்வாம் வயம்?" என்று ஆளவந்தாரும், "ஸ்ரீரஸி யத:" என்று பட்டரும் வெளியிட்டுள்ளார்கள். ஸ்வாமி தேசிகன் மும்மணிக் கோவையில் இது விஷயமாய்க் கூறியுள்ளதை முன்னமே குறிப்பிட்டுள்ளோம். அதேபோல் துவமச்சுருக்கு என்ற தேசிகமாலைப் பாசுரத்திலும் ஸ்ரீ சப்தத்தின் ஆறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன:—

"அருவுருவானவை தன்னை அடைந்திட, தான் அடைந்து, வெருவுருகேட்டு, அவை கேட்பித்து, அகற்றும் வினைவிலக்கி, இருதலை அன்புதனைல் எமை இன்னடி சேர்த்து அருளும் திருவுடனே திகழ்வார் செறிந்தார் எங்கள் சிந்தையுளே!"

அதாவது—(1) "சேதனம் அசேதனம் ஆகிய அனைத்தும் தன்னை அடைந்து நிற்க, (2) பிராட்டியாகிய தான் ஸர்வேச்வரனை அல்லது ஸகல வஸ்துக்களை அடைந்து, (3) சேதனர்கள் பயத்தால் கூறும் வார்த்தைகளைக் கேட்டு, (4) அவ்வார்த்தைகளை எம்பெருமானைக் கேட்பித்து, (5) ஈச்வரனேடு சேரவொட்டா சேதநர்களை விலக்கிவைக்கும் கர்மங்களைக் கழித்து, (6) எம்பெ மான் சேதநர் ஆகிய இரண்டு பக்கங்களிலுமுள்ள அன்பி ஸம்ஸாரிகளாகிய எம்மை எம்பெருமானுடைய இனிய திரு

களில் சேர்த்தருளுபவளான பிராட்டியுடனே ப்ரகாசிப்பவரான எம்பெருமான் எங்கள் மனத்துள் நித்யவாஸம் செய்தருளினுர்''— என்பது.

"ஸ்ரீ" சப்தத்தின் ஆறு வ்யுத்பத்திகளாவன: (1) ஸ்ரீயதே —ஸகல சேதனர்களாலும் புருஷகார பூதையாக ஆச்ரயிக்கப் படுபவள். (2) ச்ரயதே — ஆச்ரிதருடைய காரியங்களை நிறை வேற்றுவதற்காக எம்பெருமானை ஆச்ரயித்திருக்குமவள் (3) ச்ருணோதி— ஆச்ரிதர்களுடைய விண்ணப்பங்களை செவிகொடுத்துக் கேட்குமவள். (4) ச்ராவயதி—அவற்றை சமயத்திலே எம்பெரு மானுக்குக் கேட்பிக்குமவள். (5) ச்ருணாதி—ஆச்ரிதர்களுடைய அபராதங்களை, இல்லை செய்யுமவள். (6) ச்ரீணாதி—தனது திருக் கல்யாண குணங்களாலே உலகத்தை உகப்பிக்குமவள்.

எம்பெருமானுர் காட்டிய வழி.

"பிராட்டியின் குணங்கள் பகவத் குணங்கள் போலவே ஒரு வகையாகவும் எண்ண முடியாதவை. அவள் ஜகன்மாதாவாகை யால் ப்ரஜைகள் பக்கலிலே வாத்ஸல்யமே மிக்கிருப்பவள். தான் எது செய்ய நினைத்தாலும் இடையூறின்றிச் செய்து தலைக்கட்டும் இயல்புடையவள்—கண்ணழிவற்ற புருஷகாரம் புரிந்தருளுபவள். ஸர்வலோகசரண்யனுலே கைவிடப்பட்டவர்களுக்குங்கூட தான் புகலாயிருக்குமவள். புகலொன்றில்லா அடியேன் அப்பிராட்டி யின் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்!" என்று பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தி பண்ணினுர்.

"தாயே! எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளிலே எனக்கு உண்மையான சரணுகதி நிஷ்டை விளைவதற்காக உன்னைத் தஞ்சமாகப் பற்றுகின்றேன். அந்த சரணுகதியினுல் நான் பெற விரும்பும் பலன், ஒழிவில்காலமெல்லாம் உடனுய் மன்னி வழுவிலா அடிமை செய்கை தவிர வேறென்றுமில்லை. ஸகல ப்ரகாரங்களுமான கைங்கர்யங்களைச் செய்யப் பெறவேண்டும்; அது ஸித்திக்காவிடில், கைங்கர்யம் செய்ய வேணுமென்ற ருசி யாவது ஏற்பட வேண்டும்."

இந்த ப்ரார்த்தனைக்குப் பெரிய பிராட்டியாரின் ப்ரதிவசனத் [தைக்] காணுங்கள்: "அப்படியே உமக்கு ஆகக்கடவது. அந்த [சரணா]கதியாலேயே உமது அபிமதமெல்லாம் அழகாக ஸித்திக்கப் [போகி]றது! இப்போது நீர் செய்யும் சரணுகதியினுல் ஸித்திக்கும்

பலனானது உம்மளவோடு நில்லாது பரம்பரையாக உம்முடைய குடல் துடக்கு உடையாரெல்லாரிடத்திலும் இது பலித்ததாகக் கடவது!'' என்று பிராட்டி அநுக்ரஹித்தாள்.

எம்பெருமானாருடைய ஸாக்ஷாத் ஸம்பந்தமில்லாத நம்போல்வார்க்கு பரம்பரா ஸம்பந்தம் குறைமற்றதாகையாலே, அது கொண்டு, பேறு தப்பாது என்று உறுதி கொள்வோம். திவ்ய தம்பதிகள் எம்பெருமானார்க்கு அளித்த வரம் இதுவே.

இதனை ஸ்ரீமணவாள மாமுனிகள் யதிராஜ விம்சதியில், 18-வது ச்லோகத்தில், எம்பெருமானாரைப் பார்த்துக் கூறுகிறார்:—''அபராதிகளான சேதநர்களுக்கு எம்பெருமானுடைய க்ஷமையே புகலென்று சாஸ்திரங்களெல்லாம் ஒருமிடறாகச் சொல்லியிருந்தாலும் அடியேன் போல்வார் அந்த எம்பெருமான் பக்கலிலே சென்று அவனுடைய க்ஷமையை வேண்டி வருந்தவேண்டியதில்லையே! தேவரீர் ஒரு பங்குனி யுத்தரத் திருநாளிலே, திவ்ய தம்பதிகளின் திருமுன்பே கத்யம் அநுஸந்தித்துப் பிரார்த்திக்கையில் அப்போது தேவரீருக்குக் கிடைத்த வரமொன்று ப்ரஸித்தமாயிராநின்றது. அதாவது உமக்கும், உம்முடைய ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களுக்கும், ஒருகுறையில்லை காணும் என்ற திருமுகப் பாசுரம். அது உண்டான பின்பு எம்போல்வார் எம்பெருமான் பக்கலிலே சென்று துவள வேண்டிற்றுண்டோ?''

இதனையே, ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகனும் நியாஸதிலகத்தில் இரண்டு ச்லோகங்களினால் அதிரமணீயமாக அருளிச் செய்திருக்கிறார். ஒரு மகாராஜனிடத்திலே ஒரு அமாத்யன், ஸேவை புரிந்து பொருளைத் திரட்டி, தன் பரம்பரையினருக்கு நிதியாய் வைக்கிறான். இந்த லௌகிக த்ருஷ்டாந்தத்தை எடுத்துக்கொண்டு, மஹாராஜ ஸ்தானத்தில் ஸ்ரீரங்கநாதனை வைத்து, அமாத்ய ஸ்தானத்தில் ஸ்ரீராமாநுஜரை வைத்து, அவரது வம்ச பரம்பரையில் தோன்றின ப்ரஜையின் ஸ்தானத்தில் தம்மை வைத்துப் பேசுகிறார் ஸ்வாமி தேசிகன். ஸ்ரீராமாநுஜ ஸம்பந்தமொன்றே தமக்குப் பேற்றுக்குடல் என்று நிஷ்கர்ஷிக்கிறார்.

ஆக, நாம் உய்வதற்குறுப்பாகவே அவதரித்த சரணாகதி கத்யத்தின் பெருமை ஒப்பும் உயர்வும் அற்றதே!

இனி, மந்த்ர ராஜமென்ற திருமந்த்ரத்தில் ஸ்ரீஸம்பந்தம்.

பிள்ளைலோகாசார்யர் அருளிச் செய்த முமுக்ஷுப்படியில் திருமந்த்ர ப்ரகரணத்தில், ப்ரணவத்தில் முதற் பதமான அகாரத்தின பொருளை நிரூபித்து வருகையில், ஸர்வ ரக்ஷகனான எம்பெருமான் அகாரத்திற்குப் பொருள் என்றும், இந்த அகாரத்தில் லக்ஷ்மீ ஸம்பந்தமும் அநுஸந்திக்கப்படவேண்டுமென றும் எடுத்துக் காட்டுகிறார். பிராட்டியைத் துணைவியாகக் கொண்டுதான் பகவான் ரக்ஷிக்கிறான் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிராட்டியோடு இணைபிரியாதவனான நாராயணன்தான் அகாரார்த்தமாகப் கொள்ளப்படவேண்டுமென்று விளக்குகிறார். காருண்யமே வடிவெடுத்தவளான பிராட்டியின் புருஷகாரத்தினால் தான் நமக்கு உய்வு.

ஸ்ரீ ஸேனாபதி ஜீயரின் வாக்கை ஸ்மரிப்போம்: 'அவன்மார்பு விட்டுப் பிரியில் இவ்வக்ஷரம் விட்டுப் பிரிவது.' அதாவது, எம்பெருமான் திருமார்பிலே அவள் நித்ய ஸம்பந்தம் பெற்றிருப்பதேபோல, அகாரத்திலும் நித்ய ஸம்பந்தம் பெற்றிருக்கிறாள்.

பிராட்டிக்கு ஈச்வர வாசகமான அகாரத்தில் அந்வயமிருப்பதேபோல், சேதநவாசகமான மகாரத்திலும் அந்வயமுண்டு. அதாவது, ரக்ஷககோடியிலும் அந்வயமுண்டு, ரக்ஷ்யகோடியிலும் அந்வயமுண்டு. [விவரணம் ஷை முமுக்ஷுப்படி க்ரந்தத்தில் காண்க.]

இனி, மந்த்ர ரத்நமென்ற த்வயத்தில் பிராட்டி வைபவம்.

நம் ஆசார்யர்கள் திருமந்திரத்திற்காட்டிலும் த்வயத்தில் தான் அதிகமாக ஊன்றியிருப்பராம்; "திருமந்திரத்திலே பிறந்து, த்வயத்திலே வளர்ந்து, த்வயைக நிஷ்டராவீர்!" என்று ஆசாஸிப்பர்களாம்.

இரண்டு பகுதியாக உள்ள இந்த த்வயத்தின் முதற்பகுதியினால் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகப்பற்றி எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப்பற்றுவதும், பிற்பகுதியினால், பெரிய பிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே கைங்கர்யம் பண்ணவேணும் என்று ப்ரார்த்திப்பதும் கூறப்படுகிறது. ஒரு வகையாலும விபலமாக மாட்டாத புருஷகாரம் பிராட்டியினுடை து.

உலகில் புருஷகாரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் ண்டும்; எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ விஷயத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்கவேண்டியது

ஒன்று; யாரிடத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவரிடத்தில் தம் வாக்கு வெற்றி பெற்றே திரும்படியான வால்லப்யமிருக்க வேண்டியது மற்றொன்று. இவ்விரண்டும் பிராட்டியிடத்தே புஷ்கலம். பிராட்டி எப்பொழுதும் அகலாது உடனிருந்து நோக்குகையாலே, ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ரியத்தைக் கண்டோ தன்னுடைய அபராதங்களை நினைத்தோ, சேதநன் அஞ்சவேண்டிய ப்ரஸக்தியில்லை. பிராட்டியின் புருஷகாரம் அவச்யம் வேண்டியதே யென்பது விபவாவதார சரித்திரங்களாலும் தெளிவாகின்றது.

புருஷகாரமாகச் சொல்லப்பட்ட பிராட்டியும், ரக்ஷகனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானும்கூட கைவிட்டாலும், திருவடிகள் கைவிடமாட்டா என்பது மந்த்ர ரத்நத்தின் தாத்பர்யம். [விவரணம் முமுக்ஷுப்படி த்வயப்ரகரணத்தில் கண்டுகொள்வது.]

"நாச்சியார் விழி"

ஒரு சமயம் அழகிய மணவாளன் நாச்சியார் திருக்கோலம் பூண்டு பவனி வருகையில் பட்டர், "பெருமாளே! உம்மால் நாச்சியார் விழி விழிக்க முடியாதே!" என்று விண்ணப்பம் செய்து கொண்டதாக ஒரு ஐதிஹ்யம். அதாவது, அன்னையின் அருள் நோக்கே தனிச்சிறப்பு வாய்ந்தது. ஸ்ரீகுணரத்ந கோசத்தில் அதற்கு ஆறு விசேஷணங்களிடுகிறார் பட்டர். அன்னையின் கடாக்ஷ வீக்ஷணங்கள் (1) பேரின்பமே வடிவெடுத்தவை. (2) பிராட்டியின் கடைக்கண்ணோக்கின் ஒரு மூலையிலே உபயவிபூதி நாயகனு[ம்] அமிழ்ந்து போகிறான். (3) பரிபூர்ண ப்ரேமம் கசிந்தவை. (4) [...] கரையுமழியப்பெருகும் க்ருபாப்ரவாகத்தை நம்போன்ற [...] நிலத்திலும் ஏறிப் பாய விடுமவை. (5) கடாக்ஷலேசம் பட[...] தோறும் பிரமன் முதலான நிர்வாஹகர்கள் தோன்றும்படியிரு[...] மவை. (6) செல்வச்சிறப்பையுண்டாக்கவல்லவை.

கருணையினாலே அலைமோதுகின்ற மிகப்பெரிய கடாக்ஷ வீக்ஷ[ண] தாரைகளை யுடைத்தான திருமுகமண்டலத்தை யுடையவ[ள்] பிராட்டி; அந்த திவ்ய திருமேனி-மதுவை நிச்சலும் பருகிப் பொ[...] வண்டுகள் போன்றுள்ளன : எம்பெருமானுடைய திருக்கண்[கள்] பகவானுக்குப் புண்டரீகாக்ஷத்வம் ஸித்திப்பதற்குப் பிராட்[டியை] இடைவிடாது கண்ணால் பருகுவதே காரணம். இது [...] திருவுள்ளம்.

முடிவுரை.

நாம் முக்தி பெறுவதற்குரிய உபாயங்களில் திவ்ய[...] ளான பெருமாளையும் பிராட்டியையும் ஸ்துதி செய்வ[...] மிகச்சிறந்த உபாயமாகத் தொன்று தொட்டு மஹர்[...]

மகாசார்யர்களாலும் கொள்ளப்பட்டிருக்கின்றது. அறிவிலிகளான நாம், அறிவிற் சிறந்த ஆரியர்கள் அருளிய ஸ்ரீ ஸூக்திகளைக்கொண்டு ஸ்துதிசெய்தால் எம்பெருமானுடைய திருவுள்ளம் விரைவில் கனியும். இப்படிப்பட்ட நன்மையை நாம் பெற்று வாழ்வதற்காகவே ரிஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் பரம கருணையோடு அமுதிலுமாற்றவினிய பலபலஸ்தோத்ரங்களை அநுக்ரஹித்தருளியுள்ளார்கள்.

ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வாருடைய அருளிச்செயலுடன் இவ்வியாஸத்தை முடிப்பது பொருத்தமாகும்.

அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா !
நிகரில்புகழாயுலகம்மூன்றுடையாய் என்னையாள்வானே !
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே !
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே.

— திருவாய்மொழி, 6-10-10. (3335)

நமது உஜ்ஜீவனத்தைக் கருத்திற்கொண்டே ஸ்வாமி எம்பெருமானார் திவ்யதம்பதிகளின் ஸந்நிதானத்தில் சரணாகதிகத்யத்தை விண்ணப்பம் செய்தருளியதுபோலவே, அவருக்குப் பல காலம் முன்பே, நம்மாழ்வார் த்வயாநுஸந்தானமாக, சேதந உஜ்ஜீவநார்த்தமாக, இங்ஙனம்பாசுரமிட்டு அருளிச்செய்திருக்கிறார். மஹான்கள் காட்டிய வழியைப்பின்பற்றி உய்வு பெறுவோமாக!

"ஜயந்தி சிந்தனைகள்"

பக்தன் ஆசிரியர் M. O. அழகியசிங்கராசாரி, B. Sc., B.L., அவர்கள் அளித்த **இணையற்ற உத்ஸாஹம்;**

ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி லோகத்திற்குப் பரமோபகாரமாக அளித்துள்ள **க்ரந்த ரத்நங்கள்;**

ஜகன்மோகினி சைத்ரிகர்கள் பற்பல சமயங்களில் தீட்டிய விசேஷ **ஒவிய மலர்கள்.**

இவை மூன்றும்சேர்ந்து,

அடியேனுக்கு இயல்பாக ஒரு சிறிதும் நாவீறு இல்லாதிருந்தும், பெரு...மாளுடையவும் பிராட்டியுடையவும் புகழைப் பேசும் தைர்யத்தை அளித்...ன. திவ்யதம்பதிகள், **பக்தன்** ஆசிரியரின் மனோல்லாஸத்தைக் கருத்திற்...காண்டு, தமது கருணையடியாக அடியேனுடைய பேனாமுனையிலும் பக்...ருதமான சொல்மாலைகள் வெளிவரும்படி அருள் சுரந்து, ஸ்ரீஜயந்திசிந்த...ள், ஸ்ரீராமஜயந்தி சிந்தனைகள், ஸ்ரீநிவாஸ ஜயந்தி சிந்தனைகள், ஸ்ரீதேவி... சிந்தனைகள் என்ற மாலைகளை உருவாக்கி, அணிவித்துக்கொண்டனர். ...மஹாஸுக்ருதத்தின் புண்யபலன் முழுவதும் ஸ்ரீ அழகியசிங்கரா...டையதே. பக்தன் வாழ்க! பக்தி வாழ்க!! — வை. மு. ஸ்ரீ.

111708



பக்த சரபங்கர் முக்தி பெறுதல்

குடக்கூத்து சிறிய திருமடல்

குடக்கூத்தில் ஈடுபட்ட
மாறன், கலியன் திருவடிகளே சரணம்.